இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 179 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 26 – வெள்ளிக்கிழமை 09 பிப்ரவரி 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 179 : Thiruvalluvar Year - 2055 - Thai 26 - Friday 09 February 2024 - Dak 12 Pages ₹ 5.00

# பயணம் வென்றது! களமும் வெல்லட்டும்!



## உங்களில் ஒருவன்

**என் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் மடல்.**

மேகங்களின் மீது மிதப்பது போன்ற உணர்வுடன், வானில் பறக்கின்ற விமானத்திலிருந்து இந்தக் கடிதத்தை எழுதத் தொடங்குகிறேன். ஸ்பெயின் நாட்டுப் பயணத்தை நிறைவு செய்து, நெஞ்சத்தில் தேங்கியிருக்கும் நினைவுகளுடன் தமிழ்நாட்டுக்குத் திரும்பும் நிலையில், தரையிறங்குவதற்கு முன்பாக என் இதயத்தில் உள்ளவற்றை அன்பு உடன்பிறப்புகளான உங்களிடம், உங்களில் ஒருவனான நான் இறக்கி வைத்துவிட வேண்டும் என்ற பேரன்பின் வெளிப்பாடே இந்த மடல்.

ஜனவரி 28 அன்று தொடங்கிய பயணத்திலிருந்து பிப்ரவரி 7ஆம் நாள் தாய்மண் திரும்பும் வரையிலான பயண நாட்களின் எண்ணிக்கை பத்து. அதில் கிடைத்திருப்பது தமிழ்நாட்டிற்கான முதலீடு எனும் முத்து. 2021 மே 7ஆம் நாள், 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' ஆட்சிப் பொறுப்பை ஏற்றது முதல், தமிழ்நாட்டின் தொழில்வளத்தைப் பெருக்கி, முந்தைய பத்தாண்டுகாலத்தில் படுபாதாளத்தில் தள்ளப்பட்ட பொருளாதார நிலையைச் சீர்செய்வதே திராவிட மாடல் அரசின் முதன்மை நோக்கமாக அமைந்தது. ஒரு டிரில்லியன் டாலர் என்ற பொருளாதார வளர்ச்சி இலக்குக் கேற்ப, வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்காக 2022ஆம் ஆண்டில் ஐக்கிய அரபு நாடுகளில் துபாய், அபுதாபி ஆகிய இடங்களுக்கான பயணம் வெற்றிகரமாக அமைந்தது. 2023ஆம் ஆண்டில் தெற்காசிய நாடுகளான சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளுக்குச் சென்று முதலீடுகளை ஈர்த்தேன். 2024 இன் தொடக்கத்தில் ஐரோப்பாவின் நான்காவது பொருளாதார நாடான ஸ்பெயின் நாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கத்துடன் பயணத்தை மேற்கொண்டேன்.

**பத்து நாட்கள் பயணத்திற்கிடையில் உடன்பிறப்புகளாம் உங்களின் நினைவு எழாத நாளுமில்லை, நேரமுமில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கிய பேரறிஞர் அண்ணாவும், அதனைக் கட்டிக் காத்து வளர்த்தெடுத்த முத்தமிழறிஞர் கலைஞரும் நமக்கு ஊட்டியுள்ள இலட்சிய உணர்வும் அதனால் உருவாகியுள்ள கொள்கை உறவும் எத்தனை ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்தாலும் மனதை விட்டு ஒருபோதும் நீங்காது.**

அந்த அண்ணாவின் நினைவு நாளை அமைதிப் பேரணியுடன் கடைப்பிடிக்கக் கோரி, ஸ்பெயின் நாட்டிலிருந்து நான் கடிதம் எழுதினேன். பயணத்தின் விவரங்களையும், அங்கு நடந்த நிகழ்வுகளையும், பயணத்தின் இலக்கில் அடைந்த வெற்றியையும் உடன்பிறப்புகளான உங்களிடம் பகிர்ந்து கொள்ளும் விருப்பத்துடன் ஆகாய வீதியில் பயணித்தபடி இந்த விரிவான கடிதத்தை எழுதுகிறேன்.

உங்களால் தமிழ்நாட்டின் முதலமைச்சரான நான், ஜனவரி 28 அன்று ஸ்பெயின் நாட்டில் தரையிறங்கியதும் அந்நாட்டிற்கான இந்தியத் தூதர் திரு.தினேஷ் பட்நாயக் அவர்கள் என்னை அன்புடன் வரவேற்றார். தமிழ்நாட்டின் தொழில்வளத்தைப் பெருக்குவதற்கான முதலீடுகளை ஈர்க்கத்தான் இந்தப் பயணம் என்ற நம் நோக்கத்தை அவரிடம் தெரிவித்தபோது, தொழில்துறையில் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளை அறிந்திருந்த இந்தியத் தூதர், நாம் மேற்கொண்டு வரும் திட்டங்கள் பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் நம்மிடம் சொன்னபோது வியப்பும் மகிழ்ச்சியும் ஏற்பட்டது.

ஸ்பெயின் நாட்டில் தரையிறங்கிய மறுநாளே முதலீட்டாளர் சந்திப்பிற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. அந்நாட்டின் முக்கியமான தொழில்நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் வருகை தந்திருந்தனர். அவர்களை வரவேற்றுப் பேசிய தமிழ்நாடு அரசின் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் தம்பி டி.ஆர்.பி.ராஜா, சென்னையில் ஜனவரி 7, 8 ஆகிய நாட்களில் உலகத் தரத்துடன் நடைபெற்ற உலக முதலீட்டாளர் மாநாட்டில் பல்வேறு நாடுகளின் புகழ்பெற்ற நிறுவனங்களுடன் போடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் அடிப்படையில் 6 லட்சத்து 64 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு தமிழ்நாட்டுக்குக் கிடைக்கவிருப்பதை எடுத்துரைத்து, நமது மாநிலத்தில் உள்ள தொழிற்கட்டமைப்புகளை விளக்கி, ஸ்பெயின் நாட்டு நிறுவனங்களும் தமிழ்நாட்டில் அதிகளவில் முதலீடுகளைச் செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

> **"தனிப்பட்ட என்னுடைய - உங்களுடைய மகிழ்ச்சியைவிட, இந்தியாவின் ஜனநாயகத்திற்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைத் தகர்த்து நாட்டைக் காப்பாற்றும் போது ஏற்படும் மகிழ்ச்சியே முதன்மையானது. ஸ்பெயின் பயணம் வெற்றிகரமாக அமைந்ததுபோல, தேர்தல் களத்தில் 'இந்தியா'வின் வெற்றியும் அமையும். தமிழ்நாடு வளம் காணும். இந்தியாவின் ஜனநாயகம் காக்கப்பட்டால்தான் தமிழ்நாடு உள்பட அனைத்து மாநிலங்களின் வளர்ச்சியும் நிரந்தரமாக அமையும். அதற்கான களம் நம்மை அழைக்கிறது. ஆயத்தமாவோம்!"**

**இந்திய தூதர் தினேஷ் பட்நாயக் உரையாற்றும்போது, "இந்தியாவிலிருந்து பல மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் இங்கு வந்து உங்களிடம் பேசியிருக்கலாம். முதலீடுகளைக் கோரியிருப்பார்கள். இந்தியாவின் முக்கியமான மாநிலங்களின் ஒன்றான தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, அவர்கள் உங்களுக்கு என்ன உத்தரவாதம் தருகிறார்களோ** அதனை நிச்சயம் நிறைவேற்றித் தருவார்கள். அந்த மாநிலத்தில் முதலீடு செய்துள்ள வெளிநாட்டு நிறுவனங்கள் இதனை உணர்கின்றன. அதனால், நிச்சயமாக நீங்கள் முதலீடு செய்யலாம்" என்ற நம்பிக்கையைக் கொடுத்தார்.

**முதலீட்டாளர் சந்திப்பிற்கு வந்திருந்த நிறுவனத்தினர் பலரின் முகங்களிலும் நம்பிக்கை பளிச்சிட்ட நேரத்தில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில் உங்களில் ஒருவனான நான் பேசத் தொடங்கினேன். "ஸ்பெயின் மக்களைப் போலவே தமிழர்களும் தங்கள் மொழி மீது மிகுந்த பாசம் கொண்டவர்கள். எங்கள் தமிழ் மொழியில் எழுதப்பட்ட திருக்குறள் என்கிற அறநூல் ஏறத்தாழ பல்வேறு மொழிகளில் வெளியாகியுள்ளது. ஐரோப்பா கண்டத்தில் நான்காவது பெரிய பொருளாதார வலிமை கொண்ட நாடாகத் திகழும் ஸ்பெயின் நாட்டில் ஃபார்ச்சூன் 500இல் உள்ள நிறுவனங்களில் 8 நிறுவனங்களைத் தன்னகத்தே கொண்டிருப்பதுடன், ஃபார்ச்சூன் 2000இல் உள்ள நிறுவனங்களில் 20 நிறுவனங்களைக் கொண்டிருக்கிறது. இந்த நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய முன்வரவேண்டும் என அன்புடன் அழைக்கிறேன். ஏற்கனவே தமிழ்நாட்டில் 9 ஸ்பெயின் கம்பெனிகள் முதலீடுகள் செய்திருப்பதால் நீங்களும் நம்பிக்கையுடன் முதலீடுகள் செய்யலாம்.**



**தமிழ்நாட்டில் முதலீடு செய்துள்ள ஸ்பெயின் நாட்டு நிறுவனமான ரோகா, எங்கள் அரசாங்கத்தின் ஒத்துழைப்பு பற்றி உங்களிடம் சொல்லியிருப்பார்கள். அவர்களுக்குத் தருவது போலவே அனைத்து ஒத்துழைப்பும் உங்களுக்கும் தரப்படும்" என்ற உறுதியினை வழங்கினேன். மொத்தம் 9 நிறுவனத்தினரைத் தனித்தனியாகச் சந்தித்து உரையாடியதன் பலனாகவும், தமிழ்நாடு அரசின் தொழிற்கட்டமைப்பின் மீது அவர்களுக்கு ஏற்பட்ட நம்பிக்கையின் அடிப்படையிலும் போடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்களின்படி 3 ஆயிரத்து 440 கோடி ரூபாய் அளவிலான முதலீடுகள் தமிழ்நாட்டிற்கு வரவிருக்கின்றன என்கிற மகிழ்ச்சியான செய்தியைக் கழக உடன்பிறப்புகளிடமும் தமிழ்நாட்டு மக்களிடமும் பகிர்ந்து கொள்கிறேன்.**

பனி மூட்டத்தை விலக்கிக் கொண்டு சூரியக் கதிர்கள் வெளிச்சத்தைப் பாய்ச்சும் ஸ்பெயின் நாட்டின் அதிகாலைப் பொழுதினைப் போல, தமிழ்நாட்டின் தொழில்துறையில் முன்பு சூழ்ந்திருந்த இருளும் பனியும் விலகி, வெளிச்சக் கதிர்கள் கடந்த இரண்டரை ஆண்டுகால திராவிட மாடல் அரசின் அயராத முயற்சியினால் பாயத் தொடங்கியிருக்கின்றன. ஐரோப்பாவின் தனித்துவமான நாடுகளில் ஒன்று ஸ்பெயின் என்பதையும், எந்தெந்த வகையில் அது முக்கியமானது என்பதையும் பத்து நாள் பயணத்தில் அறிந்துகொள்ள முடிந்தது.

ஏறத்தாழ 4 கோடியே 75 லட்சம் மக்கள் தொகையைக் கொண்டிருக்கும் நாடு ஸ்பெயின். ஒப்பீட்டளவில் தமிழ்நாடு என்கிற மாநிலத்தின் மக்கள் தொகையைவிட ஸ்பெயின் என்கிற நாட்டின் மக்கள்தொகை குறைவுதான். ஆனால், நாங்கள் தங்கியிருந்த இடத்தின் அருகிலும், பிற இடங்களிலும் மக்கள் நெருக்கமும் அவர்களின் புழக்கமும் அதிகமாக இருந்ததைக் காண முடிந்தது. இது பற்றி அங்குள்ளவர்களிடம் கேட்டபோது, "ஆண்டுக்கு 9 கோடிக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் ஸ்பெயினுக்கு வருகிறார்கள். அதனால் எப்போதும் மக்கள் நெருக்கத்துடன் இந்த நாடு இருக்கும்" என்றனர்.

ஸ்பெயின் நாட்டின் தட்பவெப்பம் என்பது நம் நாட்டை, அதுவும் குறிப்பாக நமது மாநிலமான தமிழ்நாட்டுடன் ஒப்பிடும்போது மிகவும் குளிராகத்தான் தெரியும். ஆனால், ஐரோப்பிய நாடுகள் பலவற்றுடன் ஒப்பிடும்போது ஸ்பெயின் நாட்டின் வெப்பநிலை மைனஸ் டிகிரிக்குச் செல்வதில்லை என்பதால் மற்ற நாடுகளிலிருந்து இங்கு வருகிறார்கள். அத்துடன், ஸ்பெயின் நாட்டின் கலைப்படைப்புகள் உலகின் பல நாடுகளையும் ஈர்க்கக்கூடியனவாக இருக்கின்றன. அவற்றைப் பார்க்கவும் சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வருகிறார்கள்.

தலைநகர் மேட்ரிட் மற்றும் புகழ்மிக்க நகரங்களான பார்சிலோனா, செகோவியா, டொலிடோ எனப் பலவும் தனது பழம் பெருமை மிக்க கலைவடிவங்களால் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்றன. டொலிடோ நகரம், ஸ்பெயினின் பழமையான தலைநகரமாகும். நாங்கள் தங்கியிருந்த மேட்ரிட் நகரிலிருந்து ஒரு மணி நேரத்தில் காரில் செல்லக்கூடிய தூரம். போகும் வழியெல்லாம் ஆலிவ் மரங்கள் தலையசைத்து வரவேற்பது போல இருந்தன. "ஆலிவ்தான் இந்த மண்ணின் அழகு. எல்லாப் பக்கமும் நிறைந்திருக்கும்" என்று அங்குள்ளவர்கள் தெரிவித்தார்கள். பழமையான நகரங்கள் உள்ள ஸ்பெயினில் பார்த்த மனிதர்கள் பலரும் வயதானவர்களாக இருந்தார்கள். இளைய தலைமுறையினரின் எண்ணிக்கை முதியோர் அளவிற்கு இல்லை.

**சீனாவிலும் ஸ்பெயின் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளிலும் மக்கள் தொகையில் மூத்த குடிமக்கள் நிறைந்திருக்கிறார்கள். இளைஞர்களின் விகிதம் குறைவு. ஆனால், தமிழ்நாட்டில் இளைஞர்கள் அதிகம். அவர்கள் மிகப் பெரும் மனிதவளமாக இருப்பதுதான் நமக்கு பலம். அத்தகைய இளைஞர்களின் கல்விக்காகவும், திறன் மேம்பாட்டிற்காகவும், வேலைவாய்ப்புகளுக்காகவும் நம் திராவிட மாடல் அரசு தொடர்ந்து எடுத்து வரும் முயற்சிகளை நினைத்துப் பார்த்தேன். இன்னும் செய்ய வேண்டியவை ஏராளம் இருக்கின்றன என்பதையும் அதற்காகத்தான் இத்தகைய முதலீடுகளை ஈர்க்கும் பயணங்கள் என்பதையும் உடன்பிறப்புகளான நீங்களும் உங்களில் ஒருவனான நானும் அறிவோம். இளைஞர்களின் ஆற்றல் அவர்களுக்கும் நாட்டிற்கும் பயன்படும் வகையில் வேலை வாய்ப்புகளிலும் கொள்கை சார்ந்தும் வளர்த்தெடுக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் நமக்கு இருக்கிறது.**

பழமைப் பாரம்பரியம் மிக்க டொலிடோ நகரத்திற்குள் நுழையும்போது ஓர் அரங்கம் கண்ணில் பட்டது. நம் ஊரில் ஜல்லிக்கட்டு எனும் ஏறுதழுவுதல் போட்டி போன்ற, ஸ்பெயினின் புகழ்மிக்க எருது விளையாட்டுப் போட்டிக்கான அரங்கம் அது. ஸ்பெயின் நாட்டின் தேசிய விளையாட்டாக இந்த எருது விளையாட்டுப் போட்டிகள் அமைந்துள்ளன. மார்ச் மாத இறுதியில் தொடங்கி அக்டோபர் மாதத்தின் நடுப்பகுதி வரை இந்த எருது விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகின்றன.

இது பிப்ரவரி மாதம் என்பதால், **ஸ்பெயினின் 'ஏறுதழுவதல்' போட்டியைக் காண முடியவில்லை. எனினும், ஸ்பெயின் நாட்டின் பழம்பெருமைமிக்க அரங்கங்கள் போல, நம் தமிழ்ப் பண்பாட்டு விளையாட்டின் பெருமையைக் காத்திட மாமதுரையில் அலங்காநல்லூர் அருகே கீழக்கரையில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள ஏறுதழுவுதல் அரங்கமும் அதனைத் திறந்து வைத்த நிகழ்வும் மனதில் நிழலாடி, நிறைவைத் தந்தன.**

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 09-02-2024

# சாதனைப் பயணம்!

தமிழ்நாட்டின் வளத்துக்கும் நலத்துக்கும் மிகமிக முக்கியமான சாதனைப் பயணத்தை முடித்துவிட்டு வந்திருக்கிறார் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். அவருக்கு மனம் நிறைந்த நல்வாழ்த்துகளை முதலில் சொல்வோம்!

எட்டுநாட்கள் அரசு முறைப் பயணமாக ஸ்பெயின் சென்றார் முதலமைச்சர் அவர்கள். இதன் நோக்கம், தமிழ்நாட்டை நோக்கி தொழில்களை ஈர்ப்பது ஆகும். அந்த நோக்கத்துக்கு மாபெரும் பலன் கிடைத்துள்ளது. முதலமைச்சரின் பயணத்தின் பயனாக, 3,440 கோடி ரூபாய் அளவிற்கான முதலீடுகள் செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஹபக் லாய்டு நிறுவனம் - 2,500 கோடி ரூபாய் முதலீடு செய்வதற்கு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. எடிபான் நிறுவனம் - 540 கோடி ரூபாய் முதலீடு செய்வதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. ரோக்கா நிறுவனமும் 400 கோடி ரூபாய் முதலீடு செய்வதாக உறுதியளித்துள்ளது.

இதனை மகிழ்ச்சியோடு அறிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், "தமிழ்நாடு குறித்தும், கழக அரசு குறித்தும் உலகளாவிய தொழில் நிறுவனங்களுக்கு உள்ள நம்பிக்கையை இது காட்டுகிறது" என்று சொல்லி இருக்கிறார்.

இந்தியாவில் எத்தனையோ மாநில அரசுகள் உள்ளன. அனைத்து மாநில அரசுகளும், அந்த மாநிலத்து முதலமைச்சர்களும் இதுபோன்று தொழில் முதலீடுகளைக் ஈர்ப்பதற்காக வெளிநாடுகளுக்குச் செல்வது இல்லை. சென்றாலும் இது போன்ற முதலீடுகள் குவிவது இல்லை. தமிழ்நாட்டுக்கு மட்டும் இப்படி வருகிறது என்றால் அதுதான் உன்னிப்பாகக் கவனிக்கத்தக்கது. அதனைத்தான் 'நியூயார்க் டைம்ஸ்' இதழ் எழுதி இருக்கிறது.

"இந்தியாவுக்கு மிகவும் திறமையை வெளிப்படுத்தக்கூடிய வகையான வேலைகள் தேவைப்படுகின்றன. தொழிற்சாலை வேலை தவிர வேறு வேலைகள் எதுவும் அங்கு இல்லை. கடந்த ஆண்டு, உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடான சீனாவை இந்தியா முந்தியது. இந்தியாவின் உழைக்கும் வயதுடைய மக்களின் எண்ணிக்கை வேகமாக முன்னேறி வருகிறது. ஆனால் அந்த மக்கள் தொகை வீக்கத்தை நன்மையாக மாற்றுவது, இந்தியாவின் தொழிலாளர்களை அதிக உற்பத்தித் திறன் கொண்டவர்களாக மாற்றுவதாகும். இந்தியர்களில் பாதிப் பேர் சிறு விவசாயத்தையே நம்பியுள்ளனர்.

இந்தியாவில் முன்னோக்கிச் செல்லும் பாதையாக தமிழ்நாட்டின் பாதையைச் சுட்டிக்காட்டலாம். 7 கோடி மக்கள் வாழும் தமிழ்நாடு தற்போது தொழில் துறையில் வெற்றி பெற்று வருகிறது. இந்திய அரசாங்கம் 2021-ஆம் ஆண்டில் டெல்லி, நொய்டா போன்ற மாநிலங்களில் மின்னணு உற்பத்திக்கு மானியம் வழங்கத் தொடங்கியது. ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அந்த ஊக்கத்தொகை அவசியமாகக் கருதப்படவில்லை. ஒட்டுமொத்த இந்தியாவும் பயணிக்கும் பாதையைத் தவிர்த்து வேறு வழிகளில் தமிழ்நாடு பயணித்து வெற்றி பெற்று வருகிறது." - என்று 'நியூயார்க் டைம்ஸ்' எழுதி இருக்கிறது.

தொலைநோக்குப் பார்வையுடன் முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கைகள்தான் இதற்கு முக்கியமான காரணம்.

பேராசிரியர் ஜெயரஞ்சனைத் துணைத் தலைவராகக் கொண்ட மாநிலத் திட்டக்குழுவை மாற்றி அமைத்தார். தமிழ்நாட்டுக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவையும் அமைத்தார். அது உலகம் பாராட்டும் குழுவாக அமைந்திருந்தது.

பேராசிரியர் ரகுராம் ராஜன் அவர்கள் - இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநராக இருந்தவர். எஸ்தர் டஃப்லோ அவர்கள் - உலகத்தின் உயரிய நோபல் பரிசு பெற்றவர். அரவிந்த் சுப்பிரமணியம் அவர்கள் - ஒன்றிய அரசின் தலைமைப் பொருளாதார ஆலோசகராக இருந்தவர். ஜான் ட்ரீஸ் அவர்கள் - பொருளாதார நிபுணர், அமர்த்தியா சென்னுடன் இணைந்து புத்தகம் எழுதியவர். எஸ்.நாராயணன் அவர்கள் - ஒன்றிய அரசின் நிதிச் செயலாளராக இருந்தவர். கடந்த 40 ஆண்டுகளாக பல்வேறு துறைகளைத் திறம்பட வழிநடத்தியவர். இக்குழுவே உலகளாவிய பாராட்டைப் பெற்றது.

**மாநிலங்களிடம் வரியை வசூல் செய்து மாநிலங்களுக்கு எதுவும் தராத ஒரு ஒன்றிய அரசின் கீழ் மாநிலமாக இருப்பதில் உள்ள நெருக்கடியை உணர்ந்து தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட்டு வருகிறார் முதலமைச்சர். ஒன்றிய அரசு நிதியும் தரப்போவது இல்லை. புதிய திட்டங்களையும் வழங்கப் போவது இல்லை என்பதை உணர்ந்தே முதலமைச்சர் இயங்கி வருகிறார்.**

அறிவிக்கப்பட்ட ஒரே ஒரு எய்ம்ஸ் மருத்துவமனையைக்கூட கட்டாமல் வைத்துள்ளது பா.ஜ.க. அரசு. கடன் வாங்கக் கூட அனுமதிப்பது இல்லை. 37 ஆயிரம் கோடி ரூபாயை இரண்டு மாபெரும் இயற்கைப் பேரிடருக்காக தமிழ்நாடு கேட்டது. அதில் ஒரு பைசாகூட வரவில்லை. இந்த நிலையில் தமிழ்நாட்டை மேன்மைப்படுத்த வேண்டுமானால் என்ன செய்வது? உலகளாவிய பயணங்களின் மூலமாக முதலீடுகளை ஈர்ப்பதுதான் முக்கியமான வழியாகும்.

முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி வருகிறார் முதலமைச்சர் அவர்கள். வணிகம் புரிதலை எளிதாக்கி வருகிறது அரசு. திறன்மிகு பணியாளர்களை உருவாக்குதல், தொழிலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கிடையே இணைப்பினை ஏற்படுத்துதல், தொழிற்சாலைகளுக்கு ஏற்ற தொழிலாளர்களைத் தயார்படுத்துதல், இளைஞர்களின் திறனுக்கு ஏற்ற வேலைகளை உறுதி செய்தல் ஆகியவற்றில் கவனமாக இருக்கிறது தமிழ்நாடு அரசு.

**ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன்,**

**1) முதலாவதாக, தெற்காசியாவிலேயே, முதலீடுகளுக்குச் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்க வேண்டும். முதலீடுகள் மாநிலம் முழுவதும் பரவலாகவும் சீராகவும் மேற்கொள்ளப்பட வேண்டும்.**

**2) இரண்டாவதாக, 2030ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டினை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்த வேண்டும்.**

**3) மூன்றாவதாக, உலகளாவிய முன்னணி தொழில் நிறுவனங்களை தமிழ்நாட்டினை நோக்கி வர வைத்திட வேண்டும்.**

**4) நான்காவதாக, உலகத்தின் மூலை முடுக்கிற்கெல்லாம், தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் (Made in Tamil Nadu) சென்றடைய வேண்டும். - என்ற இலக்கினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். 'தமிழ்நாடு தனிப்பாதையில் பயணிக்கிறது' என்று நியூயார்க் டைம்ஸ் சொல்வது இதைத்தான்.**

இத்தகைய சாதனையை எட்டுவதற்கான சாதனைப் பயணமாக ஸ்பெயின் பயணத்தை நிகழ்த்திக் காட்டி விட்டு வந்திருக்கும் மாண்புமிகு முதலமைச்சரை வாழ்த்துவோம்.




நிதி ஒதுக்கீட்டில் ஒன்றிய அரசின் ஓரவஞ்சனையைக் கண்டித்து புதுடெல்லி, நாடாளுமன்ற வளாகத்தில் தி.மு.க. எம்.பி.க்கள், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு தலைமையில் கறுப்புச் சட்டைப் போராட்டம் நடத்தினர். இதில் கூட்டணிக் கட்சிகளின் எம்.பி.க்கள் கலந்து கொண்டு கண்டன முழக்கமிட்டனர். நாடாளுமன்ற கழகக் குழுத் துணைத் தலைவரும், கழக துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி உள்ளிட்டோர் போராட்டத்தில் பங்கேற்றனர்.

### நிதி ஒதுக்கீட்டில் ஒன்றிய அரசின் ஓரவஞ்சனைக்கு கண்டனம்

## நாடாளுமன்ற வளாகத்தில் தி.மு.க. கறுப்புச் சட்டை போராட்டம்!

### கழக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் கூட்டணிக் கட்சிகளும் பங்கேற்பு!

புதுடெல்லி, பிப். 9-

நிதி ஒதுக்கீட்டில் ஒன்றிய அரசின் ஓரவஞ்சனைக்கு கண்டனம் தெரிவித்து, நாடாளுமன்ற வளாகத்தில் தி.மு.க. சார்பில் கறுப்புச் சட்டை போராட்டம் நடைபெற்றது.

ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சியமைத்தது முதல் மாநிலங்களுக்கான நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம் காட்டி வருகிறது. பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கு அதிக நிதியும், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு நிதி ஒதுக்காமலும் ஓரவஞ்சனை செய்கிறது.

குறிப்பாக, தமிழ்நாட்டில் மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட பாதிப்புக்கு, ஒன்றிய அரசு நிவாரண நிதி அறிவிக்கவில்லை. இதேபோல், ஒன்றிய இடைக்கால பட்ஜெட்டிலும் சென்னை மெட்ரோ, மதுரை எய்ம்ஸ் உள்ளிட்ட திட்டங்களுக்கான உரிய நிதி ஒதுக்கீடு குறித்து அறிவிப்புகள் இடம் பெறவில்லை.

இதையடுத்து, ஒன்றிய அரசின் ஓரவஞ்சனையை கண்டித்து, நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள காந்தி சிலை அருகே கறுப்புச் சட்டை போராட்டம் நடத்தப்படுமென தி.மு.க. தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருந்தார்.

அதன்படி, நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள காந்தி சிலை அருகே நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர். பாலு தலைமையில் கழக எம்.பி.க்கள் கறுப்புச் சட்டை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது, நிதி ஒதுக்கீட்டில் ஓரவஞ்சனையாக செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

இப்போராட்டத்தில் கூட்டணிக் கட்சி எம்.பி.க்களும் கலந்து கொண்டு ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு தங்கள் எதிர்ப்பை பதிவு செய்தனர்.

### மாநிலங்களுக்கு நிதி வழங்குவதில் பாரபட்சம் காட்டும்

## ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து டெல்லியில் கேரள முதல்வர் போராட்டம்!

### 'இந்தியா' கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்பு!

புதுடெல்லி, பிப். 9-

மாநிலங்களுக்கு நிதி வழங்குவதில் பாரபட்சம் காட்டும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து, டெல்லியில் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் நடத்திவரும் மாபெரும் போராட்டத்தில் 'இந்தியா' கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர்.

ஒன்றிய இடைக்கால பட்ஜெட்டில் தென் மாநிலங்கள் புறக்கணிக்கப்படுவதாக கடும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. வரிப் பகிர்வு விவகாரத்தில் தென்மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு அநீதி இழைப்பதாக தமிழ்நாடு, கர்நாடகம், கேரளா ஆகிய மாநிலங்கள் குற்றம் சாட்டி வருகின்றன.

இந்நிலையில், ஒன்றிய அரசுக்கு எதிராக கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் மற்றும் அம்மாநில அமைச்சர்கள் டெல்லியில் போராட்டம் நடத்தி வருகின்றனர்.



ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவாக இந்தியா கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் பங்கேற்றுள்ளனர்.

ஜம்மு - காஷ்மீர் தேசிய மாநாட்டு கட்சித் தலைவரும், காஷ்மீர் முன்னாள் முதலமைச்சருமான ஃபரூக் அப்துல்லா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி, இந்திய கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளர் டி.ராஜா ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

தி.மு.க. சார்பில் தி.மு.க. மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி சிவா, அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் உள்ளிட்டோரும் கேரள அமைச்சரவை போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றிய கேரள முதலமைச்சர் பினராயி விஜயன், இந்தியாவின் கூட்டாட்சி கட்டமைப்பை பாதுகாக்க ஒன்றிணைந்துள்ளதாக கூறியுள்ளார். அனைத்து மாநிலங்களையும் சமமாக நடத்துவதை உறுதி செய்வதை வலியுறுத்தி போராட்டம் நடத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் ஒன்றிய அரசுக்கு எதிராக வலுவான எதிர்ப்பை தெரிவிக்க ஒன்றிணைந்துள்ளோம்

இந்தியாவின் கூட்டாட்சி கட்டமைப்பை பாதுகாக்க நாங்கள் ஒன்று சேர்ந்துள்ளோம்.

அனைத்து மாநிலங்களும் சமமாக நடத்தப்படுவதை உறுதிசெய்யும் விடியலை நோக்கிய பயணம் தொடங்கி உள்ளது

ஒன்றிய, மாநில உறவில் சமநிலையை பாதுகாக்கவும் இந்த போராட்டம் நடத்தப்படுகிறது.

இந்திய வரலாற்றில் இந்த நாள் ஒரு முக்கியமான தினமாக பதிவு செய்யப்படும் என கேரள முதல்வர் பினராயி விஜயன் குறிப்பிட்டார்.

### கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி பகுதியில்

## ரூ.5 கோடியில் வேளாண் வணிக வளாகம்!

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திறந்து வைத்தார்!

*கடலூர், பிப். 9-*

*கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி பகுதியில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை சார்பில் நபார்டு WIF TNSAMB நிதியுதவியுடன் ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்தை வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி.அபூர்வா, அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஜி.பிரகாஷ், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். அ.அருண் தம்புராஜ் ஆகியோர் முன்னிலையில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திறந்து வைத்தார்.*

*அதன்பின் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது:-*

*முதலமைச்சர் அவர்கள் அனைத்து துறைகளின் செயல்பாடுகள் மற்றும் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு திட்டங்களின் பயன்கள் உடனடியாக மக்களுக்கு கொண்டு சேர்க்கும் வகையில் செயல்படுத்தி வருகிறார்கள். மகளிருக்கு இலவச பேருந்து பயணத்திட்டம், அரசு பள்ளியில் பயின்ற பெண் குழந்தைகள் உயர்கல்வி பயில ஏதுவாக புதுமைப் பெண் திட்டம், குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கிடும் வகையில் மகளிர் உரிமை தொகை திட்டம், அரசு பள்ளி மாணவர்களின் நலன் கருதி காலை உணவு வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

*கடலூர் விற்பனைக்குழுவின் கட்டுப்பாட்டில் இயங்கும் குறிஞ்சிப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 29.08.1973 அன்று துவங்கப்பட்டது. விவசாயிகளின் விளைபொருட்கள் குறிப்பாக மணிலா போன்ற எண்ணெய் வித்துகள் அதிக ளவு உள்ளூர் மற்றும் வெளி மாவட்ட வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்படுகிறது. மின்னணு வேளாண் சந்தை (eNAM) திட்டம் 15.10.2022 முதல் செயல்பட்டு வருகிறது. 202223 ஆம் ஆண்டு eNAM மூலம் 1692 மெட்ரிக் டன் அளவிலான ரூ.1725.12 இலட்சம் மதிப்புடைய வேளாண் விளைபொருட்களும், 2023 24 ஆம் ஆண்டு இதுவரை 2133 மெட்ரிக் டன் அளவிலான ரூ.2222.46 இலட்சம் மதிப்புடைய வேளாண் விளை பொருட்களும் பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது.*

*குறிஞ்சிப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் 255 மெட்ரிக் டன் கொண்ட 3 பரிவர்த்தனைக் கூடங்கள், மொத்த கொள்ளளவு 5,200 மெட்ரிக் டன் கொண்ட 4 சேமிப்புக் கிட்டங்கிகள், 3 மணிலா உடைப்பு இயந்திரம், 3 தேங்காய் உரிப்பு இயந்திரம், 3 Forkift இயந்திரம், விளைபொருளை தர ஆய்வு செய்ய NIR Analyer இயந்திர சாதனங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளன.*

*ஒழுங்குமுறை விற்பனைக்கூட உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் NABARD WIF திட்டத்தின் கீழ், நபார்டு நிதி 95 சகவீதமும், TNSAMB EPJP 5 சதவீதமும் என ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டில் அலுவலக கட்டிடம், கூட்ட அரங்கு, 10 வணிக வளாகக் கடைகள், 500 மெ.டன் கொள்ளளவு கொண்ட சேமிப்பு கிட்டங்கி போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் கொண்ட கட்டுமானங்கள் கட்டப்பட்டுள்ளது. விவசாயிகள் தங்கள் வேளாண் விளைபொருட்களை விலை வீழ்ச்சி காலத்தில் சேமிப்பு கிட்டங்கியில் இருப்பு வைத்து விலை அதிகரிக்கும் போது விற்று பயனடைவர். உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் வணிகர்கள் தங்கள் பொருட்களை வணிக வளாக கடைகள் மூலம் விற்பனை செய்து பயனடைவர்.*

*இவ்வாறு அவர் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் வேளாண்மை இணை இயக்குனர் கண்ணையா, கடலூர் விற்பனைக்குழு செயலாளர் திருமதி.சே.விஜயா மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

# பயணம் வென்றது! களமும் வெல்லட்டும்!

முதல் பக்கத் தொடர்ச்சி

ஸ்பெயின் நாட்டின் விளையாட்டுத் திடல்களில் கால்பந்து விளையாட்டில் இளைஞர்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்தனர். நம் நாட்டு இளைஞர்களுக்குக் கிரிக்கெட் போல, அந்த நாட்டிலும் அருகிலுள்ள ஐரோப்பிய நாடுகளிலும் கால்பந்து மிகவும் பிரபலம். உலகக் கோப்பை, ஐரோப்பியக் கோப்பை ஆகியவற்றுடன் கால்பந்து கிளப்கள் நடத்தும் போட்டிகளும் மிகவும் புகழ் பெற்றவை. நாங்கள் சென்றிருந்த நேரத்திலும் அங்கே கால்பந்து போட்டிகள் நடைபெறுவதை அறிந்து கொண்டோம்.

டொலிடோ நகரத்தின் அழகை இரசித்ததுடன், அதன் பழமைமிக்க வரலாற்றுச் சிறப்பையும் கேட்டுத் தெரிந்துகொண்டேன். ‘மூன்று பண்பாடுகளின் நகரம்’ என்ற சிறப்புப் பெயர் டொலிடோவுக்கு உண்டு. முதலில் யூதர்கள், பிறகு கிறிஸ்தவர்கள், அதன்பின் முஸ்லிம்கள் என மூன்று மதங்களைச் சார்ந்த மன்னர்களின் படையெடுப்பு நிகழ்ந்திருந்தாலும், மூன்று மதங்களின் மக்களும் அவரவர் பண்பாட்டைக் காப்பாற்றிக் கொண்டு, ஒற்றுமையாக வாழ்ந்த - வாழ்ந்து வருகிற பெருமை டொலிடோ நகரத்திற்கு உண்டு.

கி.பி. 3ஆம் நூற்றாண்டில் ரோமானிய அரசாட்சியின் அரண்மனையாக இருந்த இந்தக் கோட்டை, 15ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த மன்னரால் மீண்டும் பொலிவு பெற்றுள்ளது. பழமை மாறாத கோட்டையும் அதன் மதில்களும் டொலிடோ நகரத்திற்குப் பெருமை சேர்க்கின்றன. தொன்மை மாறாத கட்டடக்கலைகளைக் காப்பாற்றி, அடுத்த தலைமுறையினருக்குக் கலைச்செல்வமாக ஒப்படைக்கும் தொலைநோக்குப் பார்வையை அந்நாட்டில் காண முடிந்தது.

**வேறு மதத்தைச் சேர்ந்த மன்னர்களால் கட்டப்பட்ட கட்டடம் என்பதால் இன்றைய ஆட்சியாளர்கள் அதை இடித்துத் தகர்த்திடவும் இல்லை, மாற்று மதத்தினரிடம் வெறுப்பை விதைத்துத் தேர்தல் இலாபம் தேடும் அரசியலும் அங்கு இல்லை. மூன்று மதத்தினரின் பண்பாட்டுச் சிறப்பு மிக்க நகரமாக டொலிடோ இன்றும் திகழ்வதைக் காண முடிந்தது. இந்தப் பண்பாட்டுப் பெருமையும் பன்முகத்தன்மையும்தான் இந்தியாவுக்கும் சிறப்பு சேர்க்கக்கூடியது என்பதை நாம் மறந்துவிட முடியுமா?**

கோட்டைகள் போலவே பழங்காலத்தில் கட்டப்பட்ட பெரிய தேவாலயங்களான கதீட்ரல்களும் பழமை மாறாமல் பாதுகாக்கப்படுகின்றன. தமிழ்நாட்டை ஆண்ட மன்னர்கள் கட்டிய திருக்கோயில்கள் பலவும் திராவிடக் கட்டடக் கலையின் சின்னங்களாக விளங்குவதுபோல, ஐரோப்பியக் கட்டடக் கலையின் அடையாளங்களாக இந்த தேவாலயங்கள் திகழ்கின்றன.

வரும் வழியில், “இது என்ன இன்னொரு கோட்டை?” என்று ஆச்சரியத்துடன் கேட்டேன். “இது கோட்டை அல்ல, பிராடோ மியூசியம்” என்று தெரிவித்தனர். ஸ்பெயின் நாட்டின் வரலாற்றை ஆவணப்படுத்தும் விதமாக 1819ஆம் ஆண்டில், அரண்மனை போன்ற இந்த அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. நமது மன்னர்களின் வரலாற்றைக் கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் தெரிந்து கொள்வது போல, ஸ்பெயின் நாட்டை ஆட்சி செய்த மன்னர்களின் வரலாறு ஆட்சி முறை ஆகியவற்றை அறிந்து கொள்ள அவர்கள் காலத்தில் வரையப்பட்ட ஓவியங்களே சான்றுகளாக உள்ளன. அத்தகைய பழமைமிக்க ஓவியங்களைப் பாதுகாத்து, அவற்றின் வாயிலாக 12ஆம் நூற்றாண்டிலிருந்து ஸ்பெயின் நாட்டின் வரலாற்றை அறிந்து கொள்ளும் வகையில் பிராடோ அருங்காட்சியகம் அமைந்துள்ளது.

**நாங்கள் அங்கே சென்றிருந்தபோது இளைய தலைமுறையினர் பலரும் அருங்காட்சியகத்தைப் பார்வையிடுவதைக் காண முடிந்தது. வரலாற்றை ஒவ்வொரு தலைமுறைக்கும் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டும். நம்மிடம் பெருமைமிகு வரலாறு உண்டு. நாம் அதனைச் சொல்லத் தவறியதால், வரலாறு இல்லாத ஒரு கூட்டம், நம் வரலாற்றைத் திரிக்கும். பண்பாட்டைச் சிதைக்கும். மொழி மீது ஆதிக்கம் செலுத்த நினைக்கும். வதந்திகளைப் பரப்பும். அவதூறுகளால் அரசியல் பிழைப்பு நடத்தும். உண்மை வரலாற்றை இளந்தலைமுறையினர் உணர்ந்துகொண்டால்தான், வரலாற்றைச் சிதைக்க நினைக்கும் வதந்தியாளர்களை, அவர்கள் தங்களின் வாக்குரிமையால் விரட்டி அடிப்பார்கள். அடுத்தடுத்த தலைமுறையினருக்கும் ஆபத்து நேராமல் தடுப்பார்கள்.**

திராவிட மாடல் அரசு அமைந்தபிறகு, கீழடி அகழாய்வுகளில் கிடைத்த தமிழரின் நாகரிக பண்பாட்டு வரலாற்றுச் சுவடுகளை ஆவணப்படுத்தும் வகையில் மிகப்பெரிய அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. வைகை ஆற்றங்கரை நாகரிகம் முதல் வைக்கம் போராட்டம் வரை உண்மை வரலாற்றை ஆவணப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை அரசாங்கம் மட்டுமல்ல, தமிழர் என்ற உணர்வு கொண்ட ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டும் என்பதைத் தமிழ்நாட்டில் உள்ள நம் கழகத்தினரிடமும், அயல்நாடுகளில் வாழும் தமிழர்களிடமும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். ஸ்பெயின் நாட்டில் வாழும் தமிழர்களைச் சந்தித்த இனிமையான நிகழ்விலும் இதனைக் கூறினேன்.

இந்தப் பயணத்தில் உணவு உபசரிப்பு வழங்கிய South Indian Food நடத்தி வரும் மதுரை ஹார்விப்பட்டியைச் சேர்ந்த திருமதி. பவித்ரா சோமசுந்தரன் குடும்பத்தினருக்கு இக்கடிதத்தின் வாயிலாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்பெயின் நாடு தன் வரலாற்றையும் பண்பாட்டையும் பாதுகாப்பதுடன் மொழியையும் வளப்படுத்தி உலகம் முழுவதும் பரவச் செய்திருப்பதைக் கண்டு வியந்தேன். நாலே முக்கால் கோடி மக்கள் தொகை கொண்ட நாட்டிற்கு, 9 கோடி சுற்றுலாப் பயணிகள் வருவதற்கான அடிப்படைக் காரணம், உலகமெங்கும் பரவியுள்ள ஸ்பானிஷ் மொழிதான்.

ஐரோப்பிய நாட்டவர் பிற கண்டங்களில் உள்ள நாடுகளுக்கு கடல்வழி கண்டறிய பயணித்தபோது, அதில் ஸ்பெயின் நாட்டின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. குறிப்பாக, தென் அமெரிக்க நாடுகள் பலவற்றிற்கு ஸ்பெயின் நாட்டவர் கடல்வழியாகச் சென்றதுடன் அங்கு குடியேறிய காரணத்தால், அந்த நாடுகளில் ஸ்பானிஷ் மொழி இன்று அலுவல் மொழியாக இருக்கிறது. ஆங்கிலத்திற்கு அடுத்தபடியாக உலகளவில் பரவிய ஐரோப்பிய மொழிகளில் ஸ்பானிஷ் மொழிக்கு முக்கிய இடம் உண்டு. 20 நாடுகளில் அது அலுவல் மொழியாக உள்ளது. அந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஸ்பெயினுக்குச் சுற்றுலாப் பயணிகளாக வருகிறார்கள். தங்கள் முன்னோர்களின் நிலத்தைப் பார்க்கும் ஆவலுடன் வருகிறார்கள்.

தமிழ் மன்னர்கள் தங்களின் கடற்படை மூலம் தெற்காசிய நாடுகளான இன்றைய இந்தோனேஷியா, கம்போடியா, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை உள்ளிட்ட நாடுகளின் அன்றைய பகுதிகளில் பண்பாட்டுச் சின்னங்களை நிறுவி, தமிழ் மொழியைப் பொறித்தது போல, தமிழர்கள் கடல்வழி வாணிகம் மேற்கொண்டு தமிழ்நாட்டில் கிடைத்த பொருட்களுடன் தமிழ் மொழியையும் கிரேக்கம்-ரோமாபுரி பேரரசுகளில் எப்படிப் பரப்பினார்களோ அதுபோல தென் அமெரிக்க நாடுகளில் ஸ்பானிஷ் மொழி செல்வாக்குப் பெற்றிருக்கிறது. அது ஸ்பெயின் நாட்டின் வளர்ச்சிக்குத் துணை நிற்கிறது என்பதை இந்தப் பயணத்தில் உணர்ந்து கொண்டேன்.

**பயணம் என்பது உலகத்தைக் காண்பதற்கான ஜன்னல். நாம் அறியாத பல செய்திகளை நமக்கு நேரடியாகக் கற்றுத் தருவதற்குப் பயணத்தைப் போன்ற சிறந்த ஆசிரியர் இருக்க முடியாது.**

அதனை இந்தப் பத்து நாள் பயணத்தில் முழுமையாக அறிந்தேன். பயணத்தில் இருந்தாலும் எனக்குள்ள பொறுப்புகளையும் அதற்குரிய பணிகளையும் மறந்துவிடவில்லை. தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்ய வேண்டிய தருணம் நெருங்கி வருவதால் அது குறித்துக் காணொலி வாயிலாக அமைச்சர்களுடனும் அதிகாரிகளுடன் ஆலோசனைகளை மேற்கொண்டேன். கழகத்தின் தலைவர் என்ற முறையில், உடன்பிறப்புகளான உங்களின் எண்ண ஓட்டத்தை அறிந்து கொள்ளும் வகையில் கழக நிர்வாகிகளிடம் தொடர்ந்து உரையாடினேன்.

**உங்களில் ஒருவனான நான், இதற்கு முன் எழுதிய கடிதத்தில் கேட்டுக்கொண்டபடி, பிப்ரவரி 3ஆம் நாள் கழகப் பொதுச் செயலாளர் அண்ணன் துரைமுருகன் அவர்கள் தலைமையில் அண்ணா சதுக்கம் நோக்கி அமைதிப் பேரணியைச் சிறப்பாக நடத்தியதுடன், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்கள் - நகரங்கள் ஒன்றியங்களில் அண்ணா நினைவு நாள் ஊர்வலங்களும் நினைவேந்தல் நிகழ்வுகளும் நடைபெற்றிருப்பதை அறிந்தேன்.**

நம்முடைய உடனடி களப்பணி என்பது நாடாளுமன்றத் தேர்தல் களம்தான். அதற்காக அமைக்கப்பட்ட மூன்று குழுக்களுமே தங்களுடைய பணியைத் தொடங்கி, சிறப்பாகத் தொடர்வதை அறிந்துகொண்டேன். தோழமைக் கட்சிகளுடன் தொகுதிப் பங்கீடு நடத்தும் குழு முதல் சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நல்லமுறையில் நிறைவு செய்துள்ளது. கழகத்தினரின் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்கும் குழு ஒவ்வொரு மாவட்டத்தைச் சேர்ந்த நிர்வாகிகளையும் அழைத்து அண்ணா அறிவாலயத்தில் விரிவான ஆலோசனை நடத்தி, கள நிலவரத்தை எடுத்துரைத்து, வெற்றிக்கான வியூகத்தை வகுத்துத் தந்திருக்கிறது. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று மக்களைச் சந்தித்து அவர்களின் கருத்துகளைக் கேட்டு வருகிறது. தலைமையின் சொல்லை உத்தரவாக கட்டளையாக ஏற்றுச் செயல்பட்டு வருவது மகிழ்வைத் தருகிறது. இது எப்போதும் தொடர வேண்டும்.

**உங்களில் ஒருவனான நான் எளியவன். உங்களால் வழங்கப்பட்ட கழகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருப்பவன். பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் ஆகியோரிடம் கற்றுக்கொண்டதை வைத்து ஓயாமல் உழைக்கக்கூடியவன். இந்த இயக்கத்தைத் தோளிலும், அதன் தொண்டர்களை நெஞ்சத்தில் சுமந்து பயணிப்பவன். உங்கள் ஒவ்வொருவர் இதயத்திலும் இடம்பெற்றிருக்கும் உங்களில் ஒருவன். தலைவன் வெளிநாடு சென்றிருந்தாலும், தலைமையின் உத்தரவை நிறைவேற்றுவோம் என்கிற இந்த உணர்வும், கழகத்தினர் அனைவரையும் ஒருங்கிணைத்துச் செயல்படும் ஒற்றுமையும் இருக்கும்வரை எந்தக் கொம்பனாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தை வீழ்த்திட முடியாது. அந்த வகையில், உடன்பிறப்புகளாம் உங்களுக்குத் தலைவராகும் வாய்ப்பைப் பெற்றதில் மகிழ்கிறேன்.**

தனிப்பட்ட என்னுடைய - உங்களுடைய மகிழ்ச்சியைவிட, இந்தியாவின் ஜனநாயகத்திற்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைத் தகர்த்து நாட்டைக் காப்பாற்றும் போது ஏற்படும் மகிழ்ச்சியே முதன்மையானது. ஸ்பெயின் பயணம் வெற்றிகரமாக அமைந்ததுபோல, தேர்தல் களத்தில் ‘இந்தியா’வின் வெற்றியும் அமையும். தமிழ்நாடு வளம் காணும். இந்தியாவின் ஜனநாயகம் காக்கப்பட்டால்தான் தமிழ்நாடு உள்பட அனைத்து மாநிலங்களின் வளர்ச்சியும் நிரந்தரமாக அமையும். அதற்கான களம் நம்மை அழைக்கிறது. ஆயத்தமாவோம்!

அன்புடன்

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2055
தை 24
07.02.2024

---

## ஒன்றிய மோடி அரசு மாநிலங்களுக்கு வழங்க வேண்டிய

# நிதி உரிமைப் பறிப்பு ஆக்சிஜனை நிறுத்துவதற்குச் சமம்!

## கேரள முதல்வர் பினராயி விஜயன் தலைமையில் டெல்லியில் நடைபெற்ற போராட்டத்தை ஆதரித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

**சென்னை, பிப். 9-**

**ஒன்றிய அரசின் பாரபட்சமான நிதி ஒதுக்கீட்டை கண்டித்தும், மாநில உரிமைகள் மற்றும் கூட்டாட்சி கோட்பாட்டை பாதுகாக்கும் வகையிலும், தில்லி, ஜந்தர்மந்தரில் கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் தலைமையில் நடைபெறும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி வாயிலாக உரையாற்றினார்.**

**அதுபோது அவர் உரையாற்றுகையில் மாநிலங்களுக்கு வழங்க வேண்டிய நிதி உரிமையை ஒன்றிய அரசு பறிப்பது ஆக்சிஜனை நிறுத்துவதற்குச் சமம் என எச்சரித்தார்.**

கேரள மாநிலத்தின் முதலமைச்சர் சகாவு பினராயி விஜயன் அவர்களே!

சி.பி.ஐ.எம் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி அவர்களே!

பிரியப்பட்ட கேரள மக்களின் பிரதிநிதிகளே!

திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த தமிழ்நாட்டு மக்கள் சார்பில் என்னுடைய வணக்கம்!

இந்த போராட்டத்தில் பங்கெடுக்க சகாவு பினராயி விஜயன் அவர்கள் எனக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

### டெல்லி வந்து போராட்டம் நடத்த வைத்த மோசமான அரசியல் சூழலால் வருந்துகிறேன்!

நான் முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஸ்பெயின் நாட்டிற்கு பயணம் மேற்கொண்டு, நேற்றுதான் தாயகம் திரும்பினேன். அதன் காரணமாக, என்னால் இந்தப் போராட்டத்தில் பங்கெடுக்க முடியவில்லை. எங்களுடைய கட்சியின் சார்பாக அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் மற்றும் எம்.பிக்களை அனுப்பினேன்.



கேரளத்துல இருந்து மக்கள் பணியாற்ற வேண்டிய உங்களை டெல்லிக்கு வந்து போராட்டம் நடத்த வைத்த மிக மோசமான அரசியல் சூழலை நினைத்து வருத்தப்படுறேன்.

நேற்று கர்நாடக மாநில முதலமைச்சர் சித்தராமையா அவர்களும் டெல்லிக்கு வந்து போராட்டம் நடத்தி இருக்கிறார்.

இன்று தி.மு.க.வை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களால் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. நிதிப் பகிர்வில் தங்களின் மாநிலத்திற்கு பாரபட்சம் காட்டப்படுவதற்கு எதிராக எல்லா மாநிலங்களும் போராட்டம் நடத்துகிற சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளது. இதற்குக் காரணமான ஒன்றிய பா.ஜ.க. அரசு மக்கள் மன்றத்தில் பதில் சொல்ல வேண்டிய நாள் வெகு தொலைவில் இல்லை.

### பிரதமர் மோடி மாநிலங்களை முனிசிபாலிட்டி போல் நினைக்கிறார்!

சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்கள் பிரதமராக இருந்தபோது, தமிழ்நாட்டின் முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களிடம் ஒரு கருத்தை சொன்னார்.

“தமிழ்நாட்டின் கோரிக்கைக்காக நீங்கள் ஒரு முறை கூட டெல்லிக்கு வரத் தேவையில்லை. அப்படி ஒரு சூழ்நிலையை உருவாக்க மாட்டேன், தமிழ்நாட்டில் இருந்தபடியே சொன்னால் போதும், நிறைவேற்றித் தருவேன்” என்று சொன்னார். மாநிலங்களை மதிக்கிற, மாநில மக்களையும் மதிக்கின்றவர்களாக முந்தைய பிரதமர்கள் இருந்தார்கள். ஆனால், பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் - மாநிலங்களை முனிசிபாலிட்டிகளை போல நினைக்கிறார்.

மாநிலங்கள் இருப்பதோ - மாநிலங்களுக்கு முதலமைச்சர்கள் இருப்பதோ - அவருக்குப் பிடிக்கவில்லை. இத்தனைக்கும் குஜராத் மாநில முதலமைச்சராக இருந்து, அதன்பிறகு பிரதமர் ஆனவர் அவர்.

### மோடி பிரதமரானதும் மாநில உரிமைகளைப் பறித்ததுதான் முதல் செயல்!

ஆனால், பிரதமர் ஆனதும் அவர் செய்த முதல் செயல், மாநிலங்களின் உரிமையைப் பறித்தது தான். நிதி உரிமையை பறித்தார்; கல்வி உரிமையை பறித்தார்; மொழி உரிமையை பறித்தார்; சட்ட உரிமையை பறித்தார்.

மாநிலங்களின் நிதி உரிமையை பறிப்பது ஆக்ஸிஜனை நிறுத்துவதற்குச் சமம். அதைத்தான் பா.ஜ.க. அரசு செய்து வருகிறது. இது ஏதோ எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களுக்கு மட்டும் நடக்கிறது என்று பா.ஜ.க. முதலமைச்சர்கள் நினைக்க வேண்டாம்.

நாளை உங்கள் மாநிலங்களுக்கும் இதே கதிதான் என்று எச்சரிக்கையாகவே சொல்ல விரும்புகிறேன்.

பா.ஜ.க அரசின் இந்த எதேச்சாதிகார நடவடிக்கைகளுக்கு எதிராக தமிழ்நாடு அரசு உறுதியோடு போராடி வருகிறது. அதே பாணியில், கேரள முதலமைச்சர் காம்ரேட் பினராயி விஜயன் அவர்களும் போராடி வருகிறார்.

> **மாநில அரசிடம் தான் எல்லா அன்றாடத் தேவைகளையும் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால், அதற்கு பா.ஜ.க. அரசு முட்டுக்கட்டை போடுகிறது. இதை எல்லாரும் ஒன்று சேர்ந்து எதிர்த்தாக வேண்டும். ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகள் நம்முடைய ஒற்றுமையின் மூலமாக, இந்திய அரசைக் கைப்பற்றி, பாசிச பா.ஜ.க.வுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்!**

ஜி.எஸ்.டி வரி விதிப்புக்குப் பிறகு மாபெரும் நிதி நெருக்கடிப் பேரிடரை எல்லா மாநில அரசுகளும் சந்திக்கிறோம்.

### மக்களுக்கு எல்லா நன்மைகளையும் செய்வது மாநில அரசுகள்தான்!

அனைத்து மாநில அரசுகளையும் ஒன்றிணைத்து ஆளக்கூடிய ஒன்றிய அரசு, இந்த நிதி நெருக்கடியை நீக்குகிற வகையில் செயல்பட வேண்டும்.

ஆனால் அப்படி செயல்படவில்லை. மாநிலங்கள் வளர்ச்சிப் பணிகளுக்காக கடன் வாங்குவதற்கு கூட தடையை ஏற்படுத்துகிறார்கள். மாநிலங்களுடைய பொதுச் செலவினங்களுக்கு நிதியளிப்பதற்கான பொதுக்கடன் என்பது, இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி, மாநில சட்டமன்றத்தின் தனிப்பட்ட அதிகார வரம்பிற்கு உட்பட்டது. மக்களுக்கு எல்லா நன்மைகளையும் செய்வது மாநில அரசுகள்தான்.

மாநில அரசிடம் தான் எல்லா அன்றாடத் தேவைகளையும் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால், அதற்கு பா.ஜ.க. அரசு முட்டுக்கட்டை போடுகிறது. இதை எல்லாரும் ஒன்று சேர்ந்து எதிர்த்தாக வேண்டும்.

‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகள் நம்முடைய ஒற்றுமையின் மூலமாக, இந்திய அரசைக் கைப்பற்றி, பாசிச பா.ஜ.க.வுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்!

### கூட்டாட்சி இந்தியாவை நாம் உருவாக்குவோம்!

அனைத்து மாநிலங்களையும் மதிக்கும் - சமமாக நடத்தும் கூட்டாட்சி இந்தியாவை உருவாக்குவோம்!

காம்ரேட் பினராயி விஜயன் அவர்களுக்கும் கேரள அமைச்சர்களுக்கும் வாழ்த்துகள். உங்கள் எண்ணம் விரைவில் நிறைவேறும்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி மூலம் உரையாற்றினார்.

---

## வை.மூர்த்தி ஐ.ஏ.எஸ். (ஓய்வு) துணைவியார்

# திருமதி.இந்திரா மூர்த்தி மறைவு!

*சென்னை, பிப். 9-*

*திருச்சி மாவட்ட முன்னாள் ஆட்சியர் வை.மூர்த்தி ஐ.ஏ.எஸ். (ஓய்வு) அவர்களின் துணைவியார் திருமதி. இந்திரா மூர்த்தி அவர்கள் நேற்று மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர் கி.இராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) அவர்களின் சம்பந்தியும், திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவருமான வை.மூர்த்தி அவர்களின் துணைவியார் திருமதி.இந்திரா மூர்த்தி (வயது 73) அவர்கள் நேற்று (8.2.2024) பிற்பகல், எண்.2, 12வது தெரு, இசட் பிளாக், அண்ணாநகர், சென்னை என்ற முகவரியிலுள்ள அவரது இல்லத்தில் மறைவெய்தினார்.*

*திருமதி.இந்திரா மூர்த்தி அவர்களின் மறைவுச் செய்தியறிந்து அரசு அதிகாரிகள், அலுவலர்கள், முக்கியப் பிரமுகர்கள் என ஏராளமானோர் சென்று அஞ்சலி செலுத்தினர்.*

*மறைந்த திருமதி.இந்திரா மூர்த்தி அவர்களின் இறுதி ஊர்வலம் இன்று (9.2.2024) பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு அண்ணா நகர் மின் மயானத்தில் இறுதிச் சடங்குகள் நடைபெறுகிறது.*



சென்னை, செம்மொழிப் பூங்காவில் வேளாண்மை – உழவர் நலத் துறையின் தோட்டக்கலை – மலைப்பயிர்கள் துறை சார்பில், நாளை (10ஆம் தேதி) முதல் நடைபெறவுள்ள மலர் கண்காட்சி முன்னேற்பாடு பணிகளை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் நேற்று முன்தினம் (07.02 .2024) பார்வையிட்டு ஆய்வு செய்தார். முதன்மைச் செயலாளர் செல்வி, அபூர்வா, வேளாண்மை – உழவர் நலத்துறை அரசு சிறப்பு செயலாளர் முனைவர் பொ.சங்கர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி.குமரவேல் பாண்டியன் மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.



நெல்லை மாவட்டம் திசையன்விளை சுடலையாண்டவர் திருமண மண்டபத்தில் திசையன்விளை, இராதாபுரம், நாங்குநேரி ஆகிய வட்டங்களில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் மூலம் தகுதி பெற்ற மாற்றுத்திறன் பயனாளிகளுக்கு சக்கர நாற்காலிகளை சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ஜெகதீஸ், சார் ஆட்சியர் அர்பித் ஜெயின், ஒன்றியச் செயலாளர் ஜோசப் பெல்சி உள்பட உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### ஆயிரம் மோடிகள் ஒன்றுசேர்ந்தாலும் நாட்டின் வளர்ச்சியில்

# நேரு, இந்திராகாந்தியின் பங்களிப்பை மறைத்துவிட முடியாது!

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.எஸ்.அழகிரி அறிக்கை



சென்னை, பிப்.9 -

ஆயிரம் மோடிகள் ஒன்று சேர்ந்தாலும் நாட்டின் வளர்ச்சியில் ஜவகர்லால் நேரு, இந்திரா காந்தி ஆகியோரின் பங்களிப்பை மறைத்துவிட முடியாது" என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.எஸ். அழகிரி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மக்களவையில் நேற்று முன்தினம் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, 'இந்திய மக்களின் திறமையை நேரு, இந்திராகாந்தி நம்பவில்லை, நாட்டின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்தனர்" என்று முழு பூசணிக்காயை சோற்றில் மறைக்கிற வகையில் கோயபல்ஸ் பிரச்சாரத்தை தொடங்கியிருக்கிறார்.

குஜராத்தின் முதல்வராக இருந்த போது ஆயிரக்கணக்கான அப்பாவி இஸ்லாமியர்கள் படுகொலை செய்யபட்ட போது, நீரோ மன்னன் பிடில் வாசித்ததைப் போல வேடிக்கை பார்த்து, சிறப்புப் புலனாய்வு விசாரணையிலிருந்து தப்பி, இன்றைக்கு இந்தியாவின் பிரதமராக 10 ஆண்டுகளை நிறைவு செய்ய இருக்கிறார். அதற்குத் துணையாக இருந்த அமித்ஷா இன்றைக்கு உள்துறை அமைச்சராக இருக்கிறார். இத்தகைய பொறுப்புகளை இவர்கள் ஏற்றிருப்பது இந்தியாவிற்கே கேடு விளைவிக்கக் கூடியதாகும். அதைத் தான் இந்தியா இன்றைக்கு அனுபவித்துக் கொண்டிருக்கிறது. பிரதமர் மோடி தொடர்ந்து வரலாற்றுத் திரிபு வாதங்களைச் செய்து வருகிறார். ஆயிரம் மோடிகள் ஒன்று சேர்ந்தாலும் இந்தியாவின் வளர்ச்சியில் பண்டித நேரு, இந்திரா காந்தி ஆகியோரது பங்களிப்பை இத்தகைய அவதூறு பிரசாரங்களி னால் மறைத்து விட முடியாது.

இந்தியாவின் பிரதமராக 1947 ஆகஸ்ட் 15 இல் நேரு பதவியேற்ற போது, அன்று நள்ளிரவில் அவர் ஆற்றிய உரை இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றுச் சிறப்பு மிக்க உரையாக பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டு இன்றைக்கும் மின்னிக் கொண்டிருக்கிறது. இந்தியாவின் பிரதமராக தில்லி செங்கோட்டையில் 17 முறை தேசியக் கொடியை ஏற்றி அற்புதமான உரைகளை நிகழ்த்தியவர் பண்டித நேரு. அதில் 1959 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று நிகழ்த்திய உரையை பிரதமர் மோடி திரித்துப் பேசியிருக்கிறார்.

இந்த உரையில் பிரதமர் நேரு 'ஐரோப்பா, ஜப்பான், சீனா, ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளின் வளர்ச்சிக்குக் காரணம் கடுமையான உழைப்பு தான். கடின உழைப்பு நமக்குப் புதிதல்ல, இதற்கு எதிரான சோம்பல் நமது இயல்பு அல்ல. அறிவாலும், கடின உழைப்பாலும் நாமும் முன்னேறலாம். உழைப்பில்லாமல் உயர்வில்லை" என்று பேசியதைத் திரித்துப் பேசுவது பிரதமர் பதவியில் இருக்கும் மோடிக்கு அழகல்ல. இத்தகைய பேச்சுகளின் மூலம் நேருவின் புகழ் குறையாது. மாறாக, மோடியின் தரம் தான் குறையப் போகிறது. இதற்குக் காரணம், காங்கிரஸ் கட்சி மீது அவருக்கு இருக்கும் காழ்ப்புணர்ச்சி தான்.

**மோடியின் கல் நெஞ்சம்!**

பிரதமர் பதவியை நேரு ஏற்பதற்கு முன்பாக 1943 இல் வங்காள பஞ்சத்தில் 30 லட்சம் இந்தியர்கள் மடிந்தனர். குண்டூசி கூட தயாரிக்க முடியாத அவலநிலையிலிருந்த இந்தியாவில் 1947 இல் பிரதமராக பதவியேற்றார். 17 ஆண்டுக் காலத்தில் ஒருநாளைக்கு காலை 6.30 மணி முதல் நள்ளிரவு வரை 16 மணி நேரம் இடைவெளி இல்லாமல் இந்தியாவை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்ல கடுமையாக உழைத்த பண்டித நேரு மீது இத்தகைய கடுமையான விமர்சனத்தை மேற்கொள்வது மோடியின் கல் நெஞ்சத்தையே காட்டுகிறது. மாட்டு வண்டிகள் நிறைந்திருந்த நாட்டை அணுசக்தி நாடாகவும், விண்கலங்களை ஏவுகின்ற நாடாகவும் மாற்றிக் காட்டியவர் பண்டித நேரு. பஞ்சத்திலும், பட்டினியிலும் உழன்று கொண்டிருந்த நாட்டில் விவசாய உற்பத்திக்கு முன்னுரிமை வழங்கினார். 1954 இல் 740 அடி உயரம் கொண்ட உலகின் மிகப்பெரிய அணையை பக்ராநங்கலில் கட்டி 15 லட்சம் ஏக்கர் நீர்ப்பாசனத்தைப் பெருக்கி, 13 லட்சம் டன் கோதுமை உற்பத்தியை செய்து உணவு உற்பத்தியில் தன்னிறைவு எய்தியவர் பண்டித நேரு. எண்ணற்ற அணைகள், நீர்ப்பாசன திட்டங்கள் என்று சாதனைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

தொழிற்சாலைகளை பொதுத்துறையில் துவங்கினார். ரூர்கேலா, பிலாய், துர்காபூர் ஆகிய இடங்களில் உருக்கு ஆலைகளை நிறுவினார். பொதுத்துறை நிறுவனங்களை நவீன இந்தியாவின் கோயில்கள் என்று அழைத்து மகிழ்ச்சி அடைந்தார். நேரு வளர்த்த பொதுத்துறையை இன்றைக்கு தனியார் முதலாளிகளுக்குத் தாரை வார்த்து பிரதமர் மோடி அழித்துக் கொண்டிருக்கிறார். 1960 இல் மோடி பிறந்த குஜராத் மாநிலத்தில் அங்லேஷ்வரில் முதல் முதலாக எண்ணெய் கிணறு தோண்டப்பட்டு அந்த சோதனையை நேரில் பார்த்து அளவற்ற மகிழ்ச்சி அடைந்தவர் பண்டித நேரு. அவரது கண்டுபிடிப்பு தான் ஓ.என்.ஜி.சி., ஆயில் இந்தியா, எரிவாயு உற்பத்திக்கு வழிவகுத்த பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன். அவர் தொடங்கிய ஏர் இந்தியா, இந்தியன் ஏர் லைன்ஸ், ஆயுள் காப்பீட்டு கழகம் போன்ற பொதுத் துறை நிறுவனத்தை தனியார் முதலாளிகளுக்கு அள்ளிக் கொடுத்த மோடி, பிரதமர் நேருவைப் பற்றிப் பேசுவதற்கு என்ன தகுதி இருக்கிறது?

**அணி சேரா நாடுகளின் அமைப்பு!**

1959 இல் கிண்டியில் ஐ.ஐ.டி. தொடங்கி, கான்பூர், தில்லி என 5 ஐ.ஐ.டி. நிறுவனங்களை உருவாக்கியவர் பிரதமர் நேரு. அறிவியல் துறையில் வளர்ச்சியின் மூலம் பாபா அணு ஆராய்ச்சி மையம், அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சிக் குழுமம் என இந்தியாவை வளர்த்தெடுத்தவர் பண்டித நேரு. இட ஒதுக்கீட்டின் மூலம் சமூக நீதியைக் காக்க 1951 இல் அரசமைப்புச் சட்டத்தில் முதல் திருத்தம் கொண்டு வந்தவர். தீண்டாமை குற்றச் சட்டம், குடியுரிமை சட்டத்தை நிறைவேற்றியவர். வெளியுறவுக் கொள்கையில் வல்லரசுகளுக்கு எதிராக அணிசேரா நாடுகளின் அமைப்பை உருவாக்கியவர்.

பண்டித நேருவை விமர்சனம் செய்கிற அதேநேரத்தில் அன்னை இந்திரா காந்தியையும் விமர்சனம் செய்திருக்கிறார். இந்தியாவின் பிரதமராக 15 ஆண்டுகள் பொறுப்பேற்று வங்கிகள் தேசியமயம், மன்னர் மானியம் ஒழிப்பு, வங்கதேச போர் வெற்றி, இந்தியாவின் முதல் அணுகுண்டு சோதனையை பொக்ரானில் நிகழ்த்தியவர், முதல் விண்வெளி பயணத்தின் மூலம் முதல் இந்தியராக ராகேஷ் சர்மாவை அனுப்பி சாதனை படைத்தவர். வெளிநாட்டுக் கொள்கையில் அரசியல் பேராண்மையோடு செயல்பட்டவர். இந்திய சோவியத் நட்புறவு ஒப்பந்தம் கண்டவர், வங்கதேச வெற்றிக்காக வாஜ்பாய் அவர்களால் துர்காதேவி என்று அழைக்கப்பட்டவர். இத்தகைய வரலாற்றுச் சாதனைகள் படைத்தவர்களை பிரதமர் மோடி கொச்சைப்படுத்துவதை நாட்டு மக்கள் எவரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

**தியாக வரலாறு இல்லாத மோடி!**


1947 ஆகஸ்ட் 15, ஜனவரி 26, 1950 ஆகிய இரு நாட்களை தவிர, தொடர்ந்து 22 ஆண்டுக்காலம் ஆர்.எஸ்.எஸ். தலைமை அலுவலகத்தில் தேசியக் கொடியை ஏற்றாத, அது ஒரு துண்டு துணி என்று கொச்சைப்படுத்திய பாரம்பரியத்தில் வளர்ந்த பிரதமர் மோடி, காங்கிரஸ் பாரம்பரிய தலைவர்களை இழிவுபடுத்துவதற்கு எந்தத் தகுதியும் கிடையாது. காங்கிரஸ் தலைவர்கள் செய்த தியாகங்களுக்கு இணையாக ஆர்.எஸ்.எஸ். வழிவந்த தலைவர்களில் எவரது பெயரையாவது மோடியால் ஒப்பிட்டுக் கூற முடியுமா ? அத்தகைய தியாக வரலாறு இல்லாத பின்னணியில் வந்த பிரதமர் மோடி, இந்தியாவின் விடுதலைக்காகவும், நவீன இந்தியாவின் வளர்ச்சிக்காகவும் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட பண்டித நேரு, இந்திரா பாரம்பரியத்தைச் சிதைத்து விட்டால் தலைவர் ராகுல் காந்தியின் எழுச்சியைத் தடுத்து விடலாம் என்று கனவு காண்கிறார். ஆனால், ராகுல் காந்தி அவர்கள் மக்களோடு மக்களாக, மக்களுடன் உரையாடி, மக்களின் உணர்வுகளை அறிந்து கொள்கிற மாபெரும் ஒற்றுமை பயணத்தை நீதி கேட்டு மேற்கொண்டு வருகிறார்.

எனவே, கடந்த 9 ஆண்டுகளில் 117 லட்சம் கோடி கடன் வாங்கி இந்திய பொருளாதாரத்தை திவாலான நிலைக்கு அழைத்துச் செல்கிற பிரதமர் மோடி அவர்களே, இந்திய மக்களின் வாழ்வாதாரத்தைச் சீர்குலைப் பதைத் தடுத்து நிறுத்த முயற்சி செய்யுங்கள். அதல பாதாளத்திற்கு சென்று கொண்டிருக்கிற ரூபாயின் மதிப்பைத் தடுத்து நிறுத்துங்கள். மக்களுக்காக ஆட்சி செய்யாமல் அதானி, அம்பானியை வளர்க்க முயற்சி செய்கிறீர்கள். தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடைகளைக் குவித்து ஊழலை வளர்க்காதீர்கள். இந்தியப் பொருளாதார பேரழிவுக்கு வித்திட்ட பிரதமர் மோடிக்கு 2024 மக்களவை தேர்தலில் மக்கள் நிச்சயம் பாடம் புகட்டுவார்கள்.

இவ்வாறு கே.எஸ்.அழகிரி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**காளி வி.எஸ்.வாசன்**
**பிப்ரவரி 9 (2007)**



மயிலாடுதுறை வட்டக் கழகத்தின் முதல் துணைச் செயலாளராகவும், நீண்டகாலம் காளி ஊராட்சி மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு அறப்போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த பெரும்பாலான போராட்டங்களில் கலந்துகொண்டு சுமார் பத்தொன்பது முறை சிறை சென்றவர்.

முரசொலி, நம்நாடு ஆகிய நாளிதழ்களில் சில ஆண்டுகள் சுருக்கெழுத்தராகவும் செய்தியாளராகவும் பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


# முதுநிலை கியூட் தேர்வை தமிழிலும் நடத்த வேண்டும்!

## மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கோரிக்கை



புதுடெல்லி, பிப். 9-

தி.மு.க. எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் விதி எண் 377 இன் கீழ் கியூட் தேர்வு தொடர்பான கோரிக்கையை முன் வைத்தார்.

அந்த கோரிக்கை வருமாறு:

முதுநிலை கியூட் 2024 தேர்வு மிகவும் கவலைக்குரியதாக உள்ளது. இதில் COQP11(சட்டம்) மற்றும் COQP12(எம்.பி.ஏ.) ஆகிய பாடத் தேர்வுகள் தற்போது ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளில் மட்டுமே நடத்தப்படுவதாக தெரிய வந்துள்ளது. இது, தமிழ் பேசும் மாணவர்கள் தேர்வில் பங்கேற்பதை தடுக்கிறது. அவர்களின் கல்வி வாய்ப்புகளை பாதிக்கிறது. நமது ஜனநாயக விழுமியங்களில் பொதிந்துள்ள சமத்துவம் மற்றும் சமூக நீதியின் அடிப்படைக் கொள்கைகளுக்கு ஏற்ப, மொழியியல் உள்ளடக்கத்தின் முக்கியத்துவத்தை ஒப்புக்கொள்வது அவசியம்.

தேசிய தேர்வு முகமை நடத்தும் நீட் தேர்வு கூட13 வெவ்வேறு இந்திய மொழிகளில் நடத்தப்படுகிறது. கல்வி வாய்ப்புகளில் நியாயமான மற்றும் சமமான அணுகலை உறுதிப்படுத்த வேண்டும்.

எனவே நான் குறிப்பிட்ட கியூட் தேர்வுகளை தமிழ் மற்றும் அரசியலமைப்பின் 8வது அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள பிற பிராந்திய மொழிகளில் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் கோரிக்கை விடுத்தார்.

### மோடி அரசின் 10 ஆண்டுகால செயல்பாடு! விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தவில்லை!

# கருப்பு அறிக்கை வெளியிட்டது காங்கிரஸ்!

## ஜனநாயகத்திற்கு பா.ஜ.க. அச்சுறுத்தல்: மல்லிகார்ஜுன கார்கே குற்றச்சாட்டு!

புதுடெல்லி, பிப்.9-

ஒன்றிய மோடி அரசின் பத்து ஆண்டுகால செயல்பாடு குறித்த கருப்பு அறிக்கையை காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்டுள்ளார்.

டெல்லியில் கருப்பு அறிக்கையை, வெளியிட்டு செய்தியாளர்களிடம் பேசிய கார்கே, ஜவஹர்லால் நேரு ஆட்சியில் உருவாக்கப்பட்ட பொதுத் துறை நிறுவனங்கள் குறித்து பிரதமர் மோடி ஏன் நாடாளுமன்றத்தில் பேசவில்லை? என கேள்வி எழுப்பினார்.

மேலும், நரேந்திர மோடி ஆட்சியில் உருவாக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்கள் எத்தனை? என்றும் அவர் வினவினார்.

விவசாயிகள் நலனுக்காக ஒன்றிய பா.ஜ.க. அரசு எந்த நன்மையும் செய்யவில்லை என புகார் கூறிய கார்கே, வேலைவாய்ப்பு குறித்து பா.ஜ.க. அரசு எதுவும் பேசுவதில்லை என்றும் குற்றஞ் சாட்டினார்.

நிதி பகிர்வில் பா.ஜ.க. ஆட்சி அல்லாத மாநிலங்களுக்கு, பாகுபாடு காட்டுவதாகவும் விமர்சித்தார்.

ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தலாக மோடி அரசு உள்ளதாகவும், இதுவரை 411 எம்.எல்.ஏ.க்களை பா.ஜ.க. கட்சியில் இணைத்து, அவர்கள் மூலம் பல மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சியை கவிழ்த்ததாகவும் மல்லிகார்ஜுன கார்கே குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேரு, இந்திரா காலத்தில் இருந்த விலைவாசி குறித்து பிரதமர் மோடி பேசுகிறார்.

ஆனால் தற்போது அதிகரித்துள்ள விலைவாசி உயர்வைகட்டுப்படுத்தஎன்ன நடவடிக்கை எடுத்தீர்கள்?

அது குறித்து ஏன் பிரதமர்மோடி பேசவில்லை? விவசாயிகளின் வருமானத்தை இரு மடங்காக ஆக்குவேன் என பா.ஜ.க. அரசு கூறியது. இது குறித்து மக்களவையில் கேள்வி எழுப்பினாலும் முறை யான பதில் கிடைப்ப தில்லை.

பா.ஜ.க.வுக்கு மக்களின் ஆதரவு இருந்தால் அனைத்து மாநிலங்களிலும் பா.ஜ.க.விற்கு முதலமைச்சர்கள் இருந்திருப்பார்கள்.

ஆனால் எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்கி பல மாநிலங்களில் காங். அரசை பா.ஜ.க. கவிழ்த்துள்ளது. விலைக்கு வாங்கும் காங். பா.ஜ.க.க்களை வைத்தே, நேரு, இந்திரா, சோனியா, ராகுல் என அனைவரையும் வசைபாடுகின்றனர் என மல்லிகார்ஜுன கார்கே குறிப்பிட்டார்.

### தி. மு. க. தொழிலாளர் அணி

# திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அமைப்பாளர் நியமனம்

## தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு

தி.மு.க. தொழிலாளர் அணியின் திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அமைப்பாளர் இ.பிச்சைக்கண்ணு மறைவெய்திய காரணத்தால், **திரு.அன்னை க.சீனுவாசன்** (19, பொட்டிநாயுடு தெரு, 3வது தெரு, வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம் - 604 408.) அவர்கள் திருவண்ணாமலை வடக்கு மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட தொழிலாளர் அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| | |
|---|---|
| **"அண்ணா அறிவாலயம்"** | **பிடிசி ஜி.செல்வராஜ்** |
| சென்னை - 18 | செயலாளர், |
| நாள்- 8.2.2024 | தி.மு.க. தொழிலாளர் அணி |

## வாட்ஸ் அப்பில் வந்த செய்தி !



### நிதியை தராவிடில் 'தனிநாடு' கோரிக்கை எழுப்புவோம்

மத்திய அரசு தொடர்ந்து நிதி தராமல் இழுத்தடித்தால், தென்னிந்திய மாநிலங்கள் இணைந்து தனிநாடு கோரிக்கையை எழுப்புவோம் என்று கர்நாடக எம்.பி டி.கே. சுரேஷ் பேசியது அரசியல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இடைக்கால பட்ஜெட்டை விமர்சித்த அவர், தென்னிந்திய மாநிலங்களுக்கு ஜிஎஸ்டி மற்றும் நேரடி வரிகளில் சரியான பங்கை மத்திய அரசு சரியாக வழங்குவதில்லை. இந்த மாநிலங்கள் அநீதியை சந்தித்து வருவதாக கூறியுள்ளார்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (07.02.2024) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ. கணேசன் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் கீழ் செயல்படும், தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களின் படைப்புத் திறன்களை வெளிக்கொணரும் வகையில் மாநில அளவில் வெற்றி பெற்ற பயிற்சியாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் ரொக்க பரிசுக்கான காசோலைகளை வழங்கினார். உடன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.






திருச்சி தேசிய கல்லூரியில் விளையாட்டில் மறுமலர்ச்சிக்கான சர்வதேச மாநாட்டை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். அமைச்சர்கள் கே.என். நேரு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி உள்ளிட்டோர் உடனுள்ளனர்.

## விளையாட்டு அறிவியல் துறையில்

# தமிழ்நாட்டை உலக அளவில் எடுத்துச் செல்ல நடவடிக்கை!

## திருச்சியில் நடைபெற்ற – ‘விளையாட்டில் மறுமலர்ச்சிக்கான சர்வதேச மாநாட்டில்’ அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உறுதி!

**திருச்சி, பிப்.9 –**

**‘‘விளையாட்டு அறிவியல் துறையில் தமிழ்நாட்டை உலக அளவில் எடுத்துச் செல்ல அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது’’ என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருச்சியில் நடைபெற்ற விளையாட்டில் மறுமலர்ச்சிக்கான சர்வதேச மாநாட்டில் உரையாற்றும்போது கூறினார்.**

விளையாட்டில் மறுமலர்ச்சிக்கான சர்வதேச மாநாடு (International Congress On Renaissance in Sports) திருச்சி தேசிய கல்லூரியில் 7ஆம் தேதி அன்று தொடங்கி 11 ஆம் தேதி வரை நடைபெறுகிறது. அறிவியல் துணையுடன் விளையாட்டில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவது குறித்த இந்த மாநாட்டில் உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வல்லுநர்கள் பலர் கலந்துகொண்டனர். இந்த மாநாட்டை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கிவைத்து உரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:

“அனைவருக்கும் இனிய மாலை வணக்கம். ‘விளையாட்டில் மறுமலர்ச்சிக்கான சர்வதேச மாநாடு’ நமது தமிழ்நாட்டில், திருச்சியில் நடைபெறுவது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மாநாடு இவ்வளவு சிறப்பாக நடக்க உழைத்த அனைவருக்கும் இந்த நேரத்தில் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் விளையாட்டு வரலாற்றில் நாம் மிகவும் முக்கியமான காலகட்டத்தில் உள்ளோம். தொழில்நுட்ப முன்னேற்றம், சமூக மாற்றங்கள் உள்ளிட்ட காரணங்களால் விளையாட்டுக் களங்கள் தொடர்ந்து பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வரும் நேரத்தில், நாம் பல சவால்களைச் சந்தித்து, பல புதுமைகளை மேற்கொண்டு வருகிறோம்.

இந்த மாநாட்டின் கருப்பொருள், ‘நவீன விளையாட்டுக்களில் மறுமலர்ச்சிக்கான திட்டங்கள், சவால்கள் மற்றும் வாய்ப்புகள்’ என்பதாகும். இதன் பொருள் விளையாட்டில் மறுமலர்ச்சி உண்டாக வேண்டுமென்றால், நாம் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் என்பதுதான். அதை எப்படி மேற்கொள்வது என்பதை ஆராய்வதற்குத்தான் நாம் அனைவரும் இங்கே கூடியிருக்கிறோம்.

### ஒன்றிணைந்து உழைக்க வேண்டும்!

இதைச் சாத்தியப்படுத்துவதற்கான முதல்படி, புதுமையான மற்றும் செயல்படுத்தக் கூடிய வடிவிலான திட்டங்களைத் தீட்டி, அவற்றை நடைமுறைப்படுத்தும்போது நமக்கு ஏற்படும் சவால்களை எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இதற்காக விளையாட்டு, அறிவியல், தொழில்நுட்பம், உளவியல், பொருளியல் போன்ற பல்துறை நிபுணர்கள் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும்.

இதன் ஒரு பகுதியாக, விளையாட்டு மற்றும் அறிவியலை ஒன்றிணைத்துச் செயல்படுவதற்கு, தமிழ்நாடு அரசின் விளையாட்டுத் துறை சார்பாக ‘டாஸ்கான் 2023’ எனும் சர்வதேச விளையாட்டு அறிவியல் மாநாட்டை கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நடத்தினோம். அதில், உலகம் முழுவதிலும் இருந்து விளையாட்டு வல்லுநர்கள், வீரர்கள், பயிற்சியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### மதுரையில் சர்வதேச விளையாட்டு அறிவியல் மையம்!

அறிவியல், தொழில்நுட்பம், விளையாட்டு ஆகிய மூன்றையும் ஒரே புள்ளியில் இணைக்க, கருத்துகளும் ஆலோசனைகளும் பரிமாறிக்கொள்ளப்பட்டன. மேலும் மதுரையில், சர்வதேச விளையாட்டு அறிவியல் மையம் ஒன்றை ‘தமிழ்நாடு புத்தாக்க முன்னெடுப்புத் திட்ட’த்தின் கீழ் அமைத்துள்ளோம்.

இந்த மாநாட்டில் பல்வேறு தலைப்புகளின் கீழ் விவாதங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன. விளையாட்டில் ஏற்பட்டுள்ள டிஜிட்டல் புரட்சி முதல் விளையாட்டுத் துறை சார்ந்த சமீபத்திய ஆய்வுகள் வரை நிபுணர்கள் தங்களின் கருத்துகளை வழங்க இருக்கிறார்கள். விளையாட்டுத் துறையில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள், அதற்கேற்றாற் போன்ற புதுமையான பயிற்சி முறைகள் மற்றும் அவற்றைச் செயல்படுத்துவதில் உள்ள சவால்களை எப்படி எதிர்கொள்வது போன்ற விஷயங்கள் குறித்துப் பேசப்பட உள்ளன.



### விளையாட்டுச் சூழலை ஏற்படுத்த வேண்டும்!

இந்த மாநாட்டின் மூலம் பரஸ்பரம் சிந்தனைகளைப் பரிமாறிக் கொள்ளுதல், புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுதல் ஆகியவற்றை மேற்கொள்ளும் அதே சமயத்தில், இந்த மாநாட்டின் முக்கிய நோக்கத்தையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அனைவரையும் உள்ளடக்கிய, அனைவரையும் சமமாக பாவிக்கும், தங்கு தடையற்ற வளர்ச்சி ஆகியவற்றைக் கொண்ட ஒரு விளையாட்டுச் சூழலை நாம் ஏற்படுத்த வேண்டும் என்பதே அது!

இந்த மாநாட்டில் சுமார் 40 நாடுகளில் இருந்து வந்துள்ள விளையாட்டுத் துறை அறிஞர்கள் தங்களின் அனுபவத்தையும் நிபுணத்துவத்தையும் பகிர்ந்துகொள்ள இருக்கிறார்கள். இந்தத் தருணத்தில், விளையாட்டுத் துறை மேம்பாட்டுக்காக தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பற்றிக் கூறுவது பொருத்தமாக இருக்குமென்று நினைக்கிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழ்நாடு இன்று விளையாட்டுத் துறைக்கான தலைநகரமாக வளர்ந்து வருகிறது. தமிழ்நாட்டை மட்டுமல்ல, இந்திய ஒன்றியத்தையே உலகின் விளையாட்டுத் தலைநகரமாக மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில்தான் தமிழ்நாடு அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன் ஒரு பகுதியாகத்தான் ஏராளமான சர்வதேசப் போட்டிகள், தேசியப் போட்டிகள் ஆகியவற்றை தமிழ்நாட்டில் நாம் தொடர்ந்து நடத்தி வருகிறோம்.

> **“இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழ்நாடு இன்று விளையாட்டுத் துறைக்கான தலைநகரமாக வளர்ந்து வருகிறது. தமிழ்நாட்டை மட்டுமல்ல, இந்திய ஒன்றியத்தையே உலகின் விளையாட்டுத் தலைநகரமாக மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில்தான் தமிழ்நாடு அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன் ஒரு பகுதியாகத்தான் ஏராளமான சர்வதேசப் போட்டிகள், தேசியப் போட்டிகள் ஆகியவற்றை தமிழ்நாட்டில் நாம் தொடர்ந்து நடத்தி வருகிறோம்.”**

### 6-வது கேலோ இந்தியா போட்டிகள்!

இதோ இப்போதுகூட, 6வது கேலோ இந்தியா போட்டிகளை நாம் நடத்தி முடித்து ஒரு வாரம் ஆகிறது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த சுமார் 5 ஆயிரத்து 400க்கும் மேற்பட்ட வீரர்களை இங்கே தங்க வைத்து, உபசரித்து, கவனித்துக் கொண்டது. சென்னை, திருச்சி, கோவை மற்றும் மதுரை ஆகிய நகரங்களில் அந்தப் போட்டிகள் 12 நாட்களுக்கு நடைபெற்றன. மேலும் பதக்கப் பட்டியலில் தமிழ்நாடு இரண்டாவது இடம் பிடித்தது. ‘கேலோ இந்தியா’ போட்டி வரலாற்றில், தமிழ்நாடு பதக்கப் பட்டியலில் முதல் மூன்று இடங்களுக்குள் வருவது இதுவே முதல் முறை என்பதைப் பெருமையுடன் நான் இங்கே கூற விரும்புகிறேன்.

### மணிப்பூர் வீரர்களுக்கு முதல்வர் அழைப்பு!

விளையாட்டு வீரர்களுக்கு ஒரு தேவை என்றால், உடனடியாகக் களத்தில் இறங்கி உதவுகின்ற அரசுதான் நமது ‘திராவிட மாடல் அரசு’ மற்றும் நமது முதலமைச்சர் அவர்கள். சமீபத்தில், மணிப்பூரில் ஏற்பட்ட கலவரங்களால் அங்குள்ள விளையாட்டு வீரர்கள் முறையாகப் பயிற்சிகளை மேற்கொள்ள முடியவில்லை. எனவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்த வீரர்களுக்கு தமிழ்நாட்டில் வந்து பயிற்சி பெற அழைப்பு விடுத்தார்கள்.

அந்த அழைப்பை ஏற்று 15 வாள்வீச்சு வீரர்கள் தமிழ்நாட்டுக்கு வந்து பயிற்சி பெற்றார்கள். அவர்களுக்கான விமானப் பயணச் செலவு, உணவு, தங்குமிடம் போன்ற அனைத்து செலவினங்களையும் நமது கழக அரசே ஏற்றுக்கொண்டது. அப்படி பயிற்சி பெற்ற இரு வீரர்கள், நடந்து முடிந்த ‘கேலோ இந்தியா’ போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்று சாதனை படைத்தார்கள். அவர்கள் பதக்கம் வென்றாலும், அதற்குக் காரணமும் நம்முடைய தமிழ்நாடு அரசுதான்.

அது மட்டுமல்ல. நாம் 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டி, ஆசியக் கோப்பை ஹாக்கி போட்டி, ஸ்குவாஷ் உலகக் கோப்பை போட்டி, உலக அலைச்சறுக்கு போட்டி, சைக்கிள் பந்தயப் போட்டி, தேசிய ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டி, சென்னை செஸ் மாஸ்டர்ஸ் ஆகிய போட்டிகளையும் வெற்றிகரமாக நடத்திக் காட்டினோம்.

### மாற்றுத்திறனாளி வீரர்களும் சாதிக்க உதவி!

மேலும், விளிம்புநிலையில் உள்ள பொருளாதாரத்தில் நலிவடைந்த விளையாட்டு வீரர்களுக்கு உதவும் வகையில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ‘தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை’யை ஏற்படுத்தினார்கள். அந்த அறக்கட்டளையின் மூலம் இதுவரை 100 வீரர்களுக்கு ரூ.18 கோடி நிதி உதவி அளித்துள்ளோம். இதில் இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், இவ்வாறு உதவி பெற்றுச் செல்லும் ஒவ்வொரு வீரரும் பதக்கத்துடன் திரும்பி வந்து எங்களைச் சந்திக்கிறார்கள். எல்லா விளையாட்டு வீரர்களையும் போல, மாற்றுத் திறனாளி வீரர்களும் விளையாட்டுத் துறையில் சாதிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அவர்களுக்கும் தமிழ்நாடு அரசு நிதி உதவி அளித்து ஊக்கப்படுத்தி வருகிறது.

மேலும், விளையாட்டுத் துறையில் பொதுமக்களையும் ஈடுபடுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் ‘தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை’ விளையாட்டுப் போட்டிகளை நடத்தினோம். அதில் சுமார் 3.75 இலட்சம் பேர் பங்கேற்று தங்கள் விளையாட்டுத் திறமைகளை வெளிப்படுத்தினார்கள். அந்தப் போட்டி முதல் முறையாக ஐந்து பிரிவுகளில் நடத்தப்பட்டது. அந்தப் போட்டிகள் மூலம், கிராமப்புறங்களில் உள்ள திறமை மிக்க விளையாட்டு வீரர்களை அடையாளம் காண முடிந்தது.

### மும்பையில் இன்று விழா!

இது மட்டுமல்லாமல், கடந்த டிசம்பர் மாதம், ‘விளையாட்டுத் துறையை மிகச் சிறப்பாக வளர்த்தெடுக்கும் மாநிலம்’ என்ற விருதை இந்தியத் தொழில்துறைக் கூட்டமைப்பு தமிழ்நாட்டுக்கு வழங்கியது. இன்னொரு முக்கியமான செய்தியையும் நான் இங்கே பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். ‘தி இந்து’ ஆங்கிலப் பத்திரிகைக் குழுமத்தில் இருந்து வெளிவரும் ‘ஸ்போர்ட்ஸ் ஸ்டார்’ இதழ், ‘விளையாட்டுத் துறையைச் சிறப்பாக ஊக்கப்படுத்தி வரும் மாநிலம்’ என்ற அங்கீகாரத்தை தமிழ்நாட்டுக்கு வழங்கியுள்ளது. விளையாட்டுத் துறையில் தமிழ்நாடு அரசுக்கு உள்ள ஈடுபாட்டையும், அதற்குச் செலுத்துகின்ற உழைப்பையும் இந்த விருதுகள் பிரதிபலிக்கின்றன. அந்த விருது பெறும் விழா மும்பையில் நாளை (இன்று) நடைபெற உள்ளது. அதற்கு நாங்கள் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

விளையாட்டுத் துறையில் தமிழ்நாடு பல சாதனைகளைச் செய்து வரும் இந்த வேளையில், இங்கு நடைபெறும் இந்த மாநாடு, தமிழ்நாட்டின் விளையாட்டுத் துறையை இன்னும் பல உயரங்களுக்கு எடுத்துச் செல்லும் என்பதில் எனக்குச் சிறு அளவும் சந்தேகமில்லை. உடல்நலம் மற்றும் உடற்பயிற்சி ஆகியவற்றை ஊக்கப்படுத்தும் முகமாக, விளையாட்டு அறிவியல் துறையில் நமது மாநிலத்தை உலக அளவில் எடுத்துச் செல்ல இந்த மாநாடு உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். இந்த மாநாட்டின் வெற்றிக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர்கள் சவுந்திர பாண்டியன், காடுவெட்டி தியாகராஜன், ஸ்டாலின் குமார், முத்துராஜா, பழனியாண்டி, கதிரவன், திருச்சி மாநகர மேயர் அன்பழகன், துணை மேயர் திவ்யா, திருச்சி மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார், தேசிய கல்லூரி செயலர் ரகுநாதன், கல்லூரி முதல்வர் கே.குமார், விளையாட்டு வீரர்கள் ஹாக்கி ஒலிம்பிக் வீரர் பாஸ்கரன், நீச்சல் வீரர் ஸ்ரீராம் சீனிவாசன், கேலோ ரோட் சைக்கிளிங் வீரர் கிஷோர், குத்துச்சண்டை வீராங்கனை அக்ஷயா, மல்லர் கம்ப வீரர் ஹரீஷ் ராகவ், ஈட்டி எறிதல் வீரர் கோபிநாதன் மற்றும் ஐ.சி.ஆர்.எஸ் மாநாட்டு அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



திருக்கோயிலூர் சட்டமன்றத் தொகுதி, தி. எடையார் ஊராட்சி மன்றத் தலைவர் சுந்தரின் தந்தை சுப்பையா மறைவுக்கு கழக துணைப் பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி அஞ்சலி செலுத்தி அவரைப் பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம். எல்.ஏ., மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு.தங்கம், ஒன்றியச் செயலாளர் மி.வி.ஆர்.சு.விசுவநாதன், பேரூர் செயலாளர் பூக்கடை கணேசன், ஒன்றிய குழுத் தலைவர் ஓம்.சிவ சக்திவேல், பொதுக்குழு உறுப்பினர் பக்தவச்சலம், வழக்கறிஞர் விஜயபாபு, ஒன்றிய நிர்வாகிகள் கிருஷ்ணமூர்த்தி, மோகன்ராஜ், பனக்பாக்கம் சீனு, சி.டி.பாலு, துணைத் தலைவர்கள் நிர்மல் ராஜ், ஜோதி, தகவல் தொழில்நுட்ப அணி ப. அன்பரசு, கிருஷ்ணராஜ் உள்ளிட்ட பலர் அஞ்சலி செலுத்தினர்.

### ஒன்றிய அரசு தமிழ்நாட்டை வஞ்சிக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள்!

# நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு இடம் கூட பா.ஜ.க.வுக்கு கிடைக்காது!

## நெல்லையில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!



நெல்லை, பிப். 9 -

ஒன்றிய அரசு தமிழகத்திற்கு உரிய நிதியை வழங்காமல் புறக்கணிப் பதை கண்டித்து நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் நெல்லை டவுனில் ஒன்றிய அரசின் நிதி பங்கீடு குறித்து பொதுமக்களுக்கு விவரிக்கும் வகையில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான், தலைமைக் கழக வழக்கறிஞர் சூரியா வெற்றி கொண்டான் ஆகியோர் முன்னிலையில் மக்களுக்கு அல்வா கொடுக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் ஒன்றிய அரசைக் கண்டித்து முழக்கங்கள் எழுப்பி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து அந்த பகுதிகளில் உள்ள கடைகள், வியாபாரிகள், வணிக நிறுவனங்களுக்கு, அல்வா கொடுத்து ஒன்றிய அரசு தமிழகத்திற்கு நிதி கொடுக்காமல் வஞ்சிப்பதை விளக்கி கூறினர்.

பின்னர் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

ஒன்றிய அரசு தமிழகத்தை வஞ்சிக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னால் மோடி அரசு மதுரையில் எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார். ஆனால் 5 ஆண்டு காலம் முடிந்தும் எந்த நடவடிக்கையும் இல்லை. மோடி எய்ம்ஸ் கல்லூரிக்காக நட்டிய ஒற்றை செங்கலை வைத்து

கழக இளைஞர் அணி செயலாளர் - அமைச்சர் ஸ்டாலின் அவர்கள் பிரச்சாரம் செய்து தி.மு.க. அரசு ஆட்சிக்கு வந்துவிட்டது. மோடி அரசுக்கு கொஞ்சமாவது உணர்வு இருந்தால் தமிழக மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம் செய்தார் என்ற சொரணை ஏற்பட்டு கொஞ்சமாவது நிதி வழங்கி எய்ம்ஸ் கல்லூரியை கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இன்னும் ஒன்றிரண்டு நாட்களில் மோடி அரசின் ஆயுட்காலமே முடிய போகிறது. இதுவரையிலும் மதுரை எய்ம்ஸ் கல்லூரிக்கு நிதி ஒதுக்கவில்லை.

நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் வரலாறு காணாத அளவுக்கு பெய்த கனமழை வெள்ளத்தில் மக்கள் பாதிப்புக்கு உள்ளானார்கள். அதற்காக நாடே கண்ணீர் விட்டது. ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்வதற்காக வந்து படம் போட்டார். கோவிலுக்கு சென்ற அவர் உண்டியலில் பணத்தை போடாதீர்கள் என சொல்லி விட்டு சென்றார். வெள்ள நிவாரணத்திற்காக சல்லி பைசா கூட தரவில்லை. ஒன்றிய அரசுக்கு தமிழக அரசு வரியாக வழங்கும் 1 ரூபாய்க்கு 29 பைசா மட்டுமே தமிழகத்திற்கு கொடுக்கிறது.

ஒன்றிய அரசிடம் தமிழகம் பிச்சை கேட்கவில்லை. அதிகாரத்துடன் உரிமையை தான் கேட்கிறது. எங்களிடமிருந்து பறித்து வைத்துள்ள 71 சதவீதத்தில் இருந்து 10 சதவீதத்தை கொடுங்கள் என்று தான் நாங்கள் கேட்கிறோம். உத்திரப்பிரதேசத்தில் 1 ரூபாய் செலுத்தும் வரிக்கு 2 ரூபாயாக திருப்பிக் கொடுக்கிறார்கள். தமிழகத்தில் செலுத்தும் 1 ரூபாய் வரிக்கு 29 பைசா மட்டுமே தரப்படுகிறது

எய்ம்ஸ் மருத்துவமனை வருகிறது என்று சொல்லி அல்வா கொடுத்து விட்டார்கள். நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ள நிவாரணத்திற்கும் ஒன்றிய அரசு அல்வா கொடுத்துவிட்டது. ஒன்றிய அரசு கொடுத்த அல்வாவிற்கு பதில் சொல்லும் விதமாக அல்வாவிற்கு பெயர் பெற்ற திருநெல்வேலியில் இருந்து மோடிக்கு இந்த தேர்தலில் மக்கள் அல்வா கொடுக்கப் போகிறார்கள். ஒரு இடம் கூட இந்த தேர்தலில் பா.ஜ.க.விற்கு கிடைக் காது. என்பதை உணர்த்தும் வகையில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

ஜி.எஸ்.டி. விவகாரம் தொடர்பாக ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசுவது பித்தலாட்ட உரை, ஏமாற்றும் செயல், நிர்மலா சீதாராமனின் கணவரே இந்தியாவின் பொருளாதாரம் என்ன என்பதை தெளிவாக சொல்லியுள்ளார். கணவரின் பேச்சைக் கேட்டு நிர்மலா சீதாராமன் நடந்தால் நல்லது. அண்ணாமலை முதல்வர் அவர்கள் வெளிநாட்டுப் பயணம் குறித்து வெள்ளை அறிக்கை கேட்பதற்கு பதில் வெள்ளரிக்காய் வேண்டுமானால் வாங்கி கொடுக்கலாம். வெள்ளை அறிக்கை எல்லாம் கொடுக்க முடியாது. திருநெல்வேலியில் அதிகம் வெள்ளரிக்காய் கிடைக்கிறது. வரும்பொழுது நான் வாங்கிக் கொண்டு வருகிறேன்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி தெரிவித்தார்.



தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மதுரை மாவட்டம் வடக்கு வட்டம் சாத்தமங்கலம் பகுதியில் உள்ள தமிழறிஞர் மொழி ஞாயிறு தேவநேயப்பாவாணர் அவர்களின் 122வது பிறந்த நாளை முன்னிட்டு அன்னாரது மணிமண்டபத்தில் உள்ள திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன், மதுரை மாநகராட்சி மேயர் திருமதி. இந்திராணி பொன்வசந்த், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன் ஆகியோர் உள்ளனர்.

### ரூ.3,440 கோடி முதலீடுகளுக்கான ஒப்பந்தங்களுடன்

# ஸ்பெயினிலிருந்து திரும்பிய நமது முதலமைச்சருக்கு பாராட்டுகள்! வாழ்த்துகள்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, பிப். 9 -

ஸ்பெயின் நாட்டுக்குச் சென்று ரூ.3,440 கோடி தொழில் முதலீடுகளுக்கான ஒப்பந்தங்களுடன் வெற்றிகரமாகத் திரும்பிய தமிழ்நாடு முதலமைச்சர் - சமூகநீதிக்கான சரித்திர நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பாராட்டுதலையும், வாழ்த்துகளையும் தெரிவித்து திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

இந்தியத் திருநாட்டின் ஒப்பற்ற ஆளுமை நிறைந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது; அதற்குக் காரணம், அதில் மூன்று ஆண்டுகளாக நடைபெற்றுவரும் 'திராவிட மாடல்' ஆட்சி, முன்னால் நடைபெற்ற திராவிட ஆட்சிகளைத் தொடர்ந்து நீதிக் கட்சி ஆட்சி, அறிஞர் அண்ணா, கலைஞர் ஆட்சிகளின் வழித்தடத்தில் மேலும் வலிவாகவும், பொலிவாகவும் பீடுநடை போட்டு, ஒவ்வொரு துறையிலும் சாதனைகளைச் சரித்திரங்களாக்கி வருவதை நம் நாடு மட்டுமல்ல, உலகமே கண்டு வியந்து பாராட்டுகிறது.

ஏராளமான பேர் மனுவின் விதியை மாய்த்து, எல்லோருக்கும் கல்விக் கண்ணை அதிலும் காலங்காலமாய் கடைக்கோடியில் தடுப்புச் சுவர் அமைத்துத் தாண்டிவர முடியாத தடைகளை உருவாக்கி, தடுக்கப்பட்ட மகளிரைக் கல்வியை பாய்ந்தோடும் ஆறாகக் காட்டி, அவர்களும் பயனுறும் வகையில் வழங்கிய பரந்துபட்ட பயன் காரணமாக, வேலை வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்திருப்போர் எண்ணிக்கை ஒவ்வொரு குடும்பத்திலும் அதிகம்!

முந்தைய நாள் உடலுழைப்புக்காரர்களாகவே இருந்த கோடானு கோடி ஒடுக்கப்பட்டோர் சமூகமாக இருந்த நமது சமூகம் கற்றுத் தேர்ந்து, வேலை வாய்ப்புக் கிட்டவில்லையே என்ற ஏக்கப் பெருமூச்சு விட்டு நின்றிடும் வேளையில், அவர்களது வாழ்வாதாரம் வளம்படுவதற்கான வேலை வாய்ப்புக்கு முக்கிய வழி, தொழில் வளத்தைப் பெருக்குவதே! அதற்கு உள்நாட்டு முதலீடுகள் மட்டும் போதாது; வெளிநாடுகளில் உள்ளவர்களின் புதிய தொழில் முதலீடுகளும் வரவேண்டும். அதனைப் பெற அனைத்து சூழல்களையும், தேவைகளையும் உருவாக்கி, அவர்களது நன்னம்பிக்கையைப் பெற்று, வளர்ச் சியை, வாயால் வரையாது, செயலால் நிலைநிறுத்தும் செயற்பாடுகளுக்காகவே உலக நாடுகளின் தொழில் முனைவோர், தங்கள் நாட்டின் முதலீடு உற்பத்திச் செலவினங்களைவிட, இந்தியா போன்ற நாடுகளில் செலவினம் குறைவது, தரத்தோடு பொருள்களைத் தயாரித்துத் தருவதில் முதல் மாநிலமாக தமிழ்நாடுதான் விளங்குகிறது என்ற பரவலான நம்பிக்கையை, நமது முதலமைச்சர் உருவாக்கிவிட்டதால், உலகின் பல நாடுகள் தமிழ்நாட்டிற்கு வந்து முதலீடு செய்ய ஆயத்தமாகியுள்ளன!

**தொழில்துறையில் முதல் மாநிலமாகத் தமிழ்நாடு!**

அதைப் பக்குவமாகப் பயன்படுத்தி, தமிழ்நாட்டில் சென்ற மாதங்களில் உலக முதலீடுகளை ஈர்க்கும் பயனுறு மாநாட்டை நடத்தி, பல தொழில் ஒப்பந்தங்களை தமிழ்நாடு 'திராவிட மாடல்' அரசு ஈர்த்தது. நிறைய பல கோடி முதலீடுகள், ஒப்பந்தங்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து, நமது முதலமைச்சர் தனது தொழில் துறை அமைச்சர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஸ்பெயின் நாட்டுக்குச் சென்று, சுமார் ரூ.3,440 கோடி முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களைப் போட்டு, வெற்றிகரமான பயணமாக தனது குழுவின் பயணத்தை மிகச் சிறப்பாக செய்து முடித்துத் திரும்பியுள்ளார்!

**குறுகிய பயணம் என்றாலும், பயனுறு பயணம்!**

இந்த முயற்சிகளை அமெரிக்காவின் பிரபல நாளிதழான "நியூயார்க் டைம்ஸ்" பத்திரிகை வெகுவாகப் பாராட்டிச் செய்திக் கட்டுரைபோல் வெளியிட்டிருப்பது 'திராவிட மாடல்' ஆட்சி எப்படி தமிழ்நாட்டில் மிகச் சிறப்பான செயல்திறத்துடன் சாதிக்கும் ஆட்சியாக இருக்கிறது என்பதற்கான சிறந்த சாட்சியம் ஆகும்!

தமிழ்நாடு இப்படி தொழில் துறையில் சிறந்து மேலோங்கி வளர்ந்து வருவதற்கு முக்கிய காரணம், இங்குள்ள ஓர் ஆட்சி நிலையான ஆட்சி (Stable Government) அது மட்டுமா? திறமையான வெளிப்படையான ஆட்சி (Able and Transparent Government) என்ற பெருமையையும் பெற்றுள்ளது!

**'நியூயார்க் டைம்ஸ்' பாராட்டுகிறது!**

'நியூயார்க் டைம்ஸ்' நாளேடு ஒரு முக்கிய காரணத்தைச் சுட்டிக்காட்டி, தனது கணிப்பினை உலகுக்குப் புரிய வைக்கிறது. இங்கு, தமிழ்நாடு அரசின் கீழ் அமைந்துள்ள மனித வள மேலாண்மை மிகச் சிறப்பாக செயல்படுகிறது என்பதையும் சுட்டி க்காட்டியுள்ளது! தொழில் முனைவோருக்கான தக்க பாதுகாப்பு பணியாற்றுவோருக்கும், முதலீடு செய்வோருக்கும் இடையில் அரசு நல்லதோர் பாலமாகவும் செயல்பட்டு, இரு சாராருக்கும் இணக்கமான செயலை ஒவ்வொரு துறையிலும் ஏற்படுத்திச் செல்வதே மூலகாரணம்.

**சமூகநீதிக்கான சரித்திர நாயகர்!**

ஸ்பெயின் நாட்டிலிருந்து 'திராவிடன் வந்துள்ளார்' என்று 'திராவிடம்' பற்றி முன்பு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் (நாவலர், பேராசிரியர் படிக்கும்போது) தமிழ் மன்றத்தில் பெருமையுடன் பேசினார் மொகஞ்சதாரோ, ஹரப்பா பற்றிப் பேசிய ஹீராஸ் பாதிரியார்.

அந்தப் பண்பாட்டு உறவை நமது ஒப்பற்ற 'திராவிட மாடல்' முதலமைச்சர் சமூகநீதிக்கான சரித்திர நாயகர் மீண்டும் புதுப்பித்துள்ளார் அங்குள்ள நம் மக்களிடம் உரையாற்றியும்கூட!

"திராவிடம் வெல்லும்
நாளைய வரலாறு என்றும் சொல்லும்!"

வெற்றியோடு திரும்பிய நமது முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், அவரது குழுவினருக்கும் நமது நல்வர வேற்பும், பாராட்டும், வாழ்த்துகளும்!

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### 'திராவிட மாடல்' ஆட்சியின் முற்போக்குத் திட்டங்களால்

# தமிழ்நாட்டில் உயர்கல்வி மாணவர்களின் - தேர்ச்சி 52% ஆக உள்ளது!

## மக்களவையில் டாக்டர் டி.என்.வி.செந்தில் குமார் பேச்சு!



புதுடெல்லி, பிப்.9-

தமிழ்நாட்டில் உயர் கல்வி படிக்கும் மாணவ மாணவியரின் தேர்ச்சி 52 சதவிகிதமாக உள்ளது. டெல்லியில் உட்கார்ந்து கொண்டு தமிழ்நாடு மற்றும் வடகிழக்கு மாநிலத்தில் என்ன படிக்க வேண்டும் எந்த மொழி பேச வேண்டும் என்று முடிவு செய்ய முடியாது என்று தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் டி.என்.வி.செந்தில்குமார் எம்.பி. நாடாளு மன்றத்தில் பேசினார்.

இதுகுறித்து அவர் பேசியதாவது :

கல்வியில் தமிழ்நாடு மிகப்பெரிய கலங்கரை விளக்கமாக திகழ்கிறது. மாநிலத்தில் ஒவ்வொரு கிலோமீட்டருக்கும் ஒரு தொடக்கப்பள்ளி. ஒவ்வொரு மூன்று கிலோமீட்டருக்கும் ஒரு நடுநிலைப் பள்ளி ஒவ்வொரு ஐந்து கிலோ மீட்டருக்கும் ஒரு உயர்நிலைப்பள்ளி ஒவ்வொரு ஏழு கிலோ மீட்டருக்கும் ஒரு மேல்நிலை பள்ளி உள்ளது. தமிழ்நாட்டில் உயர்கல்வி படிக்கக்கூடிய மாணவ மாணவியரின் மொத்த சதவீதம் 52% எட்டி உள்ளது.

இந்த இலக்கு தேசிய சராசரி விட மிகவும் அதிகம் தமிழ்நாட்டில் இப்போதே எட்டியுள்ள இலக்கை இந்தியா 2030ஆம் ஆண்டுக்குள் எட்ட வேண்டும் என இலக்கு வகுத்துள்ளது ஆனால் தமிழ்நாடு இப்போது எட்டி சாதனை படைத்துள்ளது. சாதனைக்குக் காரணம் திராவிட கோட்பாடுகள் மற்றும் சித்தாந்தங்கள் கொண்ட கொள்கை தான் காரணம். 1920 ஆம் ஆண்டு நீதிக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் தான் சென்னை மாநகராட்சி பள்ளிக்கான மதிய உணவுத் திட்டம் தொடங்கப்பட்டது பின்னாளில் பெருந்தலைவர் காமராஜர் என்ற மாபெரும் தலைவரால் அது முழுமையாக கொண்டு வரப்பெற்றது.

மாணவர்களை கல்விக்காக பள்ளிக்கு அழைத்து வந்த பல திட்டங்கள் திராவிட மாடல் அரசியலால் செயல்படுத்தப்பட்டன. மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டம், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் செயல்படும் முன்னேறிய திட்டங்களில் முதன்மையாக தொடங்கப்பட்டுள்ள காலை உணவுத் திட்டமாகும். அரசு பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவிகளுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கும் மற்றொரு திட்டமும் உள்ளது இவை மாணவிகள் படிப்பு முடியும் வரை அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது இவை அனைத்தும் தமிழ்நாடு அடைந்திருக்கும் வளர்ச்சியை ஆகும்.

மொத்த சேர்க்கை விகிதத்தில் அதிகமாக பெண் கல்வி க்கு ஊக்குவிக்கும் வகையில் கல்வி பொதுப் பட்டிலிருந்து மாநில பட்டியலில் கொண்டுவர வேண்டும். டெல்லியில் உட்கார்ந்து கொண்டு தமிழ்நாடு மற்றும் வடகிழக்கு மாநிலத்தில் என்ன படிக்க வேண்டும் எந்த மொழி பேச வேண்டும் என்று முடிவு செய்ய முடியாது. வளர்ந்த நாடுகளில் கூட கல்விக் கொள்கையை மாகாணம் அல்லது மாநில அரசு தீர்மானமாக எடுத்துக் கொள்கிறதே தவிர ஒன்றிய அரசு செய்வதில்லை. எனவே கல்வி மாநில உரிமைகள் மற்றும் மொழி உரிமைகளின் முக்கியத்துவம் அளித்து கலாச்சார பன்முகத்தன்மை காக்கப்பட வேண்டிய நேரம் இது.

தமிழ்நாட்டின் தொலைநோக்குப் பார்வை கொண்ட மாபெரும் தலைவர் முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் தான் தொழில் முறை படிப்புகளில் நுழைவுத் தேர்வை ரத்து செய்தார். கிராமப்புற மாணவர்கள் மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகள் சேர முடிந்தது. ஆனால் இப்பொழுது இருக்கும் நீட் தேர்வால் வசதி படைத்தவர்கள் மட்டுமே தேர்ச்சி பெற முடிகிறது. மேலும் மாணவர்களை மனிதாபிமானத்துடன் நடத்துங்கள் நீட் பரீட்சை மையங்களுக்குள் நுழையும் முன் பரிசோதனை செய்து அவர்களை பயங்கரவாதிகள் போல கருதி சோதனை செய்து மாணவர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்துகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

### திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்

# வந்தவாசி மேற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு

திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், வந்தவாசி மேற்கு ஒன்றியச் செயலாளர் ஏ.எஸ்.பிரபு அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **எஸ்.அம்பேத்குமார்**, எம்.எல்.ஏ., (319, முத்துமாரியம்மன் கோவில் தெரு, ஆராசூர் கிராமம், வந்தவாசி வட்டம், திருவண்ணாமலை மாவட்டம் 604 408.) அவர்கள் வந்தவாசி மேற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 8.2.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.




தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை சார்பில் நேற்று முன்தினம் (07.02.2024) சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மையின அந்தஸ்து வழங்குவது தொடர்பாக வலைத் தளத்தை (Web Portal) தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், சிறுபான்மையினர் நல ஆணையத்தின் துணை தலைவர் குத்தூஸ் இறையன்பன், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், மிகப்பிற் படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் ஆணையர் வா.சம்பத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை இராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் சார்பாக நடத்தப்பட்ட நன்றி அறிவிப்பு மாநாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் குறித்து நூறு ஆசிரியர்கள் எழுதிய கவிதைகளின் தொகுப்பினை புத்தகமாக ' கல்வியில் கலைஞர் ' என்ற தலைப்பில் தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வெளியிட சங்கத்தின் மாநில தலைவர் கு.தியாகராஜன் பெற்றுக் கொண்டார்.

## எமர்ஜென்சியைப் போல

# அமலாக்கத் துறையைப் பயன்படுத்தி எதிர்க்கட்சியினரை பழிவாங்குவதா?

## மக்களவையில் - தயாநிதி மாறன் அனல்பறக்க ஆவேச உரை!

**புதுடெல்லி, பிப். 9 -**

**"எமர்ஜென்சியைப் போல அமலாக்கத் துறையைப் பயன்படுத்தி எதிர்க்கட்சியினரை பழிவாங்குவதா" என்று நாடாளுமன்ற மக்களவையில் தயாநிதி மாறன் அனல் பறக்க ஆவேச உரையாற்றினார்.**

**நாடாளுமன்றத்தில் நடைபெற்ற இடைக் கால நிதிநிலை அறிக்கை தொடர்பான விவாதத்தில், ஒன்றிய அரசு தமிழ்நாட்டை வஞ்சிப்பது குறித்து மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் அவர்கள் அனல் பறக்க ஆற்றிய உரையின் விவரங்கள் வருமாறு:**

**நிதி மானியம் குறைப்பு!**

அவைத் தலைவர் அவர்களுக்கு முதலில் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இடைக்கால நிதி நிலை அறிக்கை ஒரு பெரிய கண் துடைப்பு, ஒரு மிகப்பெரிய ஏமாற்றத்தைத் தந்துள்ளது, குறிப்பாக ஏழை மக்களுக்கு இந்த நிதிநிலை அறிக்கை எந்தப் பயனையும் அளிக்கவில்லை. இந்த நிதிநிலை அறிக்கைமீது மிகுந்த எதிர்பார்ப்பு இருந்தது, அதிலும் குறிப்பாக நடுத்தர மக்களுக்கு, இவர்கள் இவ்வளவு பேசுகிறார்களே, இத்தனை வாக்குறுதிகளை வாரி வாரி வழங்குகிறார்களே, இந்த நிதிநிலை அறிக்கையில் ஏதாவது வரிச்சலுகை கிடைக்குமா, நல்ல செய்தி வருமா எனப் பார்த்தால், ஒன்றிய அரசிடம் இருந்து வெறும் நாமம்தான் கிடைத்தது.

இந்த அரசாங்கத்தின் இடைக்கால நிதிநிலை அறிக்கையில் செலவு எவ்வளவு என்றால் ரூ. 47,65,762/ கோடி, கிட்டத்தட்ட 6 சதவீதம் சென்ற ஆண்டை விட அதிகம். இதில் 25 சதவீதம் அவர்கள் வாங்கிய கடனுக்கான வட்டிக்காக மட்டுமே செலவு செய்கிறார்கள், மீதம் 40 சதவீதத்தை அவர்கள் செலவீனமாக வைத்துக் கொள்கிறார்கள். மேலும் வரவு தீர்மானத்தையொட்டிதான் இந்த பட்ஜெட் அமைந்துள்ளது. இந்த நிதிநிலை அறிக்கை பிரதான செலவிற்கு முன்னுரிமை கொடுத்து, சமூக நலனை பின்னுக்கு தள்ளியுள்ளது.

அதாவது சமூக நலத்திட்டங்களுக்கு 7 சதவீதம் மானியத்தை இந்த ஒன்றிய அரசு குறைத்துள்ளது. குறிப்பாக உணவு மானியம். இவர்கள் எப்படி நியாய விலைக் கடைகளிலே அரிசி, கோதுமை போன்றவைகள் இலவசமாக தருகிறோம் என்று சொல்கிறார்களோ, அவர்களேதான் இன்று உணவு மானியத்தில் 3.3 சதவீதம் குறைத்திருக்கிறார்கள். பிறகு விவசாயத்திற்கான உரம் மானியத்திலும் 13.2 சதவீதம் இந்த நிதிநிலை அறிக்கையில் குறைந்துள்ளது. அதுமட்டுமல்லாது சமூக பாதுகாப்புக்கான திட்டங்களிலும் இவர்கள் நிதி மானியத்தை குறைத்துள்ளார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையை வாசித்த நிதி அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டைச் சார்ந்தவர் என்று நாங்களெல்லாம் பெருமை கொண்டோம். மேலும் இவர் வல்லவர், நல்லவர் என்று நினைத்தோம், ஆனால் அவர் வாயில் இருந்து வருவதெல்லாம் உண்மைக்கு மாறானவைதான். குறிப்பாக இந்த நிதிநிலை அறிக்கை ஏழைகளுக்காக, இளைஞர்களுக்காக, மகளிருக்காக, விவசாயிகளுக்காக என்று சொன்னார்கள், ஆனால் உண்மை நிலை என்ன என்றால், இங்கு அம்பானி, அதானி, டாடா போன்ற பணம் படைத்தவர்கள் மேலும் பணக்காரராகும் வகையில்தான் இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது. அதாவது மேற்குறிப்பிட்ட அம்பானி, அதானி, டாடா போன்ற 20 சதவீதம் பணக்காரர்களிடம்தான் இந்தியாவின் 40 சதவீதம் வருமானம் உள்ளது. ஆனால் நடுத்தர மக்கள் மேலும் ஏழை ஆகி வருகின்றனர். அவர்களது வருமானம் 20 சதவீதம் குறைந்துள்ளது. சிலருக்கு வருமானமே இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

**வாக்குறுதிகள் என்ன ஆயிற்று?**

மீண்டும் இவர்கள் ஆட்சிக்கு வந்தால் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு தருகிறோம் என்று சொல்கிறார்கள். பிரதமர் அவர்களே, கடந்த 2014 ஆம் ஆண்டு தேர்தல் வாக்குறுதியில் ஆண்டுக்கு 2 கோடிக்கு பேருக்கு வேலை வாய்ப்பு தருகிறேன் என்று சொன்னீர்களே, என்னவாயிற்று? கடந்த பத்து ஆண்டுகளாக வெறும் வாயில் வடை சுட்டதைத் தவிர, வேறு என்ன செய்தீர்கள்?. இதுவரைக்கும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரவில்லை. பெண்களுக்கும் வேலைவாய்ப்பு குறைந்துகொண்டே இருக்கிறது. பெண்களுக்கான வேலைவாய்ப்புகள் கடந்த 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 11.88 சதவீதம் குறைந்திருக்கிறது. 2021-2022 ஆம் ஆண்டுகளில் 7.96 சதவீதம் குறைந்துள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டு பிரதமர் மோடி அவர்கள் என்ன சொன்னார்கள்? நாங்கள் ஆட்சிக்கு வந்தால் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பு ஆக்குவோம் என்றார். அவ்வாறு நடந்ததா? இல்லை. இன்றைக்கு பண வீக்கத்தால் விவசாயிகளும் விவசாயத்துறையும் அழிந்து கொண்டு இருக்கின்றன. அம்பானிகளுக்கும், அதானிகளுக்கும், டாடா போன்றோருக்கும் வாராக்கடனை தள்ளுபடி செய்கிறீர்கள். பணக்காரர்களின் கடனை தள்ளுபடி செய்கிறீர்கள், அதுவே விவசாயிகளின் கடனை நீங்கள் தள்ளுபடி செய்வதில்லை. அதற்கு மாறாக, விவசாயிகளுக்கு எதிரான விவசாய மசோதாவை கொண்டு வந்தீர்கள், அதுவே இந்திய மக்கள் ஒருமித்த குரலில் எதிர்த்தபின்தான் அந்த மசோதாவை நீங்கள் கைவிட்டீர்கள்.

சில்லரை விற்பனை பணவீக்கம் கடந்த எட்டு ஆண்டுகளில் 7.8 சதவீதம் உயர்ந்துள்ளது. மொத்த பணவீக்கம் 9 ஆண்டுகளில் 15.8 சதவீதம் உயர்ந்துள்ளது. அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்து கொண்டேதான் உள்ளது. கடந்த முப்பது ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அத்தியாவசியப் பொருட்களின் விலையும், பணவீக்கத்தின் சதவீதமும் உயர்ந்து கொண்டேதான் உள்ளது.

**பேரிடர் நிதி வழங்கவில்லை!**

தற்போது மக்கள் தங்களது சேமிப்புகளை இழந்து வருகிறார்கள். குறிப்பாக இந்த பாஜக அரசு வந்த நாள் முதல் தமிழ்நாட்டிற்கு எதிரான அரசாகவே செயல்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு மிகப் பெரிய புயலான மிக்ஜாம் புயலை தமிழ்நாடு, குறிப்பாக சென்னை மாவட்டம் சந்தித்தது. எங்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிரதமர் அவர்களை நேரடியாக சந்தித்து முதற்கட்ட நிவாரணமாக சுமார் ரூ.7033 கோடியையும், முழுமையான நிவாரணமாக 12,650 கோடி தொகையினையும் கேட்டார். ஆனால் ஒன்றிய அரசிடமிருந்து எங்களுக்கு ஒரு நயா பைசா கூட நிவாரணம் கிடைக்கவில்லை. இத்தனைக்கும் ஒன்றிய இராணுவத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் சென்னைக்கு வந்து பார்வையிட்டார், அவ்வளவு ஏன், நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்கள் கூட வந்து பார்வையிட்டார்கள், கையசைத்தார்கள், வெறும் வாய்ப் பேச்சு பேசினார்கள், நேர்காணல் கூட தந்தார்கள், இவ்வளவும் செய்துவிட்டு ஒரு ரூபாய் கூட தர வக்கற்றவராக திரும்பிச் சென்றுவிட்டார்.

இதுகுறித்து எங்கள் தமிழ்நாட்டின் எதிர்காலம் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 'நாங்கள் உங்கள் பணத்தையோ, உங்கள் அப்பன் வீட்டு பணத்தையோ கேட்கவில்லை, எங்கள் வரிப்பணத்தில் இருந்து கொடுங்கள்' என்றுதான் கேட்டார். அதற்கு ஒன்றிய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்கள் சுமார் ஒரு மணி நேரமாக ஒரு பத்திரிகை சந்திப்பு நடத்துகிறார். அந்த ஒரு மணி நேரமும் எங்களை வசை பாடியதோடு, உதயநிதி அவர்கள் மரியாதையோடு நடந்துகொள்ள வேண்டும், உங்கள் அப்பன் வீட்டு காசு, உங்க ஆத்தா வீட்டு காசு என்றெல்லாம் கேட்கக் கூடாது எனக் கூறுகிறார்.



**வன்மம் நிறைந்த நிர்மலா சீதாராமன் பேச்சு!**

அதுவே பிரதமர் மோடி அவர்கள், முன்பொரு நாள், உங்கள் சாச்சா வீட்டு காசா என்று கேட்டார்கள், அப்போது நிதியமைச்சர் அவர்களுக்கு அறிவுரை சொல்ல நேரமில்லையா? அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களே, உங்கள் ஆத்தா வீட்டு காசா என்றெல்லாம் கேட்கறீர்களே, அதுவே நான் திருப்பி உங்கள் தோப்பனார் வீட்டு காசா என்று கேட்டால் நன்றாக இருக்குமா? உங்கள் பேச்சில் வன்மம் இருக்கிறது. எனவே இந்த பேச்சை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

**கருப்புப் பணத்தை பிரதமர் மீட்டுவிட்டாரா?**

கடந்த பத்து ஆண்டுகளில் பாஜக அரசு ஆட்சிக்கு வந்தவுடன் பணமதிப்பிழப்பு நடவடிக்கை மேற்கொண்டது, பின்னர் பிரதமர் அவர்கள், எனக்கு மூன்று மாதம் தாருங்கள், இந்தியாவில் இருந்து எடுக்கப்பட்ட கருப்புப் பணம் அத்தனையையும் நான் மீட்பேன் என்றார். என்ன கருப்புப் பணத்தை மீட்டார்? மேலும் புதிதாக 2000 ரூபாய் நோட்டினை அறிமுகம் செய்தார்கள், இன்று அந்த 2000 ரூபாய் நோட்டு எங்கே சென்றது? இதன் மூலம் நீங்கள் செய்தது எவ்வளவு பெரிய தவறு என்பதை நீங்களே சொல்லிவிட்டீர்கள்.

பிறகு உலகையே அழித்த கொரோனா பெருந்தொற்று எப்படி இந்தியாவுக்குள் வந்தது? அதற்கு முக்கிய காரணமே பா.ஜ.க. அரசுதான். குஜராத் தேர்தலுக்காக 'நமஸ்தே டிரம்ப்' என்ற நிகழ்ச்சியினை குஜராத்தில் நடத்தினார்கள், அதற்காக அனைத்து விமான நிலையங்களையும் திறந்து வைத்தார்கள், அதனால்தான் கொரோனா இந்தியாவிற்குள் வந்தது. அந்த நிகழ்ச்சியினை நீங்கள் நடத்தாமல் இருந்திருந்தால் பல ஆயிரக்கணக்கான உயிர்களை நீங்கள் காப்பாற்றி இருக்கலாமே. அதுமட்டுமல்லாமல் நீங்கள் இறப்பு விவரத்தைக்கூட குறைத்துத் தவறாகத் தானே வெளியிட்டீர்கள்.

மேலும் பணவீக்கத்தாலும் அத்தியாவசியப் பொருட்கள்விலையேற்றத்தாலும் மக்கள் அவதிப்பட்ட சூழலில், குறிப்பாக வெங்காய விலை ஏற்றத்தின்போது, நிதியமைச்சர் அவர்கள் இந்த அவையிலே என்ன சொன்னார்? "வெங்காய விலை ஏற்றமா, நான் வெங்காயம் சாப்பிடுவதில்லை, அதனால் எனக்கு அது பற்றித் தெரியவில்லை" என்று கூறினார். என்ன ஒரு அகங்காரப் பேச்சு. ஏழைகளின் சிரமத்தை உணராமல், பணக்காரர்களை மட்டும் ஆதரிக்கும் போக்குதான் அந்தப் பேச்சின் அடையாளம்.

**அதானி – அம்பானி கொள்ளை லாபம்!**

இந்தக் கொரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு பெட்ரோல் விலையையும், காஸ் சிலிண்டர் விலையையும் ஏற்றிவிட்டீர்கள், பெட்ரோல் விலை நூறு ரூபாயைத் தொட்டது, டீசல் விலையும் கிட்டத்தட்ட நூறு ரூபாயை எட்டியது, சிலிண்டர் விலை ஆயிரம் ரூபாயை நெருங்கியது. ரஷ்யாவில் நடக்கும் போர் விவகாரத்தால், அங்கு குறைந்த விலையிலேயே கச்சா எண்ணெய் கிடைக்கிறது. அந்த குறைந்த விலை எண்ணெயை அம்பானி அவர்களும், அதானி அவர்களும் வாங்கி இந்தியாவுக்கு கொண்டு வராமல், வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்து கொள்ளை லாபம் பார்த்தார்கள்.

அதனை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யாமல், நமது ஒன்றிய அரசு நமது இந்தியாவிற்கு கொண்டு வந்து பெட்ரோல் விலையைக் குறைத்து இருக்கலாமே. அதைச் செய்யாமல், அதற்கு மாறாக நாட்டின் ஒவ்வொரு பெட்ரோல் பங்கிலும், ஒவ்வொரு இரயில் நிலையத்திலும், பிரதமர் அவர்களின் செல்ஃபி ஸ்டாண்டை வைத்தார்கள், அந்த செல்ஃபி ஸ்டாண்டின் விலை சுமார் 6.5 இலட்சம், எதற்கு? ஒரு வெற்றுப் புகைப்படத்திற்கு இது தேவையா? அதற்கு அந்த 6.5 இலட்சம் ரூபாயை மக்களுக்கு பயனுள்ள வகையில் செலவழித்து இருக்கலாமே?

பாஜக அரசு தற்போது இந்தியாவிலே தங்களுக்கு ஆகாதவர்கள் மீது எளிதாக அமலாக்கத்துறையைப் பயன்படுத்துகிறது. நீங்கள் முன்பு என்ன சொன்னீர்கள்? காங்கிரஸ் கட்சி, குறிப்பாக மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அவர்கள், எமர்ஜென்சியை தவறாகப் பயன்படுத்தினார். அது பெரிய குற்றம், அந்தக் குற்றத்தை நாங்கள் செய்ய மாட்டோம் என்று சொன்னீர்கள், ஆனால் இன்று எமர்ஜென்சியைப் போலவே நீங்கள் அமலாக்கத்துறையை பயன்படுத்திக் கிட்டத்தட்ட 95 சதவீதம் வழக்குகள் உங்கள் எதிர்க்கட்சியினர் மீது திணிக்கப்பட்டுள்ளது.

பணமதிப்பிழப்பு நிகழ்ந்தபோது, அனைத்துப் பத்திரிகைகளிலும் பிரதமர் மோடி அவர்களின் படம் போட்டு Paytm செயலிக்கு முழுப் பக்க விளம்பரம். அது என்ன விளம்பரம் என்றால், டிஜிட்டல் பண பரிமாற்றத்தை நாங்கள் முழுமையாக ஆதரிக்கின்றோம் என்று வந்தது, ஆனால் இன்றோ Paytm நிறுவனம் சரியாக செயல்படவில்லை என அந்நிறுவனம் இன்று மூடும் நிலையில் உள்ளது.

**'நீட்' தேர்வுக்கு எதிர்ப்பு!**

மேலும் எங்கள் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களும், இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் தொடர்ந்து நீட் தேர்வை எதிர்த்து வருகின்றனர். எங்கள் தமிழ்நாட்டு குழந்தைகள் மட்டுமா நீட் தேர்வினால் பாதிப்படைகின்றனர்? தமிழ்நாடு உட்பட பல மாநிலங்களில் முதல் தலைமுறைக் குழந்தைகள் நீட் தேர்வில் தேர்ச்சி பெற முடியாமல் தவிக்கிறார்களே, குறிப்பாக பிற்படுத்தப்பட்டோர் மருத்துவர்கள் ஆவதை தடுப்பதற்காக கொண்டு வந்த திட்டமல்லவா இது?

இன்றைக்கு ராஜஸ்தான் மாநிலத்தில், குறிப்பாக நமது சபாநாயகர் இருக்கின்ற கோட்டா தொகுதியிலே எத்தனைக் குழந்தைகள் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள்? காரணம், நீங்கள் கொண்டு வந்த நீட் தேர்வு. இதையெல்லாம் கவனத்தில் கொண்டு மனிதாபிமான அடிப்படையிலாவது நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

**கோழி பிடிக்கும் கதை!**

**கடந்த 2018ஆம் ஆண்டு ஜெயலலிதா அவர்கள் மறைந்துவிட்டார், அப்போது இதே நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்கள் அதிமுகவை கைப்பற்றி அவர் முதலமைச்சர் ஆகிவிடலாம் என்ற கணவுத் திட்டத்தில் சென்னைக்கு வந்தார், அப்போது அவர் "அடுத்த ஆண்டு நீட் தேர்வு நடைபெறாது, இந்த ஆண்டும் நீட் விலக்கிற்கு நாங்கள் முயற்சி செய்கிறோம்" என்று மக்களை ஏமாற்றினார்.**

**அவையில் முன்பு பேசியவர் சோழரைப் பற்றி குறிப்பிட்டார். சோழர்கள் தமிழை வளர்த்தார்கள், பிரதமர் மோடி அவர்கள், தமிழ்நாட்டிற்கு வந்தால் தமிழ் மொழியில் பேசுகிறார், திருக்குறள் சொல்கிறார், அதுவே கர்நாடகா சென்றால் கன்னடத்தில் பேசுவார், கேரளா சென்றால் மலையாளத்திலும், ஆந்திரா சென்றால் தெலுங்கிலும், மேற்கு வங்கம் சென்றால் பெங்காலி மொழியிலும் பேசுகிறார். இதையெல்லாம் பார்க்கும் போது எங்கள் ஊர்ப்பக்கம் சொல்வதுதான் ஞாபகம் வருகிறது, அது என்னவென்றால், கோழி பிடிப்பவன் பக் பக் பக் என கோழியை அழைப்பானாம், அந்தக் கோழியும் ஆகா, நம் மொழியில் பேசுகிறானே, நமக்கு நண்பன் என்று நினைக்குமாம், ஆனால் பிறகுதான் அந்த கோழிக்குத் தெரியுமாம், அவன் தன்னை வறுத்து சாப்பிடத்தான் அந்த கோழி மொழியில் பேசினான் என்று. அந்தக் கதைதான் இங்கு நடந்து கொண்டிருக்கிறது.**

தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மீது உரிய அக்கறை இல்லாமல் ஒன்றிய அரசு செயல்படுகிறது, அதிலும் குறிப்பாக ஜவுளித் தொழிலில். கடந்த 2022 ஆம் ஆண்டு, தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஜவுளித்துறைக்கு அவசரக்கால கடன் வரி உத்திரவாதத் திட்டத்தைக் கோரினார். குறிப்பாக நாட்டிற்கு அன்னியச் செலவானியை ஈட்டித் தரும் திருப்பூர் சிறு, குறு மற்றும் நடுத்தர ஜவுளித்துறையினருக்கு இத்திட்டத்தை வழங்குமாறு கடந்த 2 ஆண்டுகளாக வலியுறுத்தி வருகிறோம்.

கொரோனா பெருந்தொற்றின் தாக்கம், ரஷ்யா உக்ரைன் போர் மற்றும் மேற்கு நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலை ஆகியவற்றின் விளைவாக, இத்துறை கடுமையான நெருக்கடிக்கு உட்பட்டுள்ளதோடு, வளர்ச்சி விகிதத்தில் மாதந்தோறும் கடுமையான சரிவைச் சந்தித்து வருகிறது. இலட்சக்கணக்கான வேலைகள், குறிப்பாக தொழிலாளர் தொகுப்பில் கணிசமான பகுதியை உருவாக்கும் கிராமப்புற பெண்களின் வேலைகள் ஆபத்தில் உள்ளன.

**ரயில்வே திட்டங்கள் இல்லை!**

ஜவுளித்துறையில் உற்பத்தியுடன் கூடிய ஊக்கத்தொகைத் திட்டத்தையும் அவசரக்கால கடன்வரி உத்திரவாதத் திட்டத்தையும், இருபது சதவீதம் கூடுதல் பிணையில்லா கடன் திட்டத்தையும் கேட்டோம், ஆனால் ஒன்றும் கிடைத்தபாடில்லை.

கடந்த மாதம், ஜவுளி ஆலை சங்கங்கள், அசல் தொகையை திருப்பிச் செலுத்த 1 ஆண்டு கால அவகாசத்தை நீட்டிக்கவும், அவசரகால கடன் வரி உத்தரவாத திட்டத்தின் கீழ் 3 ஆண்டு கடன்களை 6 ஆண்டு கால கடனாக மாற்றி நீட்டிக்கவும், தொழில் மூலதனத்தின் அழுத்தத்தைக் குறைக்கத் தேவையான நிதி உதவியினை வழங்கக் கோரியும் மத்திய நிதியமைச்சரிடம் கூட்டாக மனு அளித்தனர்.

இரயில்வேத் துறையின் மூலம் எங்கள் தமிழ்நாட்டிற்கு எந்த நன்மையும் வந்து சேரவில்லை. கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் கடந்த ஐந்து ஆண்டுகளாக பலமுறை அவரை நேரில் சந்தித்து பல்வேறு கோரிக்கை கடிதங்களை கொடுத்துள்ளேன். குறிப்பாக நான் சார்ந்த மத்திய சென்னை தொகுதியில் உள்ள யானைக்கவுனி மேம்பாலம் சீரமைப்பு பணிகள் கடந்த ஏழு ஆண்டுகளாக எந்த பணியும் நிறைவேறாமல் நிலுவையில் உள்ளது,. இனியாவது தமிழ்நாட்டிற்கும், குறிப்பாக சென்னைக்கும் இரயில்வேத் துறை ஏதாவது நன்மை செய்வீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

**யார் மீது சி.பி.ஐ. வழக்கு பதியும்?**

உலகத்திலே எங்கும் நடக்காத ஆச்சரியம், பிரதமர் அவர்கள், 2019 ஆம் ஆண்டில் ஒரு செங்கல்லை வைத்து மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டினார். இன்றைக்கும் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையில் ஒரே செங்கல்லும் சுற்றுச் சுவரும்தான் உள்ளது. இதில் ஒரு கொடுமை என்னவென்றால், இந்த ஒற்றைச் செங்கல்லும் வெற்று சுற்றுச் சுவரும் உள்ள ஒரு மருத்துவமனை மருத்துவக் கல்லூரியில் மாணவர் சேர்க்கைத் தொடங்கிவிட்டது, ஆனால் மாணவர்களோ மதுரையில் படிக்காமல், இராமநாதபுரம் மருத்துவக் கல்லூரியில் படிக்கிறார்கள்.

பல இடங்களில் சி.பி.ஐ, கட்டமைப்பு இல்லாத நிறுவனங்கள் எப்படி மாணவர்கள் சேர்க்கை செய்யலாம் என பல்வேறு வழக்குகளை பதிந்துள்ளது, ஏனெனில் அது இந்திய சட்டப்படி குற்றம் என கூறுகிறது, அப்படி இருக்கையில், எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி, கட்டமைப்பே இல்லாமல் மாணவர் சேர்க்கை நடத்தி வேறொரு கல்லூரிக்கு படிக்க அனுப்புகிறீர்களே, இப்போது யார் மீது சி.பி.ஐ வழக்கு பதியும்? சுகாதாரத்துறை அமைச்சர்மீதா அல்லது பிரதமர்மீதா? யார்மீது இப்போது சி.பி.ஐ. வழக்கு பதியும் என கேட்கிறேன். உங்களுக்கு வந்தா இரத்தம் எங்களுக்கு வந்தால் தக்காளிச் சட்டினி என்னும் வகையில் தமிழ்நாட்டை வஞ்சித்து புறக்கணிக்காதீர்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் சொல்வார்கள், "வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது" என்று, ஆனால் தற்போது, தெற்கில் இருந்து வரும் நிதியில் வடக்கு செழிக்கிறது, கொழிக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் தமிழ்நாட்டில் இருந்து ஒன்றிய அரசிற்கு வரியாக 1 ரூபாய் கொடுத்தால் தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு திருப்பி வெறும் 29பைசா தான் தருகிறது. ஆனால் உத்திரப்பிரதேச மாநிலத்திற்கோ அவர்கள் கொடுக்கும் 1 ரூபாய் வரிக்கும் ஒன்றிய அரசு திருப்பித் தரும் தொகை ரூ.2.73 பைசாவும், பீகாருக்கு ரூபாய் 7.6 பைசாவும்.

நாங்கள் கேட்பது எல்லாம், இந்தியா ஒட்டுமொத்தமாக வளரவேண்டும் என்றும், இவ்வாறு தமிழ்நாட்டை மட்டும் வஞ்சிக்காதீர்கள் என்றும், எங்கள் தமிழ் மொழியையும் வளர்க்க நடவடிக்கை எடுங்கள் என்றுதான். இந்தியாவின் முதல் செம்மொழி தமிழ் மொழிதான். இப்படி சொல்வதால், நாங்கள் எந்த மொழிக்கும் எதிரானவர்கள் அல்ல, அனைத்து மொழியையும் ஆதரித்து வரவேற்பவர்கள்தான். ஆனால் மொழித் திணிப்பு வந்துவிட்டால், நாங்கள் எங்கள் மொழியை காக்க உயிரையும் கொடுக்கத் தயங்கமாட்டோம் என்பதைக் கூறி அவைத் தலைவருக்கு மீண்டும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க தமிழ்! வாழ்க கலைஞர்! வாழ்க தலைவர் தளபதி.

இவ்வாறு தயாநிதி மாறன் அவர்கள் பேசினார்.

---

## 'வாட்ஸ் அப்'பில் வந்த செய்தி!



**"தனிநாடு கோரும் நிலை உருவாக்கும்"**

அனைத்து மாநிலங்களையும் உள்ளடக்கியது தான் இந்தியா. இந்தி பேசும் மாநிலங்கள் மட்டும் இந்தியா அல்ல என கர்நாடகா துணை முதல்வர் டி.கே.எஸ் சாடியுள்ளார். பட்ஜெட்டில் தென்னிந்தியா புறக்கணிக்கப்பட்டதாகவும், மத்திய அரசு இதுபோன்று வஞ்சித்தால், அனைத்து தென்னிந்திய மாநிலங்களும் ஒருங்கிணைந்து இந்தி பேசும் மாநிலங்களில் இருந்து தனிநாடு கோரும் நிலை உருவாகும்; எங்களுக்கான உரிய பங்கை (மாநில நிதி) தர வேண்டும் என்றார்.

---




தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில் மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் தலைமையில் நடைபெற்றது. இதில் கழக சிறுபான்மை நலஉரிமைப் பிரிவினர் கலந்து கொண்டனர்.

---

### தென்காசி வடக்கு மாவட்டம்

## வாசுதேவநல்லூர் வடக்கு ஒன்றியம் சிவகிரி பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்

### தலைமைக் கழக அறிவிப்பு

தென்காசி வடக்கு மாவட்டம், வாசுதேவநல்லூர் வடக்கு ஒன்றியம், சிவகிரி பேரூர்க் கழகச் செயலாளர் செ.சு.செண்பகவிநாயகம் அவர்கள், மாநில மருத்துவ அணி துணைச் செயலாளராக நியமிக்கப்பட்டதால், அவரை பேரூர்க் கழகச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக ஜி.சேதுசுப்பிரமணியன், (சிவகிரி, தென்காசி மாவட்டம்) அவர்கள் சிவகிரி பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 8.2.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.



வருகின்ற சட்டமன்றப் பேரவை கூட்டத் தொடர் 12.2.2024 அன்று தொடங்க இருப்பதால், சட்டப்பேரவையில் உள்ள கணினி, ஒலிப்பெருக்கி மற்றும் இருக்கைகள் சரியாக உள்ளனவா என்பதை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு சென்னை, தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (07.02.2024) பார்வையிட்டு, ஆய்வு செய்தார். இந்நிகழ்வின் போது, சட்டமன்றப்பேரவை முதன்மைச் செயலாளர் முனைவர் கி.சீனிவாசன் மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

### திசையன்விளை - இராதாபுரம் - நாங்குநேரி ஆகிய வட்டங்களில்

# மக்களுடன் முதல்வர் திட்டம் மூலம் 1010 பேருக்கு ரூ.3.28 கோடியில் நல உதவிகள்!

## சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு வழங்கினார்!

நெல்லை, பிப். 9 -

நெல்லை மாவட்டம் திசையன்விளை சுடலை யாண்டவர் திருமண மண்டபத்தில் திசையன்விளை, இராதாபுரம், நாங்குநேரி ஆகிய வட்டங்களில் நடைபெற்ற"மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் மூலம் பெறப்பட்ட மனுவில் தகுதிபெற்ற 1010 பயனாளிகளுக்கு ரூபாய் 3,28,20,048 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு வழங்கினார்.

நெல்லை மாவட்டம் திசையன்விளை சுடலை யாண்டவர் திருமண மண்டபத்தில் திசையன்விளை, இராதாபுரம், நாங்குநேரி ஆகிய வட்டங்களில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் மூலம் பெறப்பட்ட தகுதி பெற்ற பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா தலைமையில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் அர்பித் ஜெயின் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று தகுதி பெற்ற 1010 பயனாளிகளுக்கு ரூபாய் 3,28,20,048 மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை வழங்கி தெரிவித்ததாவது.

அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும், ஏழை, எளிய மக்களை சென்றடையும் வகையிலும் நிர்வாகத்தில் வெளிப்படுத்த தன்மை ஏற்படுத்திடவும் "மக்களுடன் முதல்வர்" என்ற புதிய திட்டத்தினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 18.12.2023 அன்று கோயமுத்தூர் மாவட்டம் ஆவாரம் பாளையத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.

"மக்களுடன் முதல்வர்" என்ற இப்புதிய திட்டத்தின் கீழ் பொதுமக்கள் அதிகமாக அணுகும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நகராட்சி நிர்வாகத்துறை, ஊரக வளர்ச்சி துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சமூக நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, கூட்டுறவுத்துறை, மகளிர் மேம்பாட்டு கழகம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, எரிசக்தி துறை,தொழில்கள் துறை ஆகிய 13 அரசு துறைகள் சார்ந்த கோரிக்கைகளைப் பெற்று தீர்வு காண்பதற்கு முதலமைச்சர் அவர்களின் நேரடி கண்காணிப்பில் அனைத்து நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு மற்றும் கிராம ஊராட்சி அளவில், அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகிறது. அனைத்துத் தரப்பு மக்களுக்கும் மேற்கண்ட 13 அரசுத்துறைகளின் சேவைகள் எளிதில் கிடைத்திடவும், தாமதங்களை தவிர்த்திட வேண்டும் என்பதுதான் இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

அதன்படி "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக நெல்லை மாவட்டத்தில் 05.01.2024 முதல் தொடங்கி 23.01. 2024 வரை நெல்லை மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நகர்ப்புறங்களை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் மொத்தம் 44 முகாம்கள் நடத்தப்பட்டதில் 8261 மனுக்கள் பெறப்பட்டது.

இன்று நடைபெற்ற விழாவில் வருவாய்துறை மூலம் 398 பயனாளிகளுக்கு ரூபாய் 2,56,96,448, இலவச பட்டாக்களும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் 4 பயனாளிகளுக்கு 23,600 மதிப்பிலான இலவச தையல் இயந்திரங்களும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் 5 பயனாளிகளுக்கு 5,00,000 ம் மதிப்பிலான சக்கர நாற்காலியும், 5 பயனாளிகளுக்கு ரூபாய் 75,000 ம் மதிப்பிலான இலவச திறன் பேசிகளும், சமூக நலத்துறை மூலம் 158 பயனாளிகளுக்கு ரூபாய் 65,25,000 ம் மதிப்பிலான தங்க நாணயங்களும், 440 பயனாளிகளுக்கு இலவச பட்டா, நத்தம் பட்டா,முதியோர், விதவை சான்றிதழ் உள்ளிட்ட பல்வேறு சான்றிதழ் என மொத்தம் 1010 பயனாளிகளுக்கு ரூபாய் 3,28,20,048 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு ஏழை,எளிய மாணவர்கள் பசியுடன் படிக்கக் கூடாது என உயரிய நோக்கில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

மேலும் ஸ்மார்ட் வகுப்பறைகள், பெண்கள் உயர் கல்வியில் பயில்வதை ஊக்குவிக்கும் வகையில் புதுமைப்பெண் திட்டம், இல்லம் தேடி கல்வி,நான் முதல்வன், இன்னுயிர் காப்போம் 48 மணி நேரம் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கும் திட்டம் போன்ற முன்னோடி திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறார்கள்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில் இராதாபுரம் தொகுதியில் பல்வேறு பகுதிகளுக்கு கூட்டுக் குடிநீர் திட்டப்பணிகள் கொண்டு வரப்பட்டது.

இப்பணிகள் பராமரிப்பின்றி கடந்த காலத்தில் மேல் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் இப்பகுதி மற்றும் இராதாபுரம் சட்டமன்றத் தொகுதியிலும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. தற்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் ரூபாய் 1028 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு குடிநீர் திட்ட பணிகள் முழு வீச்சில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் ஓராண்டில் இராதாபுரம் தொகுதிகளில் உள்ள வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கப்பட உள்ளது. குடிநீர் திட்ட பணிகளுக்காக ரூபாய் 1028 கோடி நிதி ஒதுக்கீடு செய்த முதலமைச்சர் அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது மாவட்டத்தில் நதிநீர் இணைப்பு திட்டம் கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில் கொண்டு வரப்பட்டது. கடந்த ஆட்சியில் பணிகள் கிடப்பில் போடப்பட்ட நிலையில் முதலமைச்சர் அவர்கள் அதிக நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள் தற்போது 99 சதவீதம் பணிகள் முடிவுற்றதினால் மழைக்காலத்தில் அப்பணிகளுக்கான தண்ணீர் திறந்து விடப்பட்டு வெள்ளோட்டம் பார்க்கப்பட்டது.

இதன் மூலம் திசையன்விளை, இராதாபுரம்,நாங்குநேரி உள்ளிட்ட பகுதிகளில் அனைத்து குளங்களும் தண்ணீர் நிரம்பி,தேரிகாடு வரைக்கும் தண்ணீர் சென்று அப்பகுதி மக்கள் பயனடைந்துள்ளனர். இது மிகப்பெரிய சாதனையாகவும். விரைவில் நதிநீர் இணைப்பு திட்டப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைப்பார்கள். இப்பகுதி மக்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

நிகழ்வில் தனி துணை ஆட்சியர் ஜெயா, துணை ஆட்சியர் (பயிற்சி) ஷீஜா, துணை ஆட்சியர் (தாமிர பரணி அது நீர் இணைப்பு திட்டம்) காசி உதவி இயக்குனர்(பேரூராட்சிகள்) வில்லியம் ஜேசுதாஸ், மாற்றுத்திறனாளிகள் நலத் துறை அலுவலர் சிவசங்கரன், இராதாபுரம் மேற்கு ஒன்றியச் செயலாளர் ஜோசப் பெல்சி, திசையன்விளை வட்டாட்சியர் பத்மப்ரியா, களக்காடு நகர் மன்ற ஆணையாளர் ராஜேஸ்வரன், வடக்கு வள்ளியூர் செயல் அலுவலர் சுப்பிரமணியன், நாங்குநேரி செயல் அலுவலர் ஷாசன் மேத்யூ, பணகுடி செயல் அலுவலர் உஷா, திசையன்விளை பேரூராட்சி உறுப்பினர்கள் கண்ணன், ஜோசிடின் சரஸ்வதி,

பொன்மணி நடராஜன், உதயா, ஆறுமுக தேவி, அறங்காவலர் குழு உறுப்பினர் சமுகை முரளி உள்பட கழகத்தினர், அரசு அலுவலர்கள், பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




இராணிப்பேட்டை மாவட்டம் CMC ல் மாஸ்டர் ஹெல்த் செக்கப் கிளினிக் கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரி (சிஎம்சி) வேலூர், ராணிப்பேட்டை வளாகத்தில் மாஸ்டர் ஹெல்த் செக்கப் கிளினிக் மற்றும் டி.ஜி.ஹெல்த் அசிஸ்டென்ட் கியோஸ்க் ஆகியவை கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இதில் மருத்துவர்கள் மற்றும் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜே.எல்.ஈஸ்வரப்பன் மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் ஜெ.லட்சுமணன் மற்றும் திருச்சி சுந்தரம் மருத்துவமனை டாக்டர்.ஷில்பாகாந்தி உடனிருந்தனர்.



குமரிமாவட்ட விசைப்படகு மீன்பிடிப்போர் நலசங்கம் தமிழ்நாட்டில் இரண்டாவதாக மீனவர்களுக்காக குளச்சலில் உருவாக்கப்பட்ட இச்சங்கத்தின் 50 வது பொன்விழா பிப்ரவரி மாதம் 5ம் நாள் குளச்சலில் வைத்து கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக சபாநாயகர் அப்பாவு அவர்களுடன் தமிழ்நாட்டின் மருத்துவம் மற்றும் சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் அமைச்சர் மனோதங்கராஜ், மேயர் ரெ.மகேஷ் ( கிழக்கு மாவட்டச் செயலாளர்) மற்றும் மாநில மீனவரணி செயலாளர் ஏ.ஜோசப் ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் தமிழ் நாட்டின் முன்னாள் அமைச்சர் அன்னை லூர்தம்மாள் சைமன் அவர்களின் முழு உருவச் சிலை சபாநாயகர் அப்பாவு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

# நாடாளுமன்றத் தேர்தல் -2024

## 'நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு' மேற்கொள்ளும்

# விரிவான சுற்றுப்பயணம்

## (திருத்தப்பட்டது)

# தலைமைக் கழக அறிவிப்பு

மாண்புமிகு **தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர்** அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, 2024 - நாடாளுமன்றத் தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு பிப்ரவரி 5ஆம் தேதி தொடங்கி தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்கு கனிமொழி கருணாநிதி, எம்.பி., அவர்கள் தலைமையில் பயணம் செய்து பல்வேறு தரப்பினர், பொதுமக்கள், கழக நிர்வாகிகளைச் சந்தித்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரைகளைக் கேட்க இருக்கிறது.

கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாவட்டக் கழகச் செயலாளர்கள் தேர்தல் அறிக்கைக் குழுவினருடன் தொடர்பு கொண்டு தங்கள் மாவட்டத்திற்குரிய வணிகர் சங்கங்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள், நெசவாளர்கள், மீனவ சங்கங்கள், தொழில் முனைவோர், தொழிற்சங்கங்கள், மாணவர் சங்கங்கள், கல்வியாளர்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் அழைத்து வந்து தி.மு.க. தேர்தல் அறிக்கைத் தயாரிப்புக் குழுவினரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு விரிவான சுற்றுப் பயண விவரம் (திருத்தப்பட்டது)

| தேதி | இடம் | கழக மாவட்டம் |
|---|---|---|
| 2024 " பிப்ரவரி - 9 | ஓசூர் | கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு |
| " பிப்ரவரி - 10 காலை | கோயம்புத்தூர் | கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை மாநகர், நீலகிரி |
| மாலை | திருப்பூர் | ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு,கரூர் |
| " பிப்ரவரி - 11 | சேலம் | சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு கள்ளக்குறிச்சி தெற்கு |
| " பிப்ரவரி - 16 | தஞ்சாவூர் | தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய, தஞ்சை தெற்கு, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு |
| " பிப்ரவரி - 17 | விழுப்புரம் | விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, அரியலூர், பெரம்பலூர் |
| " பிப்ரவரி -18 காலை | வேலூர் | வேலூர் ,இராணிப்பேட்டை, திருப்பத்தூர் |
| மாலை | ஆரணி | திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு |
| " பிப்ரவரி 21, 22, 23 | சென்னை | சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு, திருவள்ளூர் மத்திய |

குறிப்பு: மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் கழக தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு வரும் சில நாட்களுக்கு முன்பாகவே, இக்குழு வருவதை உள்ளூர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதோடு, கோரிக்கை மனு பெறுவதற்கான இடவசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 6.2.2024

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டம் கரிகிரி பகுதியில் தமிழ் நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் ரூ.42.56கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 400புதிய அடுக்கு மாடி குடியிருப்புகளை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் திறந்து வைத்து பயனாளிகளுக்கு வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் மு.பாபு, மாநகராட்சி மேயர் சுஜாதா, துணை மேயர் எம்.சுனில்குமார், ஒன்றிய குழுத் தலைவர் வேல்முருகன், துணைத் தலைவர் சரவணன், மண்டலக் குழுத் தலைவர் புஷ்பலதா, ஒன்றியக் கழகச் செயலாளர் தணிகாசலம், ஊராட்சி மன்ற தலைவர் தேவராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## நீலகிரி மாவட்டம், உதகை வட்டத்தில் மண் சரிந்து

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சம்!

## முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, பிப்.9-

நீலகிரி மாவட்டம், உதகை வட்டத்தில் மண் சரிந்து உயிரிழுந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 இலட்சம் வழங்கிட உத்தரவிட்டு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:-

நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், உதகை நகரம் கிழக்கு கிராமம், லவ்டேல் காந்தி நகர் பகுதியில் நேற்று முன்தினம்(7.02.2024) நண்பகல் தனியாருக்குச் சொந்தமான சுவர் ஒன்றை இடிக்கும் பணியில் 17 கட்டுமானத் தொழிலாளர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக மண் சரிந்து 10 நபர்கள் சிக்கிய விபத்தில் திருமதி.ராதா (வயது 38), திருமதி.பாக்கியம் (வயது 36), திருமதி.முத்துலட்சமி (வயது 36), திருமதி.உமா (வயது 35) திருமதி.சங்கீதா (வயது 30) மற்றும் திருமதி.சகிலா (வயது 30) ஆகிய ஆறு பெண் தொழிலாளர்கள் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் திருமதி.ஜெயந்தி (வயது 56), திருமதி.சாந்தி (வயது 45), திரு தாமஸ் (வயது 24) மற்றும் மகேஷ் (வயது 23) ஆகிய நான்கு நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.



திருச்சிராப்பள்ளி அண்ணா விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் (07.02.2024) பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் தமிழ்நாடு மாநில பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் பெற்றோரை கொண்டாடுவோம் எனும் திருச்சி மண்டல மாநாட்டில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காணொலி வாயிலாக வாழ்த்துரை வழங்கினார். இந்நிகழ்வில், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் முனைவர் க.அறிவொளி, தமிழ்நாடு அரசு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில திட்ட இயக்குநர் திருமதி.மா.ஆர்த்தி, தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தனியார் பள்ளிகள் இயக்கம், இயக்குநர் முனைவர் சு.நாகராஜமுருகன், தமிழ்நாடு மாநில பெற்றோர் ஆசிரியர் கழகத் துணைத் தலைவர் வி.முத்துக்குமார் மற்றும் பள்ளிக்கல்வித்துறை உயர் அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

## சிறுபான்மையினர் குறித்து அவதூறு : வழக்கை ரத்து செய்யக்கோரி

# அண்ணாமலை தாக்கல் செய்த மனு! உயர்நீதிமன்றம் தள்ளுபடி!

சென்னை, பிப்.9-

சிறுபான்மையினர் குறித்து அவதூறாக பேசியதாக தொடரப்பட்ட வழக்கை ரத்து செய்யக் கோரி அண்ணாமலை தாக்கல் செய்த மனுவை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை, கடந்த 2022 ஆம் ஆண்டு அளித்த பேட்டியில் சிறுபான்மையினர் குறித்து அவதூறாக பேசியது சர்ச்சையை ஏற்படுத்தியது. இதைத்தொடர்ந்து அண்ணாமலை மீது சேலம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தொடரப்பட்டது.

இரு மதத்தினர் இடையே மோதலை ஏற்படுத்தும் நோக்கத்துடன் பொய்யான தகவலை பரப்பும் வகையில் பேசிய அண்ணாமலை மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் மனுவில் கோரப்பட்டது.

இந்த வழக்கில் அண்ணாமலை நேரில் ஆஜராக சேலம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், கீழமை நீதிமன்றத்தின் சம்மனையும், அவதூறு வழக்கையும் ரத்து செய்ய அண்ணாமலை தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், அவதூறு வழக்கை ரத்து செய்ய மறுத்ததுடன், அண்ணாமலை தாக்கல் செய்த மனுவையும் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

## தமிழ்நாட்டிற்கு

# வெள்ள நிவாரண நிதி இதுவரை ஒதுக்கப்படவில்லை!

## மக்களவையில் கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு குற்றச்சாட்டு!

புதுடெல்லி, பிப்.9-

தமிழ்நாட்டிற்கு, வெள்ள நிவாரணம் ஜனவரி 27 ஆம் தேதிக்குள் வழங்கப்படும் என ஒன்றிய பா.ஜ.க. அரசு உறுதியளித்த நிலையில், இன்று வரை நிதி ஒதுக்கவில்லை என நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமிழ்நாட்டைப் புரட்டிப் போட்ட புயல் வெள்ள சேதங்களை சரி செய்யவும் நிவாரண உதவியாகவும் 37 ஆயிரம் கோடி ரூபாய் வழங்க வேண்டும் என தமிழ்நாடு அரசு கோரியிருந்தது. ஆனால் இதுவரை ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை.

இந்நிலையில் இது குறித்து, நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என்று தி.மு.க. சார்பில், ஒத்தி வைப்பு தீர்மான நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருந்தது. கேள்வி நேரம் முடிந்ததும் அந்த பிரச்சினையை நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு எழுப்பினார்.



அப்போது பேசிய அவர், ஒன்றிய அமைச்சர் அமித் ஷாவைச் சந்தித்து வெள்ள நிவாரணம் வேண்டும் என வலியுறுத்தியதாகவும், ஜனவரி 27 ஆம் தேதிக்குள் வெள்ள நிவாரணம் வழங்கப்படும் என கூறியதாகவும் தெரிவித்துள்ளார். ஆனால், இதுவரை நிதி ஒதுக்கவில்லை என்றும் டி.ஆர். பாலு குற்றஞ்சாட்டினார். பிரச்சினைக்கு பதில் அளிப்பதற்கு நாடாளுமன்றத்தில் தற்போது ஒரு அமைச்சர்கள் கூட இல்லாத நிலை இருக்கிறது என்றும் அவர் கூறினார்.

தமிழ்நாடு தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும், நாடாளுமன்ற கழகக் தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர். பாலு குற்றஞ்சாட்டியுள்ளார்.

## நெல்லை மத்திய மாவட்ட இளைஞர் அணி - மாநகர இளைஞரணி சார்பில் - பாளையங்கோட்டையில்

# இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டு தீர்மான விளக்கப் பொதுக்கூட்டம்!

## டி.பி.எம்.மைதீன்கான் - சு.சுப்பிரமணியன் - சேலம் சுஜாதா - திராவிட மணி சிறப்புரை!

நெல்லை, பிப். 9 -

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி நிதி மற்றும் மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவுறுத்தலின்படி

நெல்லை மத்திய மாவட்ட இளைஞரணி மற்றும் மாநகர இளைஞரணி சார்பில் சேலத்தில் நடைபெற்ற கழக இளைஞர் அணியின் 2வது மாநில உரிமை மீட்பு மாநாட்டு தீர்மானத்தின் விளக்க தெரு முனை பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் (07.02.2024) பாளையங்கோட்டையில் நடைபெற்றது.

இன்று (09.02.2024 - வெள்ளிக்கிழமை) தச்சநல்லூர் பகுதியிலும் மற்றும் 10.02.2024 (சனிக்கிழமை) 12.02.2024 (திங்கட்கிழமை) மேலப்பாளையம் பகுதியிலும் 13.02.2024 (செவ்வாய்க் கிழமை) நெல்லை பேட்டை பகுதியிலும் ஆகிய 5 நாட்கள் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான்,மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், தலைமை கழக பேச்சாளர்கள் சேலம் சுஜாதா, திராவிட மணி, நெல்லை முத்தையா, மைக் மணி, கவிஞர் மூர்த்தி, பாம்பு கிருஷ்ணன் தூத்துக்குடி சரத் பாலா ஆகியோர் பங்கேற்று தீர்மானங்களை விளக்கி உரையாற்றுகின்றனர்.

அதன்படி 7.2.2024 அன்று நெல்லை பாளையங்கோட்டை பகுதி எம்.கே.பி.நகர் பொன்னம்மாள் திருமண மண்டபம் அருகில் வைத்து மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் அலிப்மீரான் தலைமையில் பகுதி செயலாளர்கள் நமச்சிவாயம் (நெல்லை) அண்டன் செல்லதுரை (பாளை)மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை, மாநகர இளைஞரணி அமைப்பாளர் கே.கே.கருப்புசாமி கோட்டையப்பன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மாயா,மீரான் மைதீன், மிக்கேல்,சபி அகமது,மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் இனியா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. வட்டச் செயலாளர் எம்.எஸ்.ராஜ் வரவேற்புரையாற்றினார். வட்ட பிரதி அருள்ராஜ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான்,நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிர மணியன்,கழக தேர்தல் பிரச்சாரக் குழு செயலாளர் சேலம் சுஜாதா, தலைமைக் கழக பேச்சாளர் திராவிட மணி ஆகியோர் பங்கேற்று தீர்மானங்களை விளக்கி பேசினர்.

நிகழ்வில் ஷெட்டி, ஸ்டார் முருகன், வேங்கை வெங்கடேஷ், பரமசிவ ஐயப்பன், சிவா, சித்திக், மகாராஜன், அருண்குமார், பாலன், கேபிள் குமரேசன், கதிரேசன், கணேசன், பெருமாள், மில் ஜே.குமார், ராமச்சந்திரன், பத்மா, மேரி, பிந்து, சித்ரா, ஆனிரேக்லண்ட், ஏஞ்சலின், சுப்புலட்சுமி, நர்மதா, திலக் கிருஷ்ணகுமார், அந்தோணி ராஜ், ரகுமான்ஷா, துரை, சுடலை கண்ணு, ஹமீம் முஸ்தபா, மீன்கனி, மஸ்தான், ஐயப்பன், கார்த்திக் உள்பட கழகத்தினர்,பொது மக்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் வட்ட அவைத் தலைவர் இஸ்ரவேல் நன்றி உரையாற்றினார்.

# ஒடிசாவில் ராகுல்காந்தி நீதி யாத்திரை!

## வழிநெடுகிலும் காங்கிரஸ் தொண்டர்கள் உற்சாக வரவேற்பு!

ஜர்சுகுடா, பிப்.9-

ஒடிசா மாநிலம் ஜர்சுகுடாவில் ராகுல்காந்தி, காலை தமது நீதி யாத்திரையை தொடங்கினார். அவருக்கு வழி நெடுகிலும், காங்கிரஸ் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பளித்தனர். தொண்டர்களிடம் கைகுலுக்கிய படியும், செல்ஃபி எடுத்தும் ராகுல்காந்தி தமது நீதி யாத்திரையை தொடர்ந்தார்.

யாத்திரையில் உரையாற்றிய ராகுல்காந்தி, பிரதமர் நரேந்திர மோடி ஒரு போதும் ஜாதி வாரி கணக்கெடுப்பை நடத்த மாட்டார் என ராகுல்காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஏனென்றால், பிரதமர் மோடி தெலி என்னும் பொது பிரிவைச் சேர்ந்தவர் என்றும், ஆனால் தாம் ஓ.பி.சி. பிரிவைச் சேர்ந்தவர் என்று கூறி மக்களை ஏமாற்றியுள்ளதாகவும் ராகுல்காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.



பிரதமர் நரேந்திர மோடி ஒபிசி பிரிவில் பிறக்கவில்லை. அவர் பொதுப்பிரிவான தெலி என்னும் பிரிவில் பிறந்தார்

தெலி பிரிவு, கடந்த 2000-ல் பா.ஜ.க. அரசால் ஒபிசி பிரிவில் இணைக்கப்பட்டது.

எனவே தான் ஓ.பி.சி, விவசாயிகள், தொழிலாளர்களை அவர் சந்திப்பதில்லை. அதானி உடன் மட்டும் தான் அவர் நட்பு பாராட்டுகிறார்.

தான் ஒரு ஓ.பி.சி. பிரிவை சேர்ந்ததாக கூறி மக்களை ஏமாற்றி வருகிறார். ஒருபோதும் ஜாதிவாரி கணக்கெடுப்பை பிரதமர் மோடி நடத்த மாட்டார் என்று ராகுல் காந்தி குற்றஞ்சாட்டினார்.

## கச்சத்தீவு அருகே

# ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 19 மீனவர்கள் சிறைபிடிப்பு!

## மீனவர்களின் 2 விசைப்படகுகளை சிறைபிடித்து இலங்கைக் கடற்படை அட்டூழியம்!

ராமேஸ்வரம், பிப்.9-

கச்சத்தீவு அருகே எல்லைத் தாண்டி மீன்பிடித்ததாக கூறி ராமேஸ்வரத்தை சேர்ந்த 19 மீனவர்களையும், அவர்களது 2 விசைப்படகுகளையும் இலங்கை கடற்படையினர் சிறைபிடித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரத்தில் இருந்து நேற்று 430 விசைப்படகுகளில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்வளத்துறை அனுமதி பெற்று கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர்.

அதிகாலை கச்சத்தீவு, நெடுந்தீவு இடையே நடுக்கடலில் ராமேஸ்வரத்தை சேர்ந்த ரீகன் மற்றும் சசி ஆகியோருக்கு சொந்தமான 2 விசைப்படகுகளில் ராமேஸ்வரத்தை சேர்ந்த 17 மீனவர்கள் மற்றும் ஒடிசாவை சேர்ந்த இருவர் என 19 பேர் மீன்பிடித்து கொண்டிருந்தனர்.

அப்போது, அவர்களை எல்லைத் தாண்டி மீன்பிடித்ததாக கூறி, படகுகளுடன் இலங்கை கடற்படையினர் சிறை பிடித்தனர்.

தொடர்ந்து, மீனவர்களின் படகுகளையும் காங்கேசம் துறைமுகத்திற்கு அழைத்துச் சென்று இலங்கை கடற்படையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஒழுங்கு நடவடிக்கை

## தலைமைக் கழக அறிவிப்பு

தேனி வடக்கு மாவட்டம், தேனி நகரத்தைச் சேர்ந்த எம்.வி.கே.ஜீவா கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Sus pension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 8.2.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை மாவட்டம் திருப்பாலை யாதவர் பெண்கள் கலைக் கல்லூரி கூட்டரங்கில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் சுய உதவி குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு மதி எக்ஸ்பிரஸ் மின் வாகனங்கள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர். ஆ.வெங்கடேசன், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன், மண்டல தலைவர் வாசுகி சசிகுமார் பகுதிச் செயலாளர் சசிகுமார் ஆகியோர் உடன் உள்ளனர்.



கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி பகுதியில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் நபார்டு WIF TNSAMB நிதியுதவியுடன் ரூ.5 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்தை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திறந்து வைத்தார். உடன் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன் மைச் செயலாளர் செல்வி.அபூர்வா, அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஜி.பிரகாஷ், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.




விருதுநகரில் ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து தேசம் தழுவிய ஆர்ப்பாட்டம் சி.பி.ஐ.எம். மாவட்டச் செயலாளர் கே.அர்ஜுனன் தலைமையில் நடைபெற்றது. இதில் ராமசாமி, சி.பி.ஐ. பொன்னு பாண்டி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பாலசுப்பிரமணியன் சி.பி.எம். நகரச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், நகர மன்றத் தலைவர் எஸ்.ஆர்.எஸ்.ஆர்.மாதவன், கழக பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.பி.மதியழகன், எஸ்.சுதாகர், தொ.மு.ச. ராஜ செல்வம், தி.க.நல்லதம்பி, புகழேந்தி, நகர அவைத் தலைவர் காசிராஜன், நகர துணைச் செயலாளர் ஏ.எஸ்.கே.ரமேஷ்குமார், அமைப்பு சாரா ஓட்டுநர் அணி எல்.திருமாறன், சி.பி.எம். தேனி வசந்தன், சி.பி.எம். முருகன், நேஷனல் ராமர், ஆர்.மரியராஜ் மற்றும் நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## கூட்டுறவுத் துறை மூலம் செயல்படும்

# வங்கிகளின் பணிகள் குறித்து ஆய்வு!

### அதிகாரிகள் கூட்டத்தில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் மேற்கொண்டார்!

சென்னை, பிப். 9 -

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சென்னை, கோட்டூர் புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் செய்தியாளர்கள் சந்திப்பின் போது தெரிவித்ததாவது :

தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின் படி, கூட்டுறவுத்துறை தனக்கென்று சில திட்டங்களை வகுத்து, அந்த திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அலுவலர்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகள் தரப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக அவர்களுடைய பணிகள் எப்படி இருக்கிறது என்பதை எல்லாம் வாரந்தோறும் நம்முடைய பதிவாளர்கள், நம்முடைய கூடுதல் தலைமைச் செயலாளர் எல்லாம் ஆய்வுகளை மேற்கொள்கிறார்கள். அமைச்சர் என்ற முறையில் நானும் அவ்வப்போது ஆய்வுகளை மேற்கொள்ளுவதோடு, பொதுவாக அனைத்து மாவட்டங்களில் இருந்தும் இருக்கக்கூடிய அலுவலர்களைக் கொண்டு ஒரு ஆய்வுக் கூட்டத்தை நேரடியாக நடத்துவது வழக்கம். அந்த வகையிலான கூட்டம் தான் இன்று இங்கே கூட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக, வருகின்ற 12ஆம் தேதி சட்டமன்ற கூட்டத் தொடர் நடை பெறவுள்ள காரணத்தால், கடந்த காலத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் எந்த அளவிற்கு செயல்படுத்தப்பட்டுள்ளது என்றும், இனி புதிய அறிவிப்புக ளாக நாம் என்ன அறிவிக்கலாம் என்பது பற்றியும் கலந்தா லோசிக்கும் கூட்டமாகத்தான் நாம் இந்த கூட்டத்தை நடத்தி வருகின்றோம். கூட்டுறவுத்துறை பொதுமக்களோடு நெருங்கிய தொடர்புடைய துறை. அரசு வழங்குகின்ற குடிமைப் பொருட்களை அத்தியாவசியப் பொருட்களை பொதுமக்களுக்கு முறையாக கொண்டு சென்று சேர்ப்பது மட்டுமில்லாமல், நெருக்கடி காலங்களில் சமீபத்தில் கூட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களுக்கு நிவாரணத் தொகையினை அறிவித்தார்கள்.

அதைப்போல தென்மாவட்டங்களில் திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, தென்காசி ஆகிய மாவட்டங்களில் பெருமழை பெய்து மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. அந்த பகுதி மக்களுக்கு நிவாரணத் தொகைகளையும் அறிவித்தார்கள்.

அதைபோல இப்போது மட்டும் அல்ல சமீபத்தில் நடந்து முடிந்த பொங்கல் பண்டிகையை ஒட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த பொங்கல் தொகுப்பினையும் கொண்டு சென்று சேர்ப்பது என அன்றாடப் பணிகளோடு கூடுதல் பணியாக இத்துறையின் மூலம் செயல்படுத்தி வருகிறோம். அதைபோல நலிந்த பிரிவினர், கிராமப்புற மக்கள், விவசாயப் பிரிவினர், கால்நடை வளர்ப்போர், விதவைப் பெண்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்தவர்களுக்கெல்லாம் நிதி உதவிகளை வழங்கி வங்கிசேவையில் ஒரு குறிப்பிடத் தக்க சாதனையினை கூட்டுறவுத்துறையின் மூலம் செயல்படும் வங்கிகள் மூலம் செயல்படுத்தி வருகிறது. இத்தகைய பணி முன்னேற்றங்களை ஆய்வு செய்கின்ற கூட்டமாக இக்கூட்டம் நடைபெற்றுள்ளது.

கூட்டுறவுத்துறையின் சார்பில் கடந்த காலங்களில் சட்டமன்ற கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்ட 44 அறிவிப்புகளில் 43 அறிவிப்புகள் அரசாணை வழங்கி செயல்படுத்தப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள ஒரு அறிவிப்பும் இன்னும் ஒரு சில தினங்களில் நடைமுறைக்கு வரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மொத்தமாக இன்றைக்கு தமிழ்நாடு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் எல்லா துறைகளிலும் சிறப்பாக செயல்பட்டு இந்திய துணைக் கண்டத்தில் சிறந்த முன்னேறுகின்ற மாநிலமாக நம்முடைய மாநிலம் இருக்கிறது என்ற நற்பெயரைப் பெற்று, அதன் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தியாவின் நம்பர் 1 முதலமைச்சர் என்றெல்லாம் பாராட்டப்படுகிறார்கள். அப்படிப்பட்ட பாராட்டுகளைப் பெறுகின்ற முதலமைச்சர் அவர்களின் கட்டளைகளை சிறப்பாக கூட்டுறவுத்துறை செயல்படுத்தி வருகின்றது என்பதை நான் பெருமையோடு பதிவு செய்கின்றேன்.

கேள்வி : மத்திய அரசு பாரத் அரிசி, பாரத் ஆட்டா, குறைந்த விலை மளிகைப். பொருட்களை அறிமுகப்படுத்தியுள்ளது. அதுபோல தமிழ்நாடு அரசு ஏதும் அறிவித்துள்ளதா?

பதில்: சில நேரங்களில் ஒன்றிய அரசும் அத்தியாவசியப் பொருட்களை தருவார்கள். அது உணவுத் துறையின் மூலமாக கொள்முதல் செய்யப்பட்டு, கூட்டுறவுத் துறைக்கு வழங்கப்படும். ஆக இது போன்ற முடிவுகள் உணவுத் துறையின் மூலமாக எடுக்கப்படும். நம்முடைய செயலர் அவர்கள் உணவுத் துறைக்கும் செயலராக உள்ளார். இது பற்றிய அறிவிப்புகள் முறையாக அறிவிக்கப்படவில்லை. செய்தித்தாள்களில் வந்துள்ளது.

கேள்வி : ரேசன் கார்டுகளை உணவுத்துறை வழங்குகிறது. ரேசன் கடைகளை கூட்டுறவுத்துறை நடத்தி வருகிறது. கடந்த ஓராண்டாக, ஆறு மாதங்களாக ரேசன் கார்டுகள் வழங்கவில்லை என ரேசன் கடைகளில் தான் பொதுமக்கள் பிரச்சனை செய்கிறார்கள் அது பற்றி...

பதில் : ஏற்கனவே கலைஞர் உரிமைத் தொகை பெறுவதற்காக புதிது புதிதாக குடும்ப அட்டைகளுக்கு விண்ணப்பித்தார்கள். ஆகவே, குறிப்பிட்ட காலத்திற்கு நிறுத்திவைக்க வேண்டும் என விரும்பித்தான் அதை செய்தார்கள். கூடிய விரைவில் தற்போது வழங்குவதற்கான நடவடிக்கைகளை காரணி அடிப்படையில் மேற்கொள்கிறார்கள். நிறுத்தப்பட்ட பணிகள் சில ஆய்வுகள் மேற்கொண்ட பிறகு அதன் அவசியம் கருதி வழங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேட்டியளித்தார்.

# நியாய விலைக் கடைகளில் விரல் ரேகை!

### தமிழ்நாடு அரசு விளக்கம்!

சென்னை, பிப். 9 -

நியாய விலைக் கடைகளில் விரல் ரேகை சரிபார்ப்பு தொடர்பாக சில நாளிதழ்களில் வெளியான செய்தி குறித்து அரசு அளித்துள்ள விளக்கம் வருமாறு:-

06.02.2024, 07.02. 2024 ஆகிய நாட்களில் சில நாளேடுகளில், நியாய விலைக் கடைகளில் இன்றியமையாப் பண்டங்கள் பெறும் பயனாளிகளின் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் சுயவிவரங்களை ஒரு வெள்ளைத் தாளில் அளிப்பதுடன் விரல் ரேகை சரிபார்ப்பை இம்மாத (பிப்ரவரி) இறுதிக்குள் மேற்கொள்ள வேண்டுமென்றும், அவ்வாறு மேற்கொள்ளாதவர்களின் பெயர்கள் நீக்கம் செய்யப்படும் என்றும், இதனால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர் என்றும் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் 2013ன் படி, பொதுவிநியோகத் திட்ட தரவுகளில் ஏற்கனவே பதியப்பட்ட முன்னுரிமை மற்றும் அந்தியோதயா அன்ன யோஜனா குடும்ப அட்டைதாரர்களின் ஆதார் விவரங்களைச் சரிபார்ப்பதற்காக மின்னணு குடும்ப அட்டையில் இணைக்கப்பட்ட அனைத்துப் பயனாளிகளின் விரல் ரேகை அடிப்படையிலான சரிபார்ப்பினை மேற்கொள்ள வேண்டும் என்று ஒன்றிய அரசு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. அதன்படி குடும்ப உறுப்பினர்களுக்கு ஏதும் இடையூறின்றி இப்பணியினைச் செய்திட அறிவுறுத்தப்பட்டு அவர்கள் ஓய்வாக இருக்கும் போதோ அல்லது பொருள்கள் வாங்க கடைக்கு வரும்போதோ கைவிரல் ரேகைப் பதிவு மூலம் புதுப்பிக்கக் கூறப்பட்டு அக்டோபர் 2023 முதல் குடும்ப உறுப்பினர்களின் விரல்ரேகை சரிபார்ப்புப் பணி நடைபெற்று வருகிறது.

இதுவரை 63% குடும்ப அட்டைதாரர்களின் விவரங்கள் சரிபார்க்கப்பட் டுள்ளன. மீதியுள்ள அட்டைதாரர்களுக்கும் சரிபார்க்கும் பணி படிப்படியாக நடைபெற்று வருகிறது. குடும்ப அட்டைதாரர்கள் அவரவர்கள் வசதிக்கேற்ப விவரங்களைப் புதுப்பித்துக் கொள்ளலாம். அவ்வாறு இயலவில்லையெனில், இதற்கென தனி முகாம்கள் நடத்தவும், தேவைப்படின் வீட்டிற்கே சென்று புதுப்பித்திடவும் நடவடிக்கை எடுக்கப்படும். சில நாளிதழ்களில் குறிப்பிட்டிருப்பது போல் குடும்ப அட்டைகள் ஏதும் இரத்து செய்யப்பட மாட்டாது என்றும், கைவிரல் ரேகை பதிவு செய்யாதவர்களின் பெயர்களும் நீக்கப்படாது என்றும், வெள்ளைத் தாளில் சுய விவரங்கள் ஏதும் தரவேண்டியதுமில்லை என்பதால், இதுகுறித்து பொதுமக்கள் யாரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை என தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தி.மு.க. மகளிர் அணி

# புதுக்கோட்டை வடக்கு மாவட்ட துணைத் தலைவர் நியமனம்

### தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு

**புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்**

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மகளிர் அணி துணைத் தலைவராக **திருமதி கமலா செல்வம்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 8.2.2024

**ஜெ.ஹெலன்டேவிட்சன்,**
செயலாளர்,
தி.மு.க. மகளிர் அணி



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மகளிர் அணி சார்பில் ஒலிப்பதிவின் மூலம் திராவிட மாடல் ஆட்சியின் நலத்திட்ட விளக்க 100 நாள் வாகன பிரச்சாரத்தை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் – நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

## நிலக்கரி நிறுவனச் சுரங்கங்களில்

# கார்பன் உமிழ்வைக் கட்டுப்படுத்த எடுத்த நடவடிக்கை என்ன?

### மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, பிப். 9 -

இந்தியாவில் நிலக்கரி உற்பத்தி குறித்தும் என்.எல்.சி.எல். உட்பட பல்வேறு நிலக்கரி நிறுவன சுரங்கங் களில் கார்பன் உமிழ்வைக் கட்டுப்படுத்த மின் வாகனங்களை உபயோகிக்கும் திட்டம் குறித்து நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

அது வருமாறு :-

இந்தியாவில் கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்த நிலக்கரி உற்பத்தி சரிந்துள்ளதா?

அப்படியானால், அதன் விவரங்கள்?

கோல் இந்தியா லிமிடெட் (CIL) மற்றும் NLCIL ஆகியவை டீசல் நுகர்வுக்கான மிக அதிக எண்ணிக்கையில் உள்ள ஹெவி எர்த் மூவிங் மெஷின்களின் திரவ இயற்கை எரிவாயு (எல்என்ஜி) மூலம் மாற்ற முடிவு செய்துள்ளனவா?

அப்படியானால், அதன் விவரங்கள்?

இது தொடர்பாக கெயில் நிறுவனத்துடன் அரசு ஏதேனும் ஒப்பந்தம் செய்துள்ளதா?

அப்படியானால், அதன் விவரங்கள்?

CIL மற்றும் NLCIL ஆகியவை அதன் அனைத்து நிலக்கரி உற்பத்தி நிறுவனங்களிலும் சுரங்க நடவடிக்கைகளில் கரியமில வாயு வெளியேற்றத்தை ஈடுகட்ட தொடர் நடவடிக்கைகளை எடுத்துள்ளனவா?

அப்படியானால், அதன் விவரங்கள்?

CIL மற்றும் NLCIL ஆகியவை அடுத்த ஐந்தாண்டுகளுக்கு அதன் அனைத்து சுரங்கப் பகுதிகளிலும் 1500 மின் - வாகனங்களைச் சேர்க்கதிட்டமிட்டுள்ளதா?

அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

இதற்கு ஒன்றிய அரசின் நாடாளுமன்ற விவகாரங்கள், நிலக்கரி மற்றும் சுரங்கங்கள் அமைச்சர் பிரல்ஹத் ஜோஷி எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு :-

கடந்த மூன்று ஆண்டுகளில் நிலக்கரி உற்பத்தி விவரங்கள் பின்வருமாறு :-

2020-21 ஆண்டு நிலக்கரி உற்பத்தி 716.08 மில்லியன் டன்கள்

2021-22 ஆண்டு நிலக்கரி உற்பத்தி 778.21 மில்லியன் டன்கள்

2022-23 ஆண்டு நிலக்கரி உற்பத்தி 893.19 மில்லியன் டன்கள்

கோல் இந்தியா லிமிடெட் (CIL) நிறுவனம், தற்போதுள்ள டீசல் டம்பர்களில் இரட்டை எரிபொருள் டீசல் - திரவ இயற்கை எரிவாயு (LNG) செயல்பாட்டை தொழில்நுட்ப - பொருளாதாரத்திற்கான முன்னோடித் திட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்துவதற்கான முயற்சியை எடுத்துள்ளது. கார்பன் உமிழ்வைக் குறைப்பதில் விளைவு உட்பட சாத்தியக்கூறு ஆய்வு. தற்போதுள்ள இரண்டு டீசலில் இயங்கும் BEML தயாரிப்பில் எல்என்ஜி கருவியை மீண்டும் பொருத்தி இரட்டை எரிபொருள் (டீசல் மற்றும் எல்என்ஜி) செயல்பாட்டில் ஒடிசாவின் மகாநதி கோல்ஃபீல்ட்ஸ் லிமிடெட்டின் லக்கன்பூர் ஓபன் காஸ்ட் திட்டத்தில் (OCP) 100T டம்பர்கள் பைலட் திட்டத்தை நடத்துவதற்காக இந்திய எரிவாயு ஆணையம் (கெயில்) மற்றும் பாரத் எர்த் மூவர்ஸ் லிமிடெட் ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

NLCIL இல், லிக்னைட் மற்றும் அதிக பாரம் தோண்டுவதற்குப் பயன்படுத்தப்படும் முக்கிய சுரங்க இயந்திரங்கள் / உபகரணங்கள் மின்சாரத்தைப் பயன்படுத்தி இயக்கப்படுகின்றன. டோசர்கள், பைப்-லேயர்கள், பேக்-ஹோஸ், ரோடு கிரே டர்கள் போன்ற சில துணை சுரங்க ஹெவி எர்த் மூவிங் மெஷின்கள் (HEMM) மட்டுமே டீசலில் இயக்கப்படுகின்றன. தற்போதைய நிலவரப்படி, LNG எரிபொருளுக்கு மாற்றாக NLCIL இல் எந்த முன்மொழிவும் இல்லை.

கோல் இந்தியா லிமிடெட், கீழே பட்டியலிடப்பட்டுள்ள சுரங்க நடவடிக்கைகளில் கார்பன் உமிழ்வைக் குறைக்க பல்வேறு முயற்சிகளை எடுத்துள்ளது.

முதல் மைல் இணைப்பு (FMC) திட்டங்களின் கீழ், இயந்திரமயமாக்கப்பட்ட கன்வேயர் பெல்ட் மற்றும் CHP/SILO மூலம் நிலக்கரி கொண்டு செல்லப்படுகிறது. FMC திட்டங்கள் சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலக்கரி போக்குவரத்து முறைகளாக உருவாகின்றன, இது தூசி உமிழ்வுகள், டிப்பர் டெயில்பைப் உமிழ்வுகள், டிப்பர் டீசல் நுகர்வு, கட்டண ஏற்றி உமிழ்வுகள், ரயில்வே சைடிங்ஸ் உமிழ்வுகள், சுற்றுப்புற ஒலி அளவுகள் மற்றும் டிப்பர் கார்பன் தடம் ஆகியவற்றைக் குறைக்க வழிவகுக்கிறது.

ii திறந்தவெளி சுரங்க ங்களுக்கு மேற்பரப்பு சுரங்கத் தொழிலாளர்களையும், நிலத்தடி சுரங்கங்களுக்கு தொடர்ச்சியான சுரங்கத் தொழிலாளர்களையும் அனுப்புதல்.

iii ஒவ்வொரு ஆண்டும் மரம் நடும் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.



iv. எல்.இ.டி. விளக்குகள், ஆற்றல் திறன் கொண்ட ஏசிகள், ஆற்றல் திறன் கொண்ட பம்புகள் மற்றும் மின்விசிறிகள், பசுமை கட்டடங்கள், மின்தேக்கி வங்கிகள் போன்ற பல்வேறு ஆற்றல் பாதுகாப்பு மற்றும் ஆற்றல் திறன் நடவடிக்கைகள்.

v. மின் வாகனங்களை அதன் அனைத்து துணை நிறுவனங்களிலும் பயன்படுத்துதல்.

சுரங்க நடவடிக்கைகளில் கார்பன் வெளியேற்றத்தை ஈடுகட்ட NLCIL எடுத்த நடவடிக்கைகள் பின்வருமாறு :-

புதிய உபகரணங்களுடன் உதவி சேவை உபகரணங்களை சரியான நேரத்தில் மாற்றுதல்.

ii கார்பன் உமிழ்வைக் குறைக்கும் உபகரணங்களுக்கு கடுமையான பராமரிப்பு அட்டவணைகள் பின்பற்றப்படுகின்றன.

iii லிக்னைட் அகழ்வாராய்ச்சிக்கு பயன்படுத்தப்படும் முக்கிய இயந்திரங்கள் / உபகரணங்கள் மின்சாரத்தைப் பயன்படுத்தி இயக்கப்படுகின்றன.

iv. துணை டீசல் இயக்கப்படும் சுரங்க உபகரணங்களின் பயன்பாட்டைக் குறைக்கும் வகையில் சுரங்க நடவடிக்கைகள் திட்ட மிடப்பட்டுள்ளன.

v. கார்பனை உமிழ்வு நடுநிலையாக்க உரிமை கோரப்பட்ட சுரங்கப் பகுதிகளில் பெருமளவில் மரங்களை வளர்ப்பது மற்றும் காடு வளர்ப்பு மேற்கொள்வது

vi. காடு வளர்ப்பு / பசுமை வழிச்சாலை பராமரிக்கப்பட்டு கார்பன் வெளியேற்றத்தை சமாளிக்க மேம்படுத்தப்பட்டுள்ளது.

கோல் இந்தியா லிமிடெட் பல்வேறு சுரங்கங்கள், பகுதிகள் மற்றும் துணைத் தலைமையகங்களில் மின்சார வாகனங்களை (இ-வாகனங்கள்) வாங்குதல் / வாடகைக்கு அமர்த்துதல் ஆகியவற்றை வலியுறுத்துகிறது. கோல் இந்தியா லிமிடெட்டில் தற்போதைய மின் வாகனங்களின் எண்ணிக்கை 178 ஆகும், மேலும் தற்போதுள்ள போக்குவரத்து ஒப்பந்தங்களின் காலம் மற்றும் துணை நிறுவனங்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு, இலக்கு பின்வருமாறு :-

2023-24ல் 380 மின் வாகனங்களும்

2024-25ல் 143 மின் வாகனங்களும்

2025-26ல் 158 மின் வாகனங்களும் ஆக மொத்தம் 681மின் வாகனங்கள் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது

அதே நேரம் என்.எல்.சி.ஐ.எல் அதன் சுரங்கப் பகுதிகளில் மின் வாகனங்களைச் சேர்க்கத் திட்டமிடவில்லை.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் தனது பதிலில் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா.சு. தங்கராசன்

**பிப்ரவரி 9 (1985)**



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்ற தொடங்கி, உசிலம்பட்டி வட்டக் கழகச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும், நீண்டகாலம் தொடர்ந்து சேடபட்டி ஒன்றியக் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணைத் தலைவர், உசிலம்பட்டி நிலவள வங்கி தலைவர் பொறுப்பு வகித்தவர்.

இந்தித் திணிப்பு, சட்டநகல் எரிப்பு, மிசா எதிர்ப்பு, கருப்புக் கொடி உள்ளிட்ட கழகம் அறிவித்த பெரும்பாலான போராட்டங்களில் கலந்துகொண்டு பல முறை சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



கடலூரில்
கலைஞர்
பண்பாட்டுப்
பாசறை விழா







ARASU ARTS

## நூற்றாண்டின் தலைவருக்கு நூற்றாண்டு விழா

09.02.2024 – வெள்ளிக்கிழமை
புனித வளனார் மேல்நிலைப் பள்ளி அரங்கம், கடலூர்.

சிறப்பு மலரை வெளியிட்டு விழாப் பேருரை
**M.R.K.பன்னீர்செல்வம்** B.Sc., BL.,
மாண்புமிகு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர்

கண்காட்சியினை திறந்து வைத்து சிறப்புரை
**கா.இராமச்சந்திரன்**
மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்


கலைநிகழ்ச்சிகளை தொடங்கி வைத்து சிறப்புரை
**பி.கே.சேகர்பாபு**
மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்

மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி சிறப்புரை
**சி.வெ.கணேசன்**
மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும்
திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர்

என்றும் அன்புடன்
**கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.**








நாள் : 09.02.2024 வெள்ளிக்கிழமை
நேரம் : மாலை 6:00 மணியளவில்
இடம் : சுகுமாரி திருமண மண்டபம்
காஞ்சிபுரம்.



## ப.திருமாவேலன் எழுதிய

## வைக்கம் வீரரும் ஜெயமோகனின் கயமையும்

நூல் வெளியீட்டு அறிமுக விழா

தலைமை :
திராவிட ஆழ்வார்
**எஸ்.ஜெகத்ரட்சகன்** எம்.பி. அவர்கள்
மேனாள் ஒன்றிய அமைச்சர்

நூல் வெளியிடுதல் :
மாண்புமிகு
**எ.வ.வேலு** அவர்கள்
பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்

பெற்றுக் கொள்ளுதல் :
மாண்புமிகு
**தங்கம் தென்னரசு** அவர்கள்
நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர்

முன்னிலை :
மாண்புமிகு
**தா.மோ.அன்பரசன்** அவர்கள்
ஊரக தொழிற்துறை அமைச்சர்
காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க செயலாளர்

திரு. **க.சுந்தர்** எம்.எல்.ஏ.,
காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர்

திரு. **க.செல்வம்** எம்.பி.,
காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க துணைச் செயலாளர்

அனைவரையும் வருக ! வருக !!
என வரவேற்கும்...
வழக்கறிஞர் **சி.வி.எம்.பி.எழிலரசன்** B.E.,B.L., MLA
செயலாளர், தி.மு.க. மாணவர் அணி
காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர்

# திராவிட சினிமா 44

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில், திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

## திராவிட அரசியலும் எழுபதுகளின் தமிழ்த் திரைப்படங்களும்!

■ வீ.மா.ச.சுபகுணராஜன்





1967-ஆம் ஆண்டில், பேரறிஞர் அண்ணா தலைமையிலான தி.மு.க. அரசு அமையுமென்று அன்றைய காங்கிரஸ் கட்சியும், அதன் மாபெரும் தலைவர்களும் கனவில்கூட நினைக்கவில்லை என்பதே உண்மை. அண்ணா வரலாறு காணாத மாபெரும் கூட்டணியைக் கட்டியமைத்து, தேர்தலைச் சந்தித்தார். எனினும், தி.மு.க. மட்டுமே தனிப்பெரும்பான்மை பெறுமென, கூட்டணியில் இருந்த ராஜாஜி உள்ளிட்டவர்களும் எண்ணவில்லை.

தி.மு.க.வின் தனித்த பெரும்பான்மை இந்தியக் குடியரசையே அதிர வைத்த வெற்றி. ஆம், இந்திய அரசியல் வரலாற்றில் ஒரு மாநிலக் கட்சி, அதிலும் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் 1962-ஆம் ஆண்டில்தான் 'தனித் திராவிட நாடு' கோரிக்கையைக் கைவிட்ட கட்சி, அறுதிப் பெரும்பான்மை பெற்று ஆட்சியில் அமர்ந்தது அதுவே முதல்முறை. இன்னுமொரு கருத்தில் கொள்ளவேண்டிய வரலாற்றுத் தரவு, மாநிலக் கட்சி என்ற கட்டமைப்பை எந்தவித தனித்த மத அடையாளமும் சாராமல் உருவாக்கிக் கொண்ட கட்சி தி.மு.க மட்டுமே. காஷ்மீரிலும் பஞ்சாபிலும் மாநிலக் கட்சிகள் இருந்தன என்றாலும், அவை மத அடையாளத்தைக் கொண்டிருந்தன என்பதை மறுக்கவியலாது.

அதனால்தான் இந்திய தேசியவாதம் கொந்தளித்து, இழிவு பேசியது. தேசிய முதலாளிகளும், குறிப்பாக திரைத்துறையினரும் கடுமையான எதிர்வினையாற்றினர். எதிர்வினை என்பது அதன் வன்மத்தை வெளிப்படுத்தும் முறையான சொல் அல்ல. ஆம், தி.மு.க. ஆட்சி ஏற்பட்ட உடன், எதிர்ப்புகள் வலுவாக எதிர்த்தாக்குதல் நடந்தன. இதில் அனைத்துவிதமான தேசிய வாதங்களும் இணைந்து நின்றன.

### தேசியத்தின் வன்மம் வேரறுப்பு

ஆட்சிப் பொறுப்பு என்பது, அண்ணாவின் அறிவுறுத்தல் போல 'அரியணை சுகம் வழங்கும் பதவியல்ல. லட்சியங்களைக் கடமைகளை முன்னெடுப்பதற்கான வாய்ப்பு. ஆனால் ஆட்சியாளருக்கான பெருஞ்சுமை, தடுப்பாட்டம்'. ஆம், ஆட்சிப் பொறுப்பு, மறுநாளிலேயே வாக்குறுதி நிறைவேற்றத்தைக் கோரும் எதிர்க்கட்சியினருக்கு பொறுப்பாக பதிலளிக்கும் தார்மீகக் கடமை கொண்டது. திட்டச் செயல்பாடுகளையும், பதில்களையும் கையாளும் பணி சவாலானது.

அரிசி, படி பத்து ரூபாய்க்கு விற்பதை நியாயப்படுத்திய பெருந்தலைவர்கள், 'எங்கே ரூபாய்க்கு மூன்று படி' என மூன்றாவது நாளிலேயே மக்கள் தரப்புப் போராளிகள் ஆனார்கள். ஆட்சிப் பொறுப்பேற்ற குறுகிய காலத்திலேயே நேர்ந்த அண்ணாவின் அதிர்ச்சி மரணம், இங்கே பெரும் சரிவுக்கு வழிவகுக்க முடியாமல் தூணாக நின்றது, பெரியார் எனும் தகப்பன். கலைஞரை உறுதியாக நின்று முதல்வராக்கியதில் அவர் பங்கு பெரிது. கலைஞரது நுட்பமான அரசியல் அணுகுமுறை தி.மு.க. ஆட்சியைக் காப்பாற்றியது.

1969 ஆம் ஆண்டு காங்கிரஸ் பெரும்பிளவில், தி.மு.க.வின் 25 நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையை ஈட்டியாகவும் கேடயமாகவும் கொண்டு இந்திரா அம்மையாருக்குத் துணை நின்று தேசியத்தின் வன்மத்தை சற்றேனும் முனை மழுங்கச் செய்தார் கலைஞர் எனும் மாபெரும் ஆட்சியாளர்.

ஆட்சியில் கவனம் செலுத்தி, வாக்குறுதிகளை நிறைவேற்ற, வெகுவான மக்கள் நலத்திட்டங்களைச் செயல்படுத்திய தி.மு.க.வால், திரைத்துறையில் பெருமளவில் கவனம் செலுத்த இயலவில்லை. ஏற்கெனவே கண்டது போல எம்.ஜி.ஆர். போன்றவர்கள் கொள்கை உறுதியற்ற தனிநபர் அரசியலை மிகத் தீவிரமாகத் திட்டமிட்டு முன்னெடுத்தனர். விளைவு, 1960 களின் தமிழ்த் திரைப்படங்கள் வெகுவேகமாகத் தரமும் நிறமும் குணமும் இழக்கத் தொடங்கின. குறிப்பாக, திராவிடச் சிந்தனைகளைச் சுமந்து சென்ற திரை வடிவம் ஒரு கட்டத்தில் பலமுனைத் தாக்குதலுக்கு ஆளானது.

> **அவரது திரைப்படங்களில் விலங்குகள் பகுத்தறியும் திறன் மிக்கவையாகவும், மனிதர்கள் பகுத்தறிவற்றவர்களாகவும் உலவியது பெரும் நகைமுரண் என்றே கருதலாம்.**

பக்தியின் பெயரால், தமிழ்மொழியைக் கவர முனைந்ததோடு, பகுத்தறிவுச் சிந்தனைகளின் வேரறுக்கும் பணிக்கு பக்தியைப் பக்கத் துணை ஆக்கிக் கொண்டது தமிழ்த் திரைப்பட முதலாளிகள் அணி. போதாக்குறைக்கு, தரம் வீழ்ந்த திரைப்படங்களின் மீதான அதிருப்தி, இந்தித் திரைப்படங்களின் வருகைக்கு வழிவகுத்தது.

### இந்திப் படங்களுக்கு இல்லாத தடை

இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போரால் ஆட்சிமாற்றம் நிகழ்ந்த மாநிலத்தில் இந்தித் திரைப்படங்களின் ஆக்கிரமிப்பு மேலோங்கியது பெரும் முரண்தான். இந்த முரணை எப்படிப் புரிந்துகொள்வது என்பதில் இன்னும் தெளிவான, தீர்க்கமான ஆய்வுகளுக்கான தேவையுள்ளது. ஆனால், இப்போதைக்கு ஒரு சில பார்வைகள் உதவக்கூடும்.

மொழிப்போரில் மாணவர் முன்னெடுப்பு என்பது முழுமையாக திராவிடக் கருத்தியலை ஏற்றோரால் மட்டும் உந்தப்படவில்லை. அது ஒரு பல்முனைப் போராட்ட அரங்கு. திராவிடமும், தமிழ்ப்பற்றுக் கொண்ட தேசியமும் இணைந்து செயல்பட்ட களம். மொழிப்பற்றுக் கொண்ட தேசியவாத மனங்கள், ஒரு நிலையில் திராவிடத்துக்குத் துணை போய்விட்டதாகக் கருதப்பட்டது. எனவே மொழிப்பற்றாளர் தேசியவாதத் தோழமைகள், புதிய திராவிட அரசுக்கெதிரான காய் நகர்த்தத் தொடங்கின. தமிழ் மொழியுரிமைக் குரலைத் தணித்துக் கொண்டு தேசிய சங்கு ஊதின. விளைவு, மொழியுரிமைப் போரின் உரிமையை, திராவிடத்துக்கு மறுக்கும் முனைப்பில், இந்தித் திரைப்படங்களுக்குத் தடைபோட முனையவில்லை.

என்னதான் அதிராமல் சொல்ல நினைத்தாலும், இது எழுபதுகளிலும் தொடர்ந்ததற்குக் காரணம், ஏற்கெனவே கண்ட தமிழ்த் திரைப்படங்களின் தர வீழ்ச்சியும், எம்.ஜி.ஆர். - சிவாஜி எனும் இரண்டு முதிர் நாயகர்களின் திரைப்படங்களுமே எனக் கருதுகிறேன். 60 களின் தமிழ்த் திரைப்படங்களை முற்றாக ஆக்கிரமித்திருந்தனர் இவர்கள் இருவரும். ஆனால், எழுபதுகளில் இந்திப் படங்களின் ஆக்கிரமிப்பை எதிர்கொள்ள வியலாமல், இவர்கள் இருவரும் இந்தி மறு ஆக்கப் படங்களில் நடிக்கத் தொடங்கிய போது வீழ்ச்சி முழுமையுற்றது. ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் தமிழ்த் திரைப்படங்கள் இந்தியில் மறு ஆக்கம் செய்யப்பட்ட நிலை மாறி தலைகீழ் ஆனது. ஆம், கோமாளிகளைப் போல இவர்கள் செய்த கோணங்கித்தனங்கள், இந்தித் திரைப்பட வணிகத்தைக் கிராமத்து 'டூரிங் டாக்கீஸ்' வரை அழைத்துச் சென்றதே பெரும் சோகம்.

### பகுத்தறிவும் பக்திப் படமும்

1960 கள் மற்றும் 70 களின் தமிழ் திரைப்படத் தரச் சரிவுக்கு மிக முக்கியப் பங்களிப்புச் செய்தது தமிழ் வணிகத் திரைப்பட முதலாளிகள் பலர். ஒருநாளில் லாபகரமான வியாபாரம் கருதி, திராவிட இயக்கத்தவர் திரைப்பங்களிப்புக்குச் சிவப்புக் கம்பளம் விரித்தவர்கள், இப்போது தீவிரமான பக்திப் பட வியாபாரத்தில் இறங்கினர். அதிலும் முன்னணிப் பங்கு, தேவர் பிலிம்ஸ் நிறுவனத்தையே சாருமெனக் கருதுகிறேன்.

80 கள் 90 கள் வரை தொடர்ந்தது இந்தச் சீரழிவுப் பணி. இத்தனைக்கும் நேரடியான அரசியல் சார்பற்ற முதலாளியாக வலம் வந்தவர், பகுத்தறிவு வாதத்துக்குப் பெரும் பகையணியாக இயங்கினார். அவரது திரைப்படங்களில் விலங்குகள் பகுத்தறியும் திறன் மிக்கவையாகவும், மனிதர்கள் பகுத்தறிவற்றவர்களாகவும் உலவியது பெரும் நகைமுரண் என்றே கருதலாம்.

ஆனால், 1970 ஆம் ஆண்டில் வெளிவந்த 'மாணவன்' திரைப்படம் நேரடியாக ஒரு தேசிய வாதப் பார்வை கொண்ட அரசியல் திரைப்படமாக இருந்தது பெரும் ஆச்சர்யம்தான். குறிப்பாக, 1965 - 1970 காலகட்டத்தை மையமாகக் கொண்ட திரைப்படம், மொழிப்போர் குறித்த எந்தத் தடயமுமில்லாமல் கவனமாக எடுக்கப்பட்டிருந்தது. ஆனால், அதே திரைப்படத்தில் அவர்களின் கவனத்தைத் துளைத்துக் கொண்டு காட்சிப்பட்டிருந்தது கழக, கலைஞர் ஆட்சியின் சாதனை இருப்பு.

...படம் விரியும்

---

## ரத்தினங்களும் ரணங்களும்!

இந்தியாவில் பெரும்பான்மை இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கி, அவர்களின் முன்னேற்றத்துக்கு சட்டப்பூர்வ உரிமை வழங்கியவர் வி.பி.சிங். அவருக்கு எதிராகவும், இட ஒதுக்கீட்டுக்கு எதிராகவும் அரசியல் செய்தது பாரதிய ஜனதா கட்சி. அப்போது அதன் முகமாக இருந்தவர் அத்வானி. சமீபத்தில், அவருக்கு 'பாரத ரத்னா' விருது அறிவித்திருக்கிறது ஒன்றிய பா.ஜ.க அரசு. இதன் மூலம், பா.ஜ.க எப்போதுமே பிற்படுத்தபட்ட மக்களுக்கு எதிரான கட்சி என்பது அம்பலமாகி யுள்ளது.

'அரசியலமைப்பின் தந்தை' அம்பேத்கருக்கு 'பாரத ரத்னா' கொடுத்து அதற்குப் பெருமையும் சேர்த்தவர் வி.பி.சிங். ஆனால், அவருக்கு அளிக்கப்படாத அந்த விருது, அத்வானிக்கு அளிக்கப் பட்டுள்ளது. அதே நேரத்தில், பா.ஜ.க.வின் குயுக்தி அரசியலாக, அத்வானிக்கு பாரத ரத்னா அறிவிப்பதற்கு 10 நாட்களுக்கு முன்னர், பீகாரைச் சேர்ந்த சோசலிஸ்ட் தலைவர் கர்பூரி தாக்கூருக்கு பாரத ரத்னா விருது அறிவிக்கப்பட்டது.

இந்தியா முழுமைக்கும் வி.பி. சிங் இட ஒதுக்கீடு வழங்கியதுபோல, பீகாரில் ஓ.பி.சி. பிரிவினருக்கு 26 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கிய பெருமைக்குரியவர் கர்பூரி தாக்கூர். அதற்காக வி.பி.சிங்கைப் போல வலது சாரிகளால் கடும் நெருக்கடிகளுக்கு ஆளானவரும் கூட. அவருக்கு பாரத ரத்னா விருது வழங்கியதன் மூலம், அந்த மாநில முதலமைச்சர் நிதிஷ்குமாரை மீண்டும் தனது வலைக்குள் விழவைக்கச் செய் திருக்கிறது என விமர்சனம் செய்யப்படுகிறது. பா.ஜ.க.வுக்கு எல்லாமே அரசியல் கணக்குதான். அதுவும் கமண்டல அரசியல்!

---

## :ப்ளாஷ்பேக்



### இலக்கியத்தைச் சந்தித்த இயற்பியல்!



ஜெயக்குமார்

1994-ஆம் ஆண்டு கழகம் சிறு நெருக்கடியைச் சந்தித்தது. அதைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுக்க கழகத்தை வலுப்படுத்த, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பயணம் மேற்கொண்டார். 1995-ஆம் ஆண்டு கோவை மாவட்டம், பொங்கலூருக்கு வருகை தந்து, அன்றைய கோவை மாவட்டச் செயலாளர் பொங்கலூர் நா.பழனிசாமி அவர்கள் இல்லத்தில் தாங்கினார். அப்போது கொங்குநாடு கல்லூரியில் இளங்கலை இயற்பியல் படித்து வந்த நான், கழக மாணவர் அணியிலும் தீவிரமாக இயங்கி வந்தேன். அப்படியான தருணத்தில் நானும் என் நண்பர்கள் விஜயகுமார், அரங்கன் ஆகியோரும் தலைவர் கலைஞரை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றோம். இன்றைக்கு இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளராக இதையெல்லாம் எண்ணிப் பார்த்து மகிழ்கிறேன்.

**-மு.ஜெயக்குமார், இளைஞர் அணி அமைப்பாளர், திருப்பூர் தெற்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப் புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண்: 90033-24473 மின்னஞ்சல் : youthwing@dmk.in

---

## கருவூலம்

### அண்ணா இறுதி நிகழ்ச்சி!


**1968-ஆம் ஆண்டு டிசம்பர் 20-ஆம் நாள் சென்னை சிறுவர் அரங்கத்தில் 'மெட்ராஸ் ஸ்டேட்' என்ற பெயர் தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அந்த சிறுவர் அரங்கம்தான் இன்றைய கலைவாணர் அரங்கம். இந்த நிகழ்ச்சிதான் பேரறிஞர் இறுதியாக கலந்து கொண்ட நிகழ்ச்சி. "தமிழ்நாடு என்ற பெயரை எவர் நினைத்தாலும் மாற்ற முடியாது, அதுவரை நானே ஆள்கிறேன் என்று பொருள்" என்றார் அண்ணா.**

### பிழை திருத்தம்!

07.02.2024 புதன்கிழமை வெளியான 'திராவிடப் போராளிகள்' கட்டுரையில், இராணி அண்ணாதுரை குறித்த குறிப்புகளில், "1957 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் முதல்முறையாக தேர்தலில் போட்டியிட்டது. அப்போது முதல் இராணி அம்மையார் தன்னோடு மகளிர் மன்றத் தோழர்களை இணைத்துக் கொண்டு திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களுக்காகப் பிரச்சாரம் செய்தார். ஆயினும், அண்ணா அவர்கள் 1962 ஆம் ஆண்டு தேர்தலில் தோல்வி அடைந்தது இராணி அம்மையாரை மனம் வருந்தச் செய்தது" என்று வந்திருக்க வேண்டும். 1962 ஆம் ஆண்டு என்பது பிழையாக விடுபட்டுவிட்டதால், 'அண்ணா அவர்கள் 1957-ஆம் ஆண்டு தோல்வி அடைந்தார்' என்ற பொருளில் வெளியாகியுள்ளது.

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 383




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131